
August -2018 | Volume-4 | issue-47

for private circulation only

# காட்டாறு

## அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஆகஸ்ட் - 2018 பருவம் - 4 புனல் - 47 தனிச்சுற்று நன்கொடை ரூ 25





# திராவிடச் சூரியன்

பெரியார் நம்பி

தமிழகத்தில் முக்கால் நூற்றாண்டாய் இந்துத்துவாவின் நிம்மதியைக் கலைத்த பெயர், நித்திரையைத் தொலைத்த பெயர், பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை தகர்த்த பெயர் 'தோழர் கலைஞர் மு.கருணாநிதி'. தோழர் பெரியாருக்குப்பின் பார்ப்பனர்களால் இந்து மத வெறியர்களாலும் வெறுக்கப்பட்ட பெயரும் அதே பெயர்தான்.

காரணம் பல இருந்தாலும் உச்ச, உயர் நீதி மன்றங்களில் பார்ப்பனர்களை மட்டுமே My Lord என்று அழைத்து வந்த நிலையில், நாடு முழுவதும் இந்து மனுசாஸ்திரம் எந்த மக்களை ஊருக்கு ஒதுக்குப்புறமாக, சேரியில் தள்ளி, தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்று ஒதுக்கியதோ அந்தச் சேரியில் பிறந்த வரதராசனாரை இந்தியத் துணைக் கண்டத்தில் முதல்முறையாக, சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக அமர்த்தி, பார்ப்பனர்கள் மற்றும் முதல்நிலை, இடைநிலை சாதியினர் யாராக இருந்தாலும் சேரி மனிதனை My Lord என அழைக்க வைத்தார்.

இந்து மனுசாஸ்திரத்தின்படி, பாவ யோனியில் பிறந்தவர்களாக இழிவுபடுத்தப்பட்ட பெண் இனத்தின் விடுதலைக்குத் தோழர் பெரியார் 1929 - இல் செங்கற்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திற்குச் சட்ட வடிவம் கொடுக்க 1989 இல் 'தகப்பன் சொத்தில் பெண்களுக்குச் சரிபங்கு' என்று சட்டம், எட்டாம் வகுப்புவரையாவது பெண்களைப் படிக்க வைக்கட்டும் என்று 'திருமண உதவித் திட்டம்' என்ற முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தினார்.

இதே நோக்கத்தில் RSS ஆட்சி செய்யும் மத்தியப் பிரதேசத்தில் 'கன்னிகாதான யோஜனா' என்ற பெயரில் திருமண உதவித் திட்டம் உண்டு. அதற்கு அந்தப் பெண் திருமண நாள் வரை கன்னித்தன்மையுடன் இருக்கிறார் என்று மருத்துவர் சான்று வழங்க வேண்டும் என்ற நிலை உள்ளது.

உள்ளாட்சி நிர்வாகத்தில், அரசுப் பணிகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடுச் சட்டம் கொண்டுவந்தார். 'பணிக்குச் செல்லும் பெண்கள் அனைவரும் நடத்தை கெட்டவர்கள்' என்று சொன்ன லோககுரு காஞ்சி சங்கராச்சாரி ஜெயந்திரனின் அறிவிப்போடு கலைஞரின் செயல்பாடுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். கலைஞரைப் புரிந்துகொள்ளலாம்.

சாதியின் இறுக்கத்தைப் போக்க வேண்டுமென்றால் அனைத்து மக்களையும் சரிசமமாக வாழ வைக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்விடங்களை "சேரி" என்று தனியாக ஒதுக்கி வைக்கக் கூடாது. அனைத்து மக்களும் வாழும் பகுதிகளில் சேரி மக்களுக்கு வாழ்விடங்கள் அமைத்துத் தரவேண்டும் என்ற தோழர் பெரியாரின் வேண்டுகோளை ஏற்று, அவர் பெயரிலேயே பெரியார் நினைவு சமத்துவபுரங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தி, அந்த இடங்களில் மத அடையாளங்களான கோவில், தேவாலயம், மசூதி என எவற்றையும் அமைக்கக்கூடாது, அதற்குப் பதிலாக நூலகம் பள்ளிக்கூடங்கள்தான் இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றினார்.

சாதி மறுப்புத் திருமணம் புரிவோருக்கு உதவித் தொகையுடன் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமைச் சட்டம். மூன்றாம் பாலினத்தவரைத் 'திருநங்கை' எனப்பெயரிட்டு அழைத்து அவர்களுக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் முன்னுரிமைச் சட்டம் இயற்றி நாட்டிற்கே வழி காட்டினார்.

சமூகநீதி மறுக்கப்பட்ட சமுதாயங்களான இசுலாமிய சிறுபான்மையினருக்கு நாட்டிலேயே முதல்முறையாக 3.5 சத உள்இடஒதுக்கீடு - தாழ்த்தப் பட்டோரில் தாழ்த்தப்பட்டவர்களான அருந்ததியர் மக்களுக்கு 3 சத உள்இடஒதுக்கீடு - வன்னியர் மற்றும் சீர்மரபினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என அறிவித்து உள்ஒதுக்கீடு, முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்த கொங்குவெள்ளாளர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது - உயர் கல்வி பயில கிராமப்புற முதல் பட்டதாரி மாணவர் களுக்கு முன்னுரிமைச் சட்டம் போன்ற அடுக்கடுக் கான திட்டங்களால், சமூக நீதியில் சரித்திரம் படைத்து சாதித்த காரணத்தால் கல்வி வேலை வாய்ப்புகளில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குப் பார்ப்பனர்களின் ஆதிக்கம் அடித்து நொறுக்கப்பட்டது. சமூகநீதியைக் கல்வி, வேலை வாய்ப்புகளில் மட்டும் அவர் கடைபிடிக்கவில்லை. தனது கட்சியிலும் மிகத்தீவிரமாகச் செயல் படுத்தினார். பார்ப்பனர்களைத் தவிர்த்து இசுலாமியர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர் என அனைவருக்கும் உரிய பிரதிநிதித் துவத்தை நடைமுறைப்படுத்தினார். தான் ஆட்சி செய்த அய்ந்து முறையும் பார்ப்பனர் அல்லாதோர் அமைச்சரவையைத்தான் அமைத்தார்.

தோழர் பெரியாரின் இறுதி இலட்சியமான கருவறைத் தீண்டாமையை ஒழிக்க அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் சட்டத்தை இருமுறை நிறை வேற்றினார். அதற்குப் பார்ப்பனர்கள் உச்சநீதி மன்றம் சென்று தடை வாங்கியபோதும் தனது வாழ்நாளின் இறுதிக்கட்டத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில், உயிருடன் இருக்கும்போதே தோழர் பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் நீக்கும் வகையில், “பார்ப்பனர் அல்லாத அர்ச்சகரை தமிழக இந்து அறநிலையத்துறை கோவிலில் நியமிக்கப்பட்டார்” என்ற செய்தி வந்த பிறகுதான் மறைந்தார்.

கன்னியாகுமரி கடற்கரையில் தமிழகத்தின் அவமானமான சங்கரமடமும், கடற்பாறையில் இந்துத்துவ அடையாளமான விவேகானந்தர் தியானமண்டபமும் இருக்கின்ற நிலையில் திராவிடர்களின் இழிவைப் போக்கும் வகையில் ‘நான்கு வர்ணத்தை நானே படைத்தேன்’ என்ற கீதைக்கு மாற்றாக தோழர் பெரியார் முன்னிருத்திய ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று சமத்துவம் பாடிய வள்ளுவருக்கு 133 அடியில் வானுயர்ந்த சிலை அமைத்து ‘இது திராவிடர் மண்’, ‘வள்ளுவர் திராவிடர்களின் அடையாளம்’ என்று உலகிற்கு உணர்த்தினார்.

இந்துத்துவ எதிர்ப்பில் இறுதிநாள் வரை உறுதியாக இருந்தவர். சேதுக்கால்வாய்த் திட்டத்தை ‘இராமர் பாலம்’ என்று முடக்கியபோது, “இராமன் எந்தப் பொறியியற்கல்லூரியில் படித்தான்?” என்று கேள்வி எழுப்பி, இந்தியா முழுவதும் அதிர்வலை களை ஏற்படுத்தினார். அதனால் ஆத்திரமடைந்த இந்துமதவெறிச் சாமியார் ஒருவர், “கலைஞரின் தலைக்கு ஒரு கோடி பரிசு” என அறிவித்தார். தனது கட்சியில் ஒரு மாவட்டச் செயலாளர் காவித் திலகமிட்டு வந்தபோதும், தனது அமைச்சரவையில் இருந்த அமைச்சர் அந்தியூர் செல்வராஜ் தீ மிதித்த போதும் அழைத்துக் கண்டித்த நாத்திகர்.

இப்படி, தமிழகத்தில் முக்கால் நூற்றாண்டு, பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்தும் இந்துத்துவ சித்தாந்தத்தைச் சிதைத்தும் ஆரியப்பகை வென்ற திராவிடச் சூரியன் என்பதால்தான் RSS சித்தாந்தத்தில் ஊறிப்போன பார்ப்பனர்களால் அவரை ஜீரணிக்க முடியவில்லை. தோழர் பெரியாரைப்போலவே 95 ஆண்டுகாலம் நிறை வாழ்வு வாழ்ந்து மறைந்தார். அவரை மெரினாவில் அடக்கம் செய்ய முடியாது என்று தமிழ்நாட்டு பி.ஜே.பி. அடிமை அரசு முடிவு செய்தபோது அதை வரவேற்று, துக்ளக் RSS குருமூர்த்தி என்ற பார்ப்பனர் அகம் மகிழ்ந்தார், நீதிமன்றம் மெரினாவில் இடம் ஒதுக்கியதும் அதைக் கண்டித்தார்.

இது தோழர் கலைஞருக்கு மட்டும் நேர்ந்ததல்ல. தோழர் அண்ணா அவர்கள் இறந்த போதும் எச்.வி. ஹண்டே என்ற பார்ப்பனர் “மெரினாவில் அண்ணாவை அடக்கம் செய்யக் கூடாது. மீறி அடக்கம் செய்தால் என் வீட்டு நாய் இறந்தால் அண்ணாவின் சமாதியில் அடக்கம் செய்வேன்” என்று கொக்கரித்தார். பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணாவின் பெயரில் கட்சி தொடங்கி அரசு அமைத்தபோது அந்த அமைச்சரவையில் இடம்பிடித்த ஒரே பார்ப்பன அமைச்சர் இந்த ஹண்டே தான். அண்ணாவிற்கு மெரினாவில் இடம் தரக்கூடாது என்றவர் அண்ணா திமுக வில் அமைச்சரானார்.

**எதிர்காலத்தில் RSS குருமூர்த்தி போன்ற பார்ப்பனர்கள் தி.மு.க.-வில் நுழையாமல் தடுக்க தோழர் கலைஞரின் இந்துத்துவ எதிர்ப்போடு தி.மு.க. நடைபோட வேண்டும். தோழர் அண்ணா, கலைஞர் கடைபிடித்த திராவிடர் இயக்கச் சித்தாந்தங்களை தி.மு.க. இளைஞரணியினருக்குப் பயிற்சி முகாம் களை அமைத்துக் கற்றுத் தரவேண்டும். திராவிடர் இயக்க வரலாறுகளைக் கற்றுத்தர வேண்டிய பொறுப்பும் கடமையும் தி.மு.க. செயல்தலைவர் தோழர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு. மிகப்பெரிய ஆளுமையான கலைஞர் மறைந்த வேளையில் அவரின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதே தோழர் கலைஞருக்குச் செலுத்தும் சிறந்த மரியாதையாகும்.**

கு.செந்தில்குமார், சேவூர்



# சத்துணவும் ஜாதித் திமிரும்

இந்தியாவின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்களையும், அவரது துணைவியாரையும், இராஜஸ்தான் மாநிலம், அஜ்மீர் மாவட்டம், புஷ்கரில் உள்ள பிரம்மா கோவிலுக்குள் நுழையவே அனுமதிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட சமூகம் என்பதனால் கோவில் படிக்கட்டில் அமர்ந்து பக்தி பூஜை செய்தார். மறைந்த குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்கள் தனக்குத் தீண்டாமை இருந்தது என்று பகிரங்கமாக அறிவித்தார். மறைந்த முன்னாள் இராணுவ அமைச்சர் பாபு ஜெகஜீவன் ராவ் அவர்கள் உத்தரபிரதேசத்தில் சம்பூர்ணாந்தா என்பவரின் சிலையைத் திறந்தார். சிலை தீட்டுப்பட்டு விட்டதாகக் கங்கை நீரைக் கொண்டு சுத்தப்படுத்தினர் பார்ப்பனர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பெரிய உயர் பதவிக்கு வந்தாலும் பெரிய செல்வந்தர் ஆனாலும் ஜாதி தீண்டாமையிலிருந்து தப்ப முடிவது இல்லை. இன்னும் அரசு அலுவலகங்களிலும், ஜாதி பாகுபாடு இருந்து கொண்டு தான் உள்ளது. ஊடக வெளிச்சத்துக்கு வரவு மிகக் குறைவு.

அவிநாசி அரசு ஊழியர் சத்துணவுச் சமையலர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பாப்பாள் அவர்களை இடைநிலை ஜாதியினர் பள்ளியில் சமைக்க விடாமல் வன்கொடுமை நிகழ்த்தினார்கள். அந்த வன்கொடுமையைத் தைரியமாக ஊடகங்களுக்குப் பேட்டி கொடுத்தும், காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் எதிர்த்து நின்றார் பாப்பாள். அவருக்கு நடந்த வன்கொடுமையை அவரே விவரிக்கிறார்.

*நான் பாப்பாள். எனது கணவர் பெயர் பழனிச்சாமி. எங்களுக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர். மகன் 11 ஆம் வகுப்பும், மகள் 10 ஆம் வகுப்பும் படித்து வருகின்றனர். திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அருகில் திருமலைக்கவுண்டன்பாளையம், அருந்ததியர் காலனியில் வசித்து வருகின்றேன். 12 ஆண்டுகளுக்கு முன்பு 03.02.2006 அன்று வருடம் கந்தாயி பாளையம் ஆரம்பத் துவக்கப்பள்ளியில் சமையலர் பணிக்குச் சேர்ந்தேன். அப்பள்ளிக்கு நான் சமையலர் பணிக்குச் சென்ற போது சுப்பிரமணியக்கவுண்டர் என்பவர் என்னை,*

*“சக்கிலிப் புள்ள சோறாக்கிப் போட்டு, குடியானக் கவுண்டப்பசங்க பிள்ளைங்க சாப்பாடு சாப்பிடறதா? சக்கிலிப்பிள்ளையைச் சோறாக்க விட மாட்டேன்”*

*என்று தகராறு செய்தார். அன்றைய BDO அவிநாசி வட்டார வளர்ச்சித்துறை அதிகாரி சண்முகசுந்தரம் எனது ஊரான திருமலைக் கவுண்டன்பாளையத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக்குப் பணி மாற்றினார். எனது ஊரில் உள்ள அப்போதைய குட்டகம் ஊராட்சி மன்றத்தலைவர் பொங்கியம்மாள் கணவர் மேட்டுக்காட்டு பழனிச்சாமியும், இன்னும் நிறையப் பேர், என்னை ஜாதியைச் சொல்லி என்னை சமையல் பணி செய்ய விடாமல் தடுத்தாங்க.*

மீண்டும் சேவூர் அருகேயுள்ள வையாபுரிக் கவுண்டன் புதூரில் உள்ள ஆரம்பத் துவக்கப் பள்ளிக்கு அன்னைக்கு இருந்த BDO ர. பரீத் அகமத்கான் பணி மாத்தி உத்தரவு போட்டாங்க. அங்குள்ள ஆதிக்க ஜாதியினர் அனைவரும் ஜாதியைச் சொல்லித் தரக்குறைவாகத் திட்டி அங்கும் சமையல் பணி செய்ய விடாமல் தடுத்தனர். மீண்டும் சேவூர் அருந்ததியர் காலனியில் இருக்கும் ஒச்சாம்பாளையம் ஆரம்பப்பள்ளிக்குப் பணி மாத்திப் போட்டாங்க. இந்தப் பள்ளியில் தான் தொடர்ந்து 12 ஆண்டு களாக சமையலர் பணி செய்து வருகிறேன்.

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் 29.06.2018 அன்று எங்கள் ஊரான திருமலைக்கவுண்டன் பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளிக்குச் சமையலர் பணிக்கு வழங்கப்பட்ட உத்தரவு (தபால்) போட்டார். கடிதத்தை என்னிடம் தராமலே திருமலைக்கவுண்டன்பாளையத்தில் உள்ள ஆரம்பத் துவக்கப்பள்ளிக்குச் சமையலர் பணியாற்றும்படி BDO மீனாட்சி என்பவர் தன் வாய்மொழி உத்தரவின் பேரில் திருமலைக் கவுண்டன்பாளையத்தில் உள்ள ஆரம்பத் துவக்கப்பள்ளியில் பணி செய்யப் போன போது, என்னைச் சமையலர் பணி செய்யக்கூடாது என்று ஆதிக்க சாதியினர் என்னை பணி செய்யவிடாமல் தடுத்து விட்டனர். இது குறித்து சம்மந்தப்பட்ட BDO மீனாட்சி என்பவரிடம், "என்னை என் சாதியைச் சொல்லி பணி செய்யவிடாமல் தடுக்கிறார்கள்" என்று கூறினேன்.

அதற்கு BDO மீனாட்சி அவர்கள், "BDO அலுவலகப்பணியாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்துள்ளதனால், இப்போது எதுவும் செய்ய முடியாது, கொஞ்ச நாள் பொறு" என்றார். 30.06.2018-ல் எனக்கு கூடுதல் பணிமாற்று உத்தர வினை 16.07.2018-ம் தேதி BDO மீனாட்சி அவர்கள் என்னிடம் வழங்கியதை வைத்து 17.07.2018-ம் தேதியன்று திருமலைக்கவுண்டன்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் உள்ள அமைப்பாளர் தங்கமணியிடம் கொடுத்து நான் சமையலர் பணியைத் தொடங்கினேன்.

17.07.2018-ம் தேதி காலை சுமார் 9.30 மணிக்கு மேட்டுக்காட்டு பழனிச்சாமிக்கவுண்டர், ராஜா மணி கவுண்டச்சி, அப்பார் மனைவி மணியாள், ஏழுர் சக்திவேல், கடைக்காரர் சின்னத்தம்பிக் கவுண்டர், சண்முகம், டிராக்டர்காரர் ஆகியோர் வந்து,

"ஏண்டீ சக்கிலிச்சி வந்து எங்க பசங்களுக்கு சாப்பாடு ஆக்கி போடறதா, நீ சாப்பாடு ஆக்கி போடாதே" என்று பாத்திரங்களையெல்லாம் எடுத்து வீசி எறிந்து என்னை வேலை செய்ய விடாமல் தடுத்தார்கள். என் உடனிருந்து வேலை செய்பவர்கள் எதுவும் பேசவோ, தடுக்கவோ செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள். நானும் மாலை 3 மணி வரை பார்த்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டேன்.

நான் 17.07.2018, 18.07.2018-ம் தேதிகளில் BDO மீனாட்சியிடம் நடந்ததைச் சொன்னேன். 18.07.2018 காலை சுமார் 9.15 மணிக்கு உயர்நிலைப் பள்ளிக்குப் போன போது என் ஊரில் உள்ள அதே நபர்கள் மேட்டுக்காட்டு பழனிச்சாமிக் கவுண்டர், ராஜாமணிக்கவுண்டச்சி, அப்பார் மனைவி மணியாள், ஏழுர் சக்திவேல், கடைக்காரர் சின்னத்தம்பிக்கவுண்டர், சண்முகம், ராமமூர்த்தி ஆசாரி, மாராங்காட்டு ராசு, வண்டிக்காரர் பொன்னுச்சாமி கவுண்டர் மகன், நடராஜன் மனைவி சுமதி, செட்டி வலைத்தான் மகள்கள் இரண்டு பேர்கள், இன்னும் சில அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர்கள் சுமார் 75 நபர்கள் கொண்ட கும்பல் ஒன்று திரண்டு வந்து என்னை,

"இந்த சக்கிலி முண்டை காட்டு வேலைக்குப் போய் தொலைய வேண்டியது தானே? இவள் வந்து சாப்பாடு ஆக்கிப் போட்டு நம்ம புள்ளைங்க திங்கறதா? இவளை எங்கேயும் வேலை செய்ய விடக்கூடாது. ஏன் தோட்டத்து காட்டு வேலைக்கு போய் தொலைய வேண்டியது தானே?"

என்று சொல்லுக்குச் சொல் எல்லோரும் என்னைச் சாதியைச் சொல்லி மிகவும் கேவலமாகத் திட்டி,

"இத்தனை பேர் இப்படி திட்டுகிறோமே, கொஞ்சம் கூட வெட்கம், மானமில்லையா டீ, த்தூ.." என்று என் மீது காரித்துப்பி,

"ரோசமிருந்தா நீ இந்த உயிரை வெச்சுட்டு இந்தப் பொழப்புப் பொழைக்கறதுக்குப் பதிலா தூக்குப் போட்டு சாகலாமில்லையா டீ"

என்று என்னை வேலை செய்வதைத் தடுத்து, சாதியைச் சொல்லி இழிவுபடுத்தி, கேவலப் படுத்தி என்னை "உயிரோடு இருக்காதே, தற்கொலை செய்து சாகு டீ" என மிகவும் ஆக்ரோஷமாக திட்டி பள்ளிக்கூடத்தை, காலை 9.00 மணிக்குப் பூட்டு போட்டு விட்டார்கள். பள்ளிக் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்கு வெளியே நின்று கொண்டு இருந்தனர். காலை 11.30 மணிக்கு அவிநாசியிலிருந்து வந்த கல்வி அதிகாரிகள் பள்ளிக்கதவைப் பூட்டியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, பள்ளிக்கதவைத் திறந்து விட்டனர்.

ஆனாலும், அங்கிருந்த கவுண்டர்கள், "எங்கள் பிள்ளை SC பாப்பாள் சமைத்த உணவை சாப்பிடுவதா என சொல்லி, சாப்பிட மாட்டார்கள்" என தலைமையாசிரியடம் எழுதிக் கொடுத்து விட்டு 29 குழந்தைகளைக் கூட்டி சென்று விட்டனர். டி.வி. நிருபர்கள் வீடியோ எடுத்து டி.வி-யில் போட்டார்கள். அன்று இரவு சேவூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

இவ்வளவு நடந்த பிறகும் தலைமை ஆசிரியர் சசிகலா, அமைதியாக ஒன்றும் தெரியாதவர் போல் இருந்து விட்டு, பாப்பாள் அவர்களிடம், "உனக்கு பழைய இடத்துக்கு மாறுதல் வந்து விட்டது, BDO - விடம் பேசி மாறுதல் வாங்கி விட்டேன்" என்று தன்னுடைய செல்போனுக்கு Whatsapp-ல் தகவல் வந்து விட்டதாக இடைநிலை ஜாதியினருக்குக்

காட்டிவிட்டு, பாப்பாளைப் பார்த்து நீ பழைய இடத்துக்கு போய் விடு என்றும், உனக்கு ஆர்டர் வாங்கிவிட்டேன் என்றும் கூறி உள்ளார்.

இடைநிலை ஜாதியினர் அரசு அலுவலர்களுக்கு நெருக்கடி கொடுத்து ஒரு நாளில் உத்தரவு போட முடிகிறது. ஜாதி ஆதிக்கம் அனைத்து துறைகளிலும் உள்ளது. 19.07.2018 காட்சி ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் செய்தி பார்த்த பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள், மாவட்ட, ஒன்றியப் பொறுப்பாளர்கள் திருமலைக் கவுண்டன்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி முன்பு திரள ஆரம்பித்து விட்டனர். பெரியார், அம்பேத்கார், மார்க்சிய இயக்கங்கள், கட்சிகள், தீண்டாமை ஒழிப்புக்கான கூட்டமைப்பு உருவாக்கி அரசுக்கு நான்கு கோரிக்கைகளை வைத்தனர்.

**அரசுப்பள்ளி தீண்டாமை ஒழிப்புக்கான கூட்டமைப்பு கோரிக்கைகள் :**

1. திருமலைக்கவுண்டன்பாளையம், அரசுப்பள்ளி சத்துணவுச் சமையலர் பாப்பாள் அவர்களை தீண்டாமையின் காரணமாகப் பணியிடம் மாற்றம் செய்ததை உடனடியாக ரத்து செய்து திருமலைக் கவுண்டன்பாளையம் அரசுப்பள்ளியில் பணி நியமனம் உடனடியாகச் செய்ய வேண்டும்.
2. சேவூர் காவல்நிலையத்தில் திருமலைக்கவுண்டன் புதூர் அரசுப்பள்ளி சமையலர் பாப்பாள் அவர்களால் அளிக்கப்பட்ட தீண்டாமை வன்கொடுமை புகார் மீது SC/ST வன்கொடுமைத் தடுப்புத் திருத்தச் சட்டம் 2015-ன் படி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. சத்துணவுச் சமையலர் பாப்பாள் மீது தீண்டாமையின் காரணமாகத் தொடர்ந்து பணியிட மாற்றம் செய்யும் அதிகாரி, அவிநாசி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புத் திருத்தச்சட்டம் 2015 ன் படி கல்வி நிறுவனங்களில் சாதியப் பாகுபாடு பார்த்தல் பிரிவு 3(1) (Qi) (D) பிரிவின்படியும், பொதுமக்கள் சட்டப்படி செய்யும் தொழிலைத் தடுத்தல் பிரிவு 3(1) (Qi) (E) சட்டத்தின் படியும், சமூகப் பொருளாதாரப் புறக்கணிப்புக்கு ஆளாகுதல் பிரிவு 3(1) (QC) அரசுப்பணியாளர் பாதிப்புக்கு உள்ளாகும் பொது பிரிவு 3(2) (viii) பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்திட வேண்டும்.
4. அரசுப் பணியாளராக இருந்து தனது கடமையைப் புறக்கணித்து தீண்டாமையை ஆதரித்து பணியிட மாறுதல் வழங்கிய வட்டார வளர்ச்சி அலுவலர் மீது வன்கொடுமைத் திருத்தப்பட்ட சட்டம் 2015 பிரிவு 4-ன்படி நடவடிக்கை வேண்டும்.

*19.07.2018 மதியம் 2.00 மணிக்கு சேவூர் கைகாட்டியில் சாலை மறியல் நடத்தப்பட்டது. 30 நிமிட சாலை மறியலுக்கு பின்பு மாவட்ட துணை ஆட்சியர், மாவட்ட கல்வி அதிகாரி, மாவட்டத் துணைக் காவல் கண்காணிப்பாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் முன்னிலையில் சேவூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்று, சமையலர் பாப்பாள் அவர்களுக்கு திருமலைக் கவுண்டன்பாளையத்தில் பணி உத்தரவு வழங்கப் படும் என்று கூறி, 18.07.2018 அன்று ஒச்சாம் பாளையத்திற்கு பணி மாறுதல் வழங்கப்பட்டதை ரத்து செய்தார் மாவட்டத் துணை ஆட்சியர்.*

*சேவூர் காவல்நிலையத்தில் வன்கொடுமை நிகழ்த்தியவர்கள் மீது வன்கொடுமை வழக்கு பதிவு செய்ய உத்தரவு வழங்கினர். சேவூர் காவல்நிலையம் முன்பு அனைத்து இயக்கக் கட்சிப்பொறுப் பாளர்கள், பொதுமக்கள் காத்திருந்தனர். இரவு 9.00 வரை முதல்தகவல் அறிக்கை வழங்காமல் கால தாமதம் செய்தது காவல்துறை. சேவூர் காவல் நிலையம் முன்பு மீண்டும் சாலை மறியல் செய்து, பின்னர் சேவூர் கைகாட்டியில் சாலை மறியல் செய்த பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பெற முடிந்தது.*

*20.07.2018 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தீண்டாமை ஒழிப்புக்கான கூட்டமைப்பு சார்பாகக் கோரிக்கை விண்ணப்பம் கொடுக்கச் சென்றோம். ஆட்சியர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. வன்கொடுமைத் தடுப்புத் திருத்தச் சட்டம் 2015 ன் படி குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*திருமலைக்கவுண்டன்பாளையத்தில் வசித்து வரும் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கக் கோரியும் விண்ணப்பம் கொடுக்கப்பட்டது.*

*தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஒருங்கிணைப்பில் 23.07.2018 திங்கள் மாலை 5.00 மணியளவில் சேவூர் கைகாட்டியில் வன்கொடுமைத் தடுப்புத் திருத்தச் சட்டம் 2015 ன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்ட நபர்களைத் தாமதிக்காமல் உடனே கைது செய்யவும்.*

*திருமலைக்கவுண்டன்பாளையம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கூட்டமைப்புத் தோழர்கள் கண்டன உரை யாற்றினர். இயக்கம், கட்சித் தோழர்களும், பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.*

**சமூகநீதிக்கட்சியின் பணி**

*24.07.2018 அன்று 8 பேரைக் காவல்துறை கைது செய்தது. சமூகநீதிக்கட்சித் தலைவர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் புதுடெல்லியில் உள்ள தேசியத் தாழ்த்தப்பட்டோர் ஆணையத்திற்குப் புகார் அளித்தார். வன்கொடுமை தொடர்பாக 3 நாட்களுக்குள் உரிய விளக்கம் அளிக்குமாறு திருப்பூர் மாவட்ட நிர்வாகத்துக்குத் தேசியத் தாழ்த்தப்பட்டோர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. திருப்பூர் மாவட்ட கலெக்டர், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு, மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி ஆகியோர் 30.07.2018 அன்று தேசியத் தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.*

*தேசியத் தாழ்த்தப்பட்டோர் ஆணையர் புதுடில்லி அலுவலகத்தில் 30.07.2018 அன்று ஆணையத் துணைத்தலைவர் எல். முருகன் விசாரணை நடத்தினார். விசாரணையில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் முதன்மைக் கல்வி அதிகாரி சாந்தி, போலீஸ் துணை சூப்பிரண்டு பரமசாமி ஆகியோர் விளக்கம் அளித்தனர். தோழர் பாப்பாள் தரப்பு வாதங்களை, சமூகநீதிக்கட்சித் தலைவர் பன்னீர்செல்வம் முன் வைத்தார். 30 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்யவும், 60 நாட்களில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவும், பாப்பாளைத் திருமலைக்கவுண்டன்பாளையம் பள்ளியில் பணி நிரந்தரம் செய்யவும், BDO மீனாட்சி மீது துறை ரீதியான நடவடிக்கையும், வன் கொடுமைத் திருத்தச் சட்டம் 2015 ன் கீழ் வழக்குப் பதிவு செய்யவும், குற்றவாளிகளை உடனே கைது செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

*பாப்பாள் அவர்களுக்கு நடந்த வன் கொடுமைக்கு எதிராக தி.மு.க. செயல்தலைவர் ஸ்டாலின் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கீ. வீரமணி, விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் கண்டன அறிக்கை வெளியிட்டனர்.*

*அவிநாசி திருமலைக்கவுண்டன்பாளையத்தில் பாப்பாள் அவர்கள் இல்லத்தில் தலித் விடுதலைக் கட்சிப் பொதுச்செயலாளர் செங்கோட்டையன், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி பொதுச் செயலாளர் சாமுவேல் ராஜ், ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான் ஆகியோர் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், சமூக நீதிக்கட்சித்தலைவர் பன்னீர்செல்வம் ஆகியோர் அவிநாசி உடுப்பி ஹோட்டலில் பாப்பாள் அவர்களைச் சந்தித்தனர்.*

*தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருஷ்ணன், மருத்துவர் எழிலன் ஆகியோர் ஜாதிவெறியர் களுக்கு எதிராக, தோழர் பாப்பாள் இல்லம் சென்று விருந்துண்ணும் நிகழ்வை நடத்தினர். கோவை, திருப்பூர் மாவட்டங்களின் த.பெ.தி.க தோழர்கள் மற்றும் காட்டாறு குழு தோழர்களுக்கு பாப்பாள் இல்லத்தில் பாப்பாள் உணவு சமைத்து வழங்கினார்.*

**பாப்பாளுக்கு ஆதரவாக சாலை மறியல், ஆர்ப்பாட்டம் நடத்தியோர்:**

*ஆதித்தமிழர் பேரவை விடுதலைச் செல்வம், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டச் செயலாளர் நந்தகோபால், தேசியச் சிறுத்தைகள் கட்சி மாநிலச்செயலாளர் மருத்துவர் இராதா கிருஷ்ணன், காட்டாறு குழு செந்தில்குமார், இரமேஷ், முதலிபாளையம் செல்வராஜ், அவிநாசி நீலமலை முத்துச்சாமி, தலித் விடுதலைக் கட்சி ஆறுமுகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பழ. சண்முகம், APR மூர்த்தி, இரா. கருப்புசாமி, சிவக்குமார், ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவைத் தலைவர் அ.சு. பாவித்தன், தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர் திருப்பூர் முத்துக்குமார், சமூக நீதிக்கட்சி மாநிலப் பொறுப்பாளர் சக்தி இராஜேந்திரன் போன்ற ஏராளமான தோழர்களின் கூட்டு முயற்சியால் பாப்பாள் அதே பள்ளியில் சமையலர் பணியில் இணையவும், வன்கொடுமை வழக்குப் பதிவு செய்து இப்போது 8 குற்றவாளிகள் கைதுசெய்யப்படவும் காரணம் அனைவரது கூட்டு முயற்சியே.*

**அரசுக்குப் பரிந்துரைகள்**

1. வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் 2015 ன் படி 60 நாளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து, 60 நாளில் நீதிமன்ற விசாரணை நடத்தி, 120 நாளில் வழக்கை முடிக்க வேண்டும்.
2. திருமலைக்கவுண்டம்பாளையம் பள்ளித் தலைமை ஆசிரியர் சசிகலா இடைநிலை ஜாதி யினருக்கு ஆதரவாக இருந்துள்ளார். அவர் மீது வன்கொடுமைத்திருத்தச் சட்டம் 2015 பிரிவு 4-ன்படி வழக்கு பதிவு செய்ய வேண்டும்.
3. அங்கன் வாடி, சத்துணவுச் சமையலர் பணிக்கு இரண்டு பேரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருக்குமாறு பணி நியமனம் செய்ய வேண்டும்.
4. சத்துணவு ஊழியருக்கு 3 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பணி நியமனம் வழங்க வேண்டும் என்று அரசு விதி உள்ளது. 12 ஆண்டுகளாக சேவூர் ஒச்சாம்பாளையத்தில் பணி நியமனம் வழங்கிய அனைத்து BDO-க்கள் மீதும் வன்கொடுமைத் திருத்தச் சட்டம் 2015 பிரிவு 4-ன்படி வழக்கு பதிவு செய்ய வேண்டும்.
5. தமிழகப் பள்ளி கல்லூரிகளில் தோழர் பெரியார், தோழர் அம்பேத்கரின் ஜாதி ஒழிப்புக் கருத்துக்கள் அடங்கிய நூல்களைத் துணைப்பாடங்களாக வைக்க வேண்டும்.
6. தீண்டாமை வன்கொடுமைகளுக்குப் பயிற்சிக் களங்களாக இருக்கும் கிராமத் திருவிழாக்களைத் தடைசெய்ய வேண்டும்.
7. அருந்ததியர் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து அவர்களின் மனதில் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் அண்ணன்மார் திருவிழாக்களுக்கு எதிரான பரப்புரையை, அரசாங்கமே திராவிடர் இயக்கங்களை வைத்து நடத்த வேண்டும்.

டாக்டர் ஜெயராமன், அபெகா பண்பாட்டு இயக்கம்




# ‘ஆடி’ கழிவு மாதமா?

ஆடி மாதம் சிறப்பான மாதமா? அல்லது நல்ல காரியங்கள் செய்யக்கூடாது என்று தள்ளி வைக்கப்பட்ட மாதமா? இந்தக் கேள்வியில் இருக்கும் முரண்பாடுதான் இன்றைய நடைமுறையாகவும் இருந்து வருகிறது. ஒரு பக்கம் நல்ல காரியங்கள் செய்யக்கூடாதெனத் தடை செய்யும் போக்கு, மறுபுறம் பொருளாதார ரீதியான விற்பனைப் பெருக்கம், தள்ளுபடி விற்பனை. இவ்வாறான முரண்பாடுகளுக்கிடையில் ஒரு மாதம் படும்பாடு... அதிசயமானதாய் இருக்கின்றது. அப்படியென்ன காரணம் கிடைத்தது மக்களுக்கு! ஆடி மாதத்தில் நல்ல காரியங்கள் செய்யக் கூடாதென்பதற்கு? மேலும், யார், எதற்கு, எப்போது முதல் இந்த ஆடிமாதத்தை நற்காரியங்கள் செய்யக்கூடாத மாதம் எனப் புறக்கணித்தார்கள்?

பொதுவாக ஆனி மாதத்திற்கு என்ன சிறப்பென்றால், அடுத்து ஆடி மாதம் துவங்கப் போகின்றது என்பது தான். ஆடி மாதம் துவங்கப் போகின்றது என்பதால் ஏறத்தாழ ஆனிக்குள் எவ்வளவு திருமணங்கள் முடிக்க முடியுமோ அவ்வளவு செய்து விடுகிறார்கள். ஆடி மாதத்தில் திருமணம் போன்ற எந்த நல்ல காரியங்களும் நடத்துவது என்பது பழக்கத்தில் கிடையாது. ஆடி மாதம், மாதங்களில் கெட்ட மாதம் என்ற திடீர்ப் பழக்கம் கலாச்சாரமாகவே மாறிவிட்டது. ஆடி மாதத்தில், திருமணங்கள் பற்றிப் பேசுவதுகூடக் கிடையாது. பேசினாலே அது தவறான காரியத்திற்கு ஆரம்பமாகி விடும் என்கிறார்கள். நல்ல காரியத்தை இம்மாதத்தில் தொடங்கவே கூடாது. இது இன்றைய தமிழர் கலாச்சாரங்களில் ஒன்றாகவே வந்து விட்டது. சொந்த வீட்டிற்கோ அல்லது வாடகை வீட்டிற்கோ இந்த மாதத்தில் குடிபோகக் கூடாது!

நல்லவைகளைச் சிந்திக்கும் எல்லா நாட்களும், உழைக்கும் எல்லா நாட்களும் நல்ல நாட்களே! உழைக்காமல் பணம் சேர்க்க நினைப்பவர்களுக்கு மட்டும்தான் நல்ல நேரம், நல்ல நாள், நல்ல மாதம் எல்லாமே! எனக்கு எல்லா மாதமும் உழைக்கும் மாதம்தான். எனவே தான் நான் இதையெல்லாம் நம்புவது கிடையாது.

“மேலும் ஆடிமாதம் கெட்ட மாதம் என்ற சிந்தனையும், பழக்கமும் சமீபத்தில் ஏற்பட்டதா?” இப்போது தான் ஆடி மாதத்தை தவிர்க்கின்றார்களா என்றால், இல்லை! ஆடி மாதத்தை நல்ல காரியங்களுக்காகத் தவிர்த்தது என்பது இன்று நேற்றல்ல, அது காலம் காலமாகத் தமிழ்நாட்டில் இருந்து வருகின்ற ஒரு நிகழ்வு. அன்று தவிர்த்ததற்கான காரணம் அறிவுப்பூர்வமானது. தேவையின் பாற்பட்டது. ஆனால் இன்று தவிர்ப்பது தேவையில்லாதது. பகுத்தறிவிற்குப் புறம்பானது. வெறும் சடங்காகி ஒரு மூடப்பழக்கமாகி, உழைக்கும் மக்களின் சிந்தனையை மழுங்கடித்து விட்டது பார்ப்பனீயம்.

ஆடி மாதம் என்பது பார்ப்பனீயம் சித்தரிப்பது போல மோசமான மாதம் அல்ல. ‘புனிதமானது என்றும் நாம் சொல்லவில்லை!’ மற்ற மாதங்களுக்கு என்ன மதிப்பு உள்ளதோ அது தான் இதற்கும், அவ்வளவேதான் நம் வாதம். ஆனால் இது மோசமானது என்று சித்தரிக்கப்பட்டு வருவது முற்றிலும் தவறானதாகும். சிந்தித்துப்பார்த்தால் இதன் காரணம் புரியும். தமிழகத்தைப் பொருத்த வரை (சித்திரை முதல் பங்குனி வரை தமிழ்நாட்டில் உள்ள மாதங்கள். வேறு மாநிலங்களில் இந்த மாதங்கள் வழக்கத்தில் இல்லை) ஆடி மாதத்தில் இயன்ற வரை நல்ல காரியங்கள் செய்வதும் இல்லை, தொடங்குவதும் இல்லை. இதைப் பற்றித் தான் நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளோம்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமானது உணவு. அந்த உணவை உற்பத்தி செய்வதற்கு நம் மூதாதையர்கள் தெரிவு செய்த மாதம் ஆடி. (‘ஆடிப் பட்டம் தேடி விதை’ என்ற முதுமொழி இன்னமும் உண்டு) காய்கறித் தோட்டம் போடுபவன் கூட ஆடியில்தான் விதைக்கிறான். மறு முளைப்புத் திறன் கொண்ட விதைகள் உடைய பயிர்கள் எல்லாம் ஆடியில்தான் இன்னமும் பயிர் செய்யப்படுகின்றது. அப்படி மனிதனின் உணவுத் தேவையை உற்பத்தி செய்யத்துவங்கும் மாதம் ஆடியாக உள்ள போது அது எப்படி கெட்டமாதமாக இருக்க முடியும்?

அடுத்தது, மனிதன் மனிதனாக வாழ வேண்டுமென்றால் அறிவு பெற வேண்டும். ‘மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு’ என்றார் தந்தை பெரியார். உணவு மனிதனுக்கு எப்படி வாழ்வாதாரமாக உள்ளதோ அதைவிட, அவசிய மானது அறிவு. அந்த அறிவு என்பதைக் கல்வியின் மூலம் பெறுகிறோம். அந்தக் கல்வியைக் கற்க நாம் தொடங்குவது ஆடி மாதத்தில் தான். ஆடி 18 ஆம் தேதி ஆடிப்பெருக்கு. விவசாயம் தொடங்குவதற்கு ஏதுவாக காவிரி ஆற்றில் புதுப்புனல் பெருக் கெடுத்து வரும். புதுப்புனல் பெருக்கெடுத்து வருவது போல் அந்த நாளில் படிக்கத் தொடங்கினால் கல்வியும் பெருக்கெடுத்து வரும் என்று நம் முன்னோர்கள் நம்பினார்கள்.

எனவே அந்த தினத்தில் குழந்தைகளை இன்றும் கல்விக் கூடங்களில் சேர்க்கின்றார்கள். ஆடி 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமைகளில் வந்தால் தொடக்கப் பள்ளிக்கூடங்களில் இன்றும் கூட மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகூட வேலை நாளாகக் கருதப் படுகிறது. இது காலம்காலமாக நடந்து வருகின்ற நிகழ்ச்சி. என்னை புதுக்கோட்டை காந்திநகர் பள்ளியில் என் தந்தை 1 ஆம் வகுப்பில் சேர்த்து விட்டதே ஆடி 18ல் தான்.

தமிழ்நாடு, விவசாயத்தையே முழுமுதற் தொழிலாகவும், பொருளாதாரமாகவும் நம்பி யிருக்கும் தேசம். அதற்கான புவியியல் அமைப்பும், விவசாயத்திற்கு சாதகமாகவே இருந்தது. அந்த விவசாயத்தை ஆடி மாதத்தில் துவங்கி விடுவதால் மக்கள் அனைவரும் முழுமையாக விவசாயத்திற்குள் தங்களைப் பிணைத்துக் கொள்வார்கள். விவசாயத்தில் முழுமையாக ஈடுபடாத மேல்தட்டு வர்க்கம் கூடக் கீழ்நிலையில் உள்ள விவசாயிகளின் உடல் உழைப்பையே முழுமையாக நம்பி இருப்பதால், அவர்களும் ஆடிமாதத்தில் எந்த நிகழ்ச்சிகளையும் வைத்துக் கொள்வதில்லை. மேலும் அந்நாளைய விவசாயம் என்பது, உழைப்பைப் பணமாகப் பெறாத காலம்.

அதாவது நமது வயலில் பத்து உழவு ஏர் தேவையென்றால், ஊரில் உள்ள இதர 10 வீட்டு ஏர்களும் நமக்கு வந்து உழுது கொடுப்பார்கள். கூலி கிடையாது, மாறாக அவர்கள் வீட்டு உழவுக்கு நமது வீட்டு ஏர் போகும். இப்படியேதான் அன்றைய விவசாயம் நடந்து வந்தது. நாற்று நட வீட்டுக்கு ஒருவர் அண்டை வீட்டாருக்குச் செல்வதும், அறுப்பதற்கும். அடிப்பதற்கும் இப்படி ஒவ்வொன்றுக்கும் விவசாயிகள் ஒருவரை ஒருவர் சார்ந்து தான் விவசாயம் செய்து வந்தனர். வாய்க்கால் வெட்டுவதாக இருந்தால் வீட்டுக்கு ஒருவர் மண்வெட்டியுடன் செல்ல வேண்டும். ‘கூலி முறை’ விவசாயம் வருவதற்கு முன்னால் இருந்து வந்த விவசாய முறை இது.

இப்படி இருந்த விவசாயிகள் காலப்போக்கில் ஆரியர்களின் வருகையினால், உழைக்கும் மக்களின் விவசாய நிலங்கள் அனைத்தையும் அதிகாரத் தினாலும், சூழ்ச்சிகளினாலும் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாக்கினர். இந்த மக்கள் நிலமற்றவர்களாக ஆக்கப்பட்டனர். காடுகளையும், புதர்களையும் அழித்து விவசாய நிலமாக மாற்றி, உழுது பயிர் செய்து, ‘உறவு முறை’ விவசாயம் செய்து வாழ்ந்து வந்த மக்கள், நயவஞ்சகப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியினால், தங்கள் உயிரினும் மேலாகப் பாதுகாத்து வந்த நிலங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்தனர்.

இறுதியில் நிலமற்ற கூலி விவசாயிகளாக மாற்றப்பட்ட இம்மக்கள், தங்களின் நிலத்திலேயே, பார்ப்பன நில உடைமையாளர்களுக்குத் தினக்கூலி களாக மாற்றப்பட்டனர். ‘உறவுமுறை விவசாயிகள்’ ‘கூலி விவசாயிகளாக’ இவ்வாறுதான் மாற்றப் பட்டனர். உறவுமுறை விவசாயம் இருந்த வரை விவசாயப்பணிகள் என்பது இம்மக்களிடம் தனித் தனியாக இல்லை. ஒன்றாகவே இருந்தது. எனவே தான் இவர்களால் இந்த ஆடி மாத காலத்தில் விவசாயம் தவிர்த்த எந்த நிகழ்ச்சிகளையும் தவிர்த்து வந்தனர். விவசாயிகளின் விழாக்கள் என்பது அந்த நாளில் இரண்டு தான். ஒன்று குடும்ப வைபவங்கள் மற்றது கோவில் திருவிழாக்கள். இப்போதும் கூட கோவில் திருவிழாக்கள் ஆடி மாதத்தில் எந்த கிராமத்திலும் நடைமுறையில் இல்லை.

ஆடி மாதத்தில் திருமணம் போன்ற நிகழ்வுகள் அந்நாளில் ஒத்தி வைத்ததற்கு இது தான் காரணம். மேலும் இதற்குள்ளேயே மற்றொரு செய்தியும் அடங்கியுள்ளது. அந்நாளைய கோவில் திருவிழாக் களாக இருந்தாலும், குடும்ப வைபவங்களாக இருந்தாலும் எப்படி நடைபெறும் தெரியுமா?

அந்நாளைய திருமணம் என்பது இப்போது நகரங்களில் நடைபெறும் ஒப்பந்தமுறை (Event Contract) திருமணம் போல் கிடையாது. இப்பொழு தெல்லாம் நகரத்துத் திருமணங்கள் அனைத்திற்கும் ஒப்பந்தக்காரர்கள் இருக்கின்றார்கள். பெண் பார்ப்பது, மாப்பிள்ளை பார்ப்பது என்பது மட்டும் தான் பெற்றோர்கள் வேலை. அதுகூட தற்போது திருமணத் தரகர்கள், இன்டர்நெட் என வந்து விட்டது.

அந்நாளில், திருமணம் என்ற நிகழ்ச்சிகள் வரும்போது ஒரு கிராமத்தில், ஊரில் உள்ள உறவினர்கள் அனைவருமே இணைந்து செயல்பட்டு வந்தனர். இப்படி அனைத்து உறவினர்களும் நண்பர்களும் திருமண வேலைகளில் பங்கெடுத்து வந்ததனால், விவசாயத் துவக்க மாதமான ஆடியில் குடும்ப நிகழ்வுகளை நடத்தினால், விவசாயப் பணிகள் முற்றாகப் பாதிக்கப்படும் என்ற ஒரே காரணத்திற்காக ஆடி மாதத்தில் விழாக்கள் நடத்து வதை அறிவுபூர்வமாகவும், சூழ்நிலைக் காரணங் களினாலும் தவிர்த்து வந்தனர் நம் முன்னோர்கள்.

ஆனால் காலம் மாற, மாற மனிதனின் அறிவு என்பது சாத்திர, சம்பிரதாயங்களால் பார்ப்பனீயச் சிந்தனைகளால் பின்னோக்கியே செல்கின்றது.

அதனால் தான் தேவை கருதி தற்காலிகமாகத் தள்ளி வைக்கப்பட்ட நிகழ்வுகளை, சரியாகப் புரிந்து கொள்ளாததோடு, அறிவுக்குத் தொடர்பற்ற வகையில் சடங்குகள், சம்பிரதாயங்கள் என்று கூறி ஒரு மாதத்தையே கெட்ட மாதம் என்று மாற்றி விட்டார்கள் பார்ப்பனப் புரட்டுப் புரோகிதர்கள்.

ஆடி மாதத்தில் திருமணங்களைச் செய்யக் கூடாது என்பதால், அவசர அவசரமாக ஆனி மாதத்தில் திருமணங்கள் ஊரெங்கும் நடந்தேறு கிறது. அதனால்தான் எங்கு பார்த்தாலும் நெருக்கடி யான திருமணக் காட்சிகளாகத் தெரிகிறது. ஆனால் இந்தச்செயல்பாட்டிற்கு ஏதேனும் அர்த்தமுள்ளதா என்று சிந்தித்துப் பார்த்தால் ‘இல்லை’ என்ற பதில் தான் உண்மையானது. அன்றைய தேவைக்கும், அவசியத்திற்கும் அறிவுப்பூர்வமாக சிந்தித்துச் செயல்பட்டு வந்த நம் முன்னோர்களின் பழக்கங்களை இன்று ஏன்? எதற்கு? எப்படி? என்று சிந்திக்காமல் நமது சூழ்நிலைக்கு, ஏற்றார்போல் பின்பற்றாததின் விளைவே இந்தத் தேவையற்ற நெருக்கடி நிலை!

ஒரு மாதத்தின் 30 நாட்களும் கெட்டது என்று பதிவு செய்துவிட்ட நிலையும் ஆகும். இது வரலாற்றை அப்படியே தலைகீழாகப் புரட்டிப் போடும் எதிர்மாற்றம் இல்லையா? கண்மூடித் தனமாக கேள்வி கேட்காமலும் அதன் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமலும் செயல்படும் அடிப்படை அறிவில்லாத இந்நிலை நாகரீகத்தின் பின்னோக்கிய வளர்ச்சி என்று சொல்வதுதானே சரியாக இருக்கும்.

இதற்குக் காரணம் என்ன? எதன் வழித் தோன்றல்கள் இவை? ஆரியம், பார்ப்பனீயம் என்ற ஆதிக்கச்சக்திகளின் ஆட்டுவிப்புத்தன்மையும், கடவுள், சமயம் என்ற பெயரால் கேள்வி கேட்கக் கூடாத நிலையை உருவாக்கி அதன் மூலம் தான் விரும்பும் எதையும் எதிர்ப்புகளின்றி சாதித்துக் கொள்ளும் தந்திரமும் தான் காரணம்.

அப்படியே இது கெட்ட மாதம் என்பதாகக் கொண்டால் இது கழிவு மாதம் என்றால் இதற்கு முன் வாங்கிய பொருட்கள் எல்லாம் இந்த மாதத்தில் விற்றுத் தீர்த்து விட்டுத்தானே புதுப்பொருட்களை அடுத்த வியாபாரத்திற்கு வாங்குகிறார்கள். ஆடிக்கழிவு என்று இந்த உழைக்கும் மக்களை ஏமாற்றி அவர்கள் தலையில் பழைய பொருட்களைக் கட்டிவிட்டு லாபம் சம்பாதிக்கின்றார்கள் வியாபாரிகள், அவர்களுக்கு இது கெட்ட மாதமா? இல்லையே!

இது விவசாயிகளுக்கு மட்டுமல்ல வியாபாரி களுக்கும் கூட அமோகமான மாதமாக இருக்கும் போது மக்கள் ஏன் இதைப் புறக்கணிக்கத் துவங்கு கிறார்கள்? ஒருபுறம் மூடத்தனமாகப் புறக்கணிப்பு, மறுபுறம் அதனையே கழிவு வியாபாரம் ஆக்கி லாபம் பெருக்கிக் கொண்ட வியாபாரத்தந்திரம். இரண்டுக்குமிடையே நமது பகுத்தறிவு என்ன செய்கிறது. எதைப் பகுத்துப்பார்த்து முடிவு செய்கிறது? சம்பிரதாயம், சடங்கு, சாஸ்திரம் என்ற மாயைக்குள் நமது விஞ்ஞானிகளும் மாட்டிக் கொண்டு நல்ல நேரம் பார்த்துத்தான் செயற்கைக் கோளினை வான்வெளிக்கு அனுப்புகின்றார்கள்! அங்கேயும் பார்ப்பனீயம்தான் ஆதிக்கம் செய்கின்றது.

அப்படியானால் நாம் மூளையற்றவர்களா? மூடர்களா? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. மூடர்களாக முட்டாள்களாக நாம் ஆக்கப்பட்டு விட்டோம். இருபது நூற்றாண்டுகால அடிமைத் தனம் நம் மூளையை அழுக்கேற்றி வைத்துள்ள விதம், நம்மை இவ்விதம் ஆக்கிரமித்துள்ளது. இன்று நாம் எதையும் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்களாக மாற்றப்பட்டு விட்டோம்.

இதனை மாற்றத்தான், நம் அறியாமையை உணர்ந்து அதனைப் போக்க முயன்றார்கள், அயோத்திதாசப் பண்டிதர், பாபாசாகேப் டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர், ஜோதிராவ் பூலே, தந்தை பெரியார் போன்ற சிந்தனைவாதிகள்.

**ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளைக் கேள். உன் அறிவிற்கு அது சரியானதாக இருந்தால் ஏற்றுக்கொள். நான் சொல்கிறேன் என்பதற்காக தலையாட்ட வேண்டாம் என்றார் தந்தை பெரியார். அவர் எத்தனை பெரிய மாமனிதர் என்று இப்போது உனக்குப் புரியும்.**

இஸ்லாமிய சகோதரர்கள் இன்றும் ஆடி மாதத்தில் திருமணம் செய்து கொள்கின்றார்கள். வளமையாகத்தான் வாழ்கின்றார்கள். ஒரே ஊரில் உள்ள மக்களின் ஒரு பிரிவினர் அதே நீரைப்பருகி, அதே காற்றைச் சுவாசித்து சுகமாக இருக்கும்போது, அதே ஊரில் உள்ள இன்னொரு பிரிவினருக்கு அதே மாதமும் நாளும் கெட்டதாக இருக்கின்றது என்றால் - இங்கு இயற்கைச்சூழல் பாகுபாடு காண்பிக் கின்றதா? அல்லது மதங்களின் ஆளுமை மக்களின் செயல்களைக் கூறு போடுகின்றதா?

பகுத்தறிவுக்கு ஏற்புடையதாகாத எந்தச் செயலையும் ஏற்க மறுக்கவேண்டும். மூளைக்குள் வளர்த்து விடப்பட்டிருக்கும் முட்புதர்களை அழித்தொழிப்புச் செய்யவேண்டும். இதை ‘அபெகா பண்பாட்டு இயக்கம்’ தொடர்ந்து செய்யும்.



செ.கேசவன், டெக்ஸஸ்

# அமெரிக்காவில் பிரிவினைவாதக் குடும்பவிழா




அமெரிக்காவின் வாசிங்டன் டி.சி. நகரில் வரும் செப்டம்பர் 1, 2 ஆகிய நாட்களில் “அமெரிக்க கொங்கு குடும்ப விழா - 2018” என்ற பெயரில் ஒரு ஜாதிச்சங்க மாநாடு நடைபெற உள்ளது. அதில் தமிழ்நாட்டிலிருந்து பல கொங்கு வேளாளக் கவுண்டர் ஜாதியின் முக்கியமானவர்கள் பங்கேற்கின்றனர். இந்தக் குடும்பவிழாவை நடத்துபவர்கள் அவர்களது இணையதளத்தின் வழியாக அழைப்பு விடுத்துள்ளனர்.

கொங்கு வேளாளர்கள் மட்டுமல்ல; அமெரிக்காவில் வாழும் பல பிற்படுத்தப்பட்ட ஜாதியினரும் இதைப் போல குடும்பவிழாக்களை நடத்தி தங்களுக்குள் ஜாதிய உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டு, ஜாதியச் சொந்தங்களை வளர்த்துக் கொண்டும்தான் வருகின்றனர். அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஃப்ரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற பல நாடுகளிலும் இந்தப் போக்கு அதிகரித்து வருகிறது.

நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணிபுரிபவர்கள், கணினித்துறையில் சிறந்த அறிவு பெற்ற மென்பொருள், வன்பொருளாளர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், வணிகர்கள் எனப் பல உயர்ந்த நிலையில் வாழும் இவர்கள் கொஞ்சமும் கூச்சநாச்சம் இன்றித் தங்களின் ஜாதி அடையாளத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டு, அதன் பெயரில் ஒரு விழாவை அரங்கேற்றுவது என்பது இவர்கள் கற்ற கல்வி இவர்களை மனிதர்களாக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

“தமிழ்வழிப்பள்ளிகளும், அரசுப்பள்ளிகளும், தாய்த்தமிழ்ப் பள்ளிகளும் தான் சமுதாய அக்கறை உள்ள மனிதர்களை உருவாக்கும். இன்றைய ஆங்கில வழிக்கல்வி, தனியார்பள்ளிக்கல்வி போன்றவை மனப்பாடப் புலிகளைத்தான் உருவாக்கும். சமூகச் சிந்தனை கொண்டவர்களை உருவாக்காது” என்று சில சினிமாக்களில் கல்வியாளர்கள்(?) நமக்குப் பாடம் எடுப்பதைப் பார்த்திருப்போம்.

அவர்கள் முன்மொழியும் அரசுப்பள்ளிகளிலும், தமிழ்வழிப் பள்ளிகளிலும் கல்வி கற்று, அகில உலகமெங்கும் பரவி வாழும் முன்னாள் அரசுப்பள்ளி, தமிழ்வழிப்பள்ளி மாணவர்கள் தான் இந்த ஜாதிச் சங்கங்களை நடத்தி வருகின்றனர். எல்லா நாடுகளிலும் உள்ள எல்லா ஜாதிச் சங்கங்களுக்கும் இது பொருந்தும்.

‘கொங்கு’ என்ற சொல், மேற்கு மாவட்டங்களைத்தான் குறிக்கிறது. அந்தச் சொல் எந்த ஜாதிக்கும் அடையாளமான சொல் அல்ல என்று இதுவரை பேசியவர்கள் இருந்தால், அதை மாற்றிக் கொள்ளுங்கள். அமெரிக்கக் குடும்ப விழா மட்டுமல்ல; ஈரோடு, கோவை, சேலம், திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களில் ‘கொங்கு’ என்ற பெயரில் இயங்கும் வணிக நிறுவனங்கள் அனைத்தும் பொதுச் சமுதாயத்துக்குச் சொல்லும் செய்தி, “இவை கவுண்டர்களின் நிறுவனம் அல்லது கவுண்டர்களுக்கான நிறுவனம்” என்பது தான்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அங்கு கொங்குவேளாளர்கள் அதிகமாகக் குடியேறத் தொடங்கியது 1966 க்குப் பிறகுதான். அதற்கு முன்பு எண்ணிக்கையில் குறைவான, தங்களுக்குள் அதிகத் தொடர்பு இல்லாத பலர் குடியேறி இருக்கலாம்.

கோவை மாவட்டம் போத்தனூர் அருகேயுள்ள செட்டிபாளையம் பகுதியில் பிறந்த சி.கே.இராமசாமிக் கவுண்டர் என்பவர் 1966 இல் அமெரிக்கா செல்கிறார். திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறையில் உள்ள இராமகிருஷ்ண தபோவனம் என்ற ஆர்.எஸ்.எஸ் பயிற்சி மய்யத்தில் இரமண மகரிஷி என்பவரால் பயிற்றுவிக்கப்பட்ட இராமசாமிக்கவுண்டர் 1966 இல் ஸ்ரீ ஸ்வாமி சச்சிதானந்த சரஸ்வதி என்ற குருவாக அமெரிக்காவில் காலடி வைத்தார். அங்கு நிரந்தரக் குடியுரிமையும் பெற்றார்.

பிரதமர் மோடிக்கெல்லாம் முன்பாக, அமெரிக்காவில் யோகாவைப் பரப்பியவர் அவர்தான். அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணத்தில் புகழ்பெற்ற லோட்டஸ் கோவிலைக் கட்டினார். இவரது யோகா மூலமாக, அமெரிக்காவின் பல முக்கியப் பிரமுகர்களைத் தமது சீடர்களாக்கினார். இவருக்குப் பிறகுதான் அங்கு கொங்குவேளாளர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது.

ஒவ்வொரு ஜாதியின் வெளிநாட்டு ஒருங்கிணைப்புகளையும் கவனமாக ஆய்வு செய்தால், எல்லா ஜாதிகளுக்கும் பின்னணியாக ஆர்.எஸ்.எஸ்.ஸின் பயிற்சியாளர் ஒருவர் அவசியம் இருப்பார். ஒருவேளை பார்ப்பனர்களோ, ஆர்.எஸ்.எஸ் காரர்களோ நேரடியாக இல்லாவிட்டாலும் - இந்தியாவில் உள்ள இந்து ஜாதியச் சமூகமும், இந்து ஆணாதிக்க, ஜாதியப்பண்பாடு, பழக்க வழக்கங்களும் இந்த ஜாதிச்சங்கத்துக் காரர்களுக்கு அஸ்திவாரங்களாக, தோன்றாத் துணையாக, தூண்களாக உள்ளன.

தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் கொங்கு வேளாளர்கள் வாழும் பகுதிகளை “ஃபண்டு கிராமங்கள்” என்று அழைப்பார்கள். இளவரசன், கோகுல்ராஜ், சங்கர் போல பட்டியல் ஜாதியினர் யாராவது கவுண்டர் பெண்களைக் காதலித்தாலோ அல்லது டீக்கடை களில் கவுண்டர்களுக்குச் சரிசமமாக உட்காருவேன் என்று பேசினாலோ, ஒரே டம்ளரில்தான் டீ தர வேண்டும் என்று கேட்டாலோ அவர்களை அடித்துக் கொல்லவும், கொன்றபின் வழக்கு நடத்தவும் கவுண்டர்களுக்குள் ஒரு நிதி திரட்டும் முறை இருக்கிறது. அந்த முறையைப் பின்பற்றும் கிராமங்கள் தான் ஃபண்டு கிராமங்கள்.

ஒருநாளைக்கு வெறும் 200 ரூபாய் சம்பாதிக்கும் கவுண்டர் முதற்கொண்டு, அதே ஒருநாளில் ஒரு இலட்சம் சம்பாதிக்கும் கவுண்டர் வரை இந்த நிதிவழங்கும் கிராமங்களில் தங்களது நிதியைச் செலுத்தி வருகிறார்கள். பாட்டாளி வர்க்கம், நிலப்பிரபுக்கள் என இரண்டு வர்க்கமும், ஜாதி என வரும்போது ஒற்றுமையுடன் இயங்குவார்கள்.

இது கவுண்டர் பகுதியில் உள்ள நிலை. தென் மாவட்டக் கள்ளர், வட மாவட்ட வன்னியர் போன்ற ஜாதிகளில் பெரும்பாலும் நிதிதிரட்டும் பண்பு இல்லை. ஆனால், கள்ளர் பெண்களையோ, வன்னியர் பெண்களையோ காதலித்தால் எந்த ஃபண்டையும் எதிர்பார்க்காமல் திரண்டு சென்று கொளுத்துவார்கள். இந்த அனைத்து ஜாதிக் காரர்களும் செவ்வாய் கிரகத்துக்குச் சென்று வாழத் தொடங்கினாலும், இவர்களுக்குப் பார்ப்பனர் களும், இந்துமத சாஸ்திர, சம்பிரதாயங்களும் ஊட்டி வளர்த்த பண்பாடு பழக்க வழக்கங்கள் இவர்களை விட்டு அகலாது, அழியாது. அதற்கு மீண்டும் ஒரு சான்றுதான் அமெரிக்கக் கொங்குக் குடும்ப விழா - 2018.

இந்த விழாவை நடத்தும் குழு தங்களைப் பற்றிய ஒரு அறிமுகத்தைக் கொடுத்துள்ளது. அதாவது, “KONGU DC is a Secular, Non-profit, Non-political, and Non-Partisan organization of Kongu people living in North America”. என்பதாகும். இதில் Non-profit, Non-political என்பவைகளில் நமக்கு அக்கறை இல்லை. ஆனால், Secular - Non-Partisan organization என்று கூறிக் கொள்வது மிகப்பெரும் மோசடியான சொற் களாகும்.

இந்த அமைப்பில் கொங்குப் பகுதியில் வாழ்ந்து, இப்போது அமெரிக்காவில் வாழும் இஸ்லாமியர்களையோ, கவுண்டர் அல்லாத கிறிஸ்துவர்களையோ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வார்களா? இந்து மதத்தில் உள்ள பட்டியலின மக்களையோ, புத்த மதத்தில் உள்ளவர்களையோ உள்ளே நுழையவாவது அனுமதிப்பார்களா? அப்படி ஏதாவது ஒரு உயிர் இந்த அமைப்பில் இருக்கிறதா? குறைந்தபட்சம் அந்த அமைப்பின் விதிமுறைகளிலாவது இதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கிறதா?

இந்த அமைப்பின் நோக்கம் To preserve, maintain and promote cultural heritage of the people of KONGU VELLALAR COMMUNITY from India என்று அறிவித்துள்ளார்கள். பிறகு எப்படி இந்த அமைப்பு, Secular - Non-Partisan organization என்று கூறிக்கொள்ள முடியும்? கொங்கு வேளாளர்களின் பண்பாடு, பாரம்பரியம், குலம், கோத்திரம், கூட்டம் போன்ற தனித்த பண்பாடுகளைப் பட்டியலிட்டு அவற்றைக் காப்பாற்றுவதும், போற்றி வளர்ப்பதும் தான் இவர்களின் நோக்கம் என்று அறிவித்துள்ளார்கள்.

இந்து மதத்தில் உள்ள எந்த ஒரு ஜாதியும் தனது “தனித்த பண்பாட்டைக் காப்பாற்றுவோம்” “எங்கள் குலதெய்வம், எங்கள் குலப்பெருமை இவற்றைக் காப்போம்” என்று கூறினால், அதை விடப் பிரிவினைவாதம் - பாகுபாடு என்பது வேறு எதுவும் இல்லை. அதைவிட மதச்சார்பின்மைக்கு எதிர்நிலை எதுவும் இல்லை. அமெரிக்காவில் உள்ள பெரியாரியத் தோழர்கள் இந்தப் பிரிவினைவாத, இந்து மத ஆதரவு அமைப்பின் செயல்பாடுகள் பற்றி, அமெரிக்காவின் சங்கங்கள் பதிவுத்துறையின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். அனைத்து மதத்தினரையும், அனைத்து ஜாதி யினரையும் அவ்வமைப்பில் உறுப்பினராக்கா விட்டால், வழக்குத் தொடுக்க முடியுமா என்ற ஆலோசனைகளிலும் இறங்க வேண்டும்.

கொங்கு வேளாளர்களின் அமைப்பின் மீது மட்டுமல்ல; அமெரிக்காவில் இயங்கும் எந்த ஜாதி அமைப்பாக இருந்தாலும் அதன்மீது பாகு பாடுகளுக்கு எதிரான வழக்குகளைத் தொடுக்க சட்டத்தில் இடமுள்ளதா என ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவை ஏதோ அந்த ஜாதிகளுக்கு எதிராக நாம் எடுக்கும் முடிவு என்பதல்ல. அந்தந்த ஜாதி மக்களின் பிறவி இழிவை ஒழிக்கும் முயற்சியாகும்.

கவுண்டரோ, செட்டியாரோ, நாயக்கரோ, வன்னியர், கள்ளரோ யாராக இருந்தாலும், இந்து மதத்திற்குட்பட்ட இன்ன ஜாதி என அவர்கள் தங்களைத் தனித்துக் காட்டிக்கொள்கிறார்கள் என்றால், அவர்கள் இந்து மதச்சட்டங்களின்படியும், இந்திய அரசியல் சட்டத்தின்படியும் பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள் என்றுதான் பொருள். அந்த இழிவிலிருந்து அவர்களை மீட்கும் முயற்சி தான் நம்முடையது.

பொத்தாம் பொதுவாக, ஜாதிச்சங்கங்கள் என்பவற்றை முற்று முழுதாகப் பெரியார் எதிர்க்க வில்லை. நாமும் எதிர்க்க வேண்டியதில்லை. குடி அரசுக் காலத்தில் பெரியார் ஏறக்குறைய எல்லா ஜாதிகளின் மாநாடுகளிலும் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றியுள்ளார். எந்த ஜாதியின் மாநாடாக இருந்தாலும், அந்த ஜாதி, பார்ப்பனர்களாலும், இந்து சாஸ்திர, சம்பிரதாயங்களாலும் எவ்வளவு இழிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதை அவர்களுக்கு உறைக்கும்படிப் பேசி, அந்த ஜாதியினரைப் பார்ப்பன எதிர்ப்பாளர்களாக, பார்ப்பனப் பண்பாட்டு எதிர்ப்பாளர்களாக மாற்றிக் காட்டினார்.

அதன் விளைவாக, 1928 - 1930 காலகட்டத்தில், ஆதிதிராவிடர் மாநாடு, வண்ணார் மாநாடு, மருத்துவர் மாநாடு, முத்தரையர் மாநாடு, நாடார் மாநாடு போன்றவற்றில் மனுசாஸ்திரத்தை எரிக்க வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. 1928 இல் சுயமரியாதை இயக்கம் திருச்சி மலைக்கோட்டை, திருவண்ணாமலைக் கோவில் களில் தாழ்த்தப்பட்டோரை அழைத்துச் சென்று, கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தியது. தோழர் ஜே.எஸ்.கண்ணப்பர் தலைமை தாங்கியதால், அவர் தாக்கப்பட்டார். வழக்குப் பதிவுசெய்யப்பட்டு, சிறையிலும் அடைக்கப் பட்டார். அவருக்காக, “முடிதிருத்துவோர் சங்கம்” நிதிதிரட்டிக் கொடுத்த வரலாறுகள் நடந்துள்ளன.

அதன்பிறகு, மண்டல் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக நடந்த போராட்டங் களில் பிற்படுத்தப்பட்டோர் ஜாதிச்சங்கங்களும், திராவிடர் கழகம் இணைந்து பல போராட்டங்களை நடத்தியுள்ளன. திராவிடர் கழக மாநாடுகளிலும், பிரச்சாரப் பயணங்களிலும் அனைத்து ஜாதிச் சங்கங்களும் பங்கேற்றுள்ளன. திராவிடர் கழகம் மட்டுமல்ல, அதிலிருந்து பிரிந்து திராவிடர் கழகம் (இரா) என்ற பெயரில் தனி அமைப்பு நடத்திய தோழர் கோவை இராமக்கிருட்டிணன் அவர்கள் நடத்திய மண்டல் அறிக்கை ஆதரவு மாநாடுகள், பிரச்சாரப் பயணங்கள், தொடர் கூட்டங்கள் அனைத்திலும் பல்வேறு பிற்படுத்தப்பட்ட ஜாதிச்சங்கங்கள் பங்கேற்றன. பிற்படுத்தப்பட்ட ஜாதிச்சங்கங்களுக்கும், ஆதிதிராவிடர் அமைப்பு களுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக திராவிடர் இயக்கங்கள் பணியாற்றின.

அதற்குப் பிறகு 80 களின் இறுதிக்குப் பிறகு இந்தப்போக்கு முற்றிலும் மாறிவிட்டது. பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இரு பிரிவிலும் உள்ள ஒவ்வொரு ஜாதிச்சங்கத் திற்குள்ளும் பார்ப்பன அடிமைகள் நுழைக்கப்பட்டனர். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் நுழைந்தனர். இரு பிரிவுக்கும் எதிரியான பார்ப்பனர்கள் இரு பிரிவுக்கும் ஆலோசகர்களாக மாறினர். சங்கர மடம் இதில் முக்கியப் பங்காற்றியது.

அதன் விளைவாக ஒவ்வொரு ஜாதியும், தனது ஜாதியின் முன்னேற்றத்திற்கு, யார் எதிரி? தனது ஜாதியின் இழிநிலைக்கு என்ன காரணம்? என்ற இரண்டிலும் தெளிவான பார்வை இல்லாமல், தாழ்த்தப் பட்டோரை எதிரியாகக் கருதும் போக்கும் - அதேபோல தலித் அமைப்புகள் பிற்படுத்தப்பட்ட அமைப்புகளை எதிரியாகக் கருதும் போக்கும் அதிகரித்துள்ளன.

அண்மைக்காலமாக, இருதரப்பையும் எதிர் எதிர்த் துருவங்களில் நிறுத்தும் என்.ஜி.ஓ.க்களும் அதிகரித்துள்ளன. இந்த என்.ஜி.ஓ.க்களில் பயிற்சி பெறும் தலித் அமைப்புகளின் தோழர்கள் முழுக்க முழுக்கப் பிற்படுத்தப்பட்டவர்களை மட்டுமே எதிரியாகப் பாவிக்கும் மனநிலைக்குத் தயாரிக்கப் படுகின்றனர். பிற்படுத்தப்பட்ட ஜாதிச்சங்கங்களின் ஆலோசகர்களாக உள்ள பார்ப்பனர்களும், பார்ப்பன அடிமைகளும் தாழ்த்தப்பட்டவர்களை மட்டுமே எதிரியாகக் கட்டமைக்கும் வேலையைச் செய்துவருகின்றனர்.

தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் நிகழ்ந்து வரும் இந்தப் போக்கு, இப்போது வெளிநாடுகளிலும், வளர்ந்த நாடுகளிலும் பரவி யுள்ளது. இங்கிருந்து, இந்த இந்து ஜாதியச் சமூகத்திலிருந்து - அமெரிக்கா, இலண்டன், கனடா, மலேசியா போன்ற நாடுகளுக்குப் பணிநிமித்தமாகச் செல்லும் தமிழர்களும், ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்களும் - ஜாதியைப் பின்பற்று வதிலும், ஜாதியப் பண்பாடுகளை வளர்ப்பதிலும் மிகவும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இவ்வகைப் போக்குகளுக்கு மாற்றாக - ஜாதிச்சங்கங்களாகவே இயங்கினாலும்கூட, தங்களின் ஜாதியின் இழிநிலைக்குக் காரணமான பார்ப்பன ஆதிக்கத்திற்கும், பார்ப்பனக் கருத்தியல் களுக்கும் எதிராகப் போராடும் ஜாதிச்சங்கங்களை நாம் வாழ்த்தி வரவேற்கலாம்.

### ஜாதிக் குடும்ப விழாக்களால் ஆபத்து உங்களுக்குத்தான்

கவுண்டர் ஜாதிக்குடும்பவிழாவைப் பார்த்து இனி ஒவ்வொரு ஜாதியும் நடத்தத் தொடங்கும் அல்லது ஏற்கனவே நடந்து கொண்டும் இருக்கலாம். அமெரிக்காவிலோ, இலண்டனிலோ இனி விசா பிரச்சனை அல்லது தமிழர்களுக்கு ஏதோ ஒரு சிக்கல் என்றால், இனி எந்த ஜாதித் தமிழனுக்குச் சிக்கலோ, அந்த ஜாதிக்காரன் மட்டும் தான் குரல் கொடுப்பான். மற்ற ஜாதிகள் வேடிக்கை தான் பார்க்கும், முடிந்தால் அவர்களும் அந்த நாட்டுக்காரர்களோடு இணைந்து எதிர் ஜாதியை ஒழிக்கும்.

பார்ப்பானின் பண்பாட்டைப் பாருங்கள். பார்ப்பனர்களில் ஏராளமான ஜாதிகள் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் பெரும் ஜாதிப் பிரிவுகளாக அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மா என்று பிரிந்துள்ளனர். இந்திய அளவில் நூற்றுக்கணக்கான ஜாதிப்பிரிவுகள் அவர்களிடையே உள்ளன. எந்த நாட்டிலாவது அய்யர் சங்கம், அய்யங்கார் சங்கம், மிஸ்ரா சங்கம், பானர்ஜி சங்கம் என்று நடத்து கிறார்களா என்று பாருங்கள். எந்த தேசிய இனத்தைச் சேர்ந்த பார்ப்பனராக இருந்தாலும் ஒரே குடையில் “பிராமணர் சங்க” மாகத்தான் இணை வார்கள்.

மேலும், தமிழ்ச்சங்கம், ஆந்திரா சபா, வங்காளிகள் சங்கம் என தேசிய இனங்களின் அடிப்படையில் சங்கங்கள் வைக்கப்பட்டாலும், அந்தச் சங்கங்கள் அனைத்திலும் தலைமைப் பொறுப்பைத் தக்கவைத்துக்கொண்டு, நமக்குள் பிரிவினைகளை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். இந்தியாவுக்குள்ளேயும் அதுதான் நடக்கிறது. தமிழர்கள் மட்டுமே ஏன் கவுண்டர் சங்கம், வன்னியர் சங்கம், ஆதிதிராவிடர் அமைப்புகள் எனத் தனித்தனியாகப் பிரிந்து நிற்கிறீர்கள்? இதனால் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாருக்கு இலாபம்?

**கொங்குக் குடும்ப விழா நடத்துபவர்களுக்குச் சில கேள்விகள்**

இந்த ஆண்டு ஃபெட்னா விழாவுக்கு மா.ப. பாண்டியராஜன் அழைக்கப்பட்டார். அவர் தமிழ்நாட்டின் மருத்துவக்கல்வி உரிமையும், மருத்துவ உரிமையும் பறிபோவதற்குத் துணை நின்றவர். நீட் தேர்வை ஆதரிப்பவர். அவர் ஃபெட்னா விழாவுக்கு வரக்கூடாது என்று பெரியாரிஸ்ட்டுகளும், அம்பேத்கரிஸ்ட்களும் கலகக்குரல் எழுப்பினர். அவர்கள் வீட்டுப் பிள்ளைகள்தான் நீட் தேர்வால் பாதிக்கப் பட்டவர்களா? இல்லையே?

இலட்சக்கணக்கான கொங்கு வேளாளர் சமுதாய எதிர்காலத் தலைமுறை மருத்துவக் கல்வியையும், மருத்துவத்தையும் இழந்துள்ளது. அதற்குக் காரணமானவர் ஃபெட்னா விழாவுக்கு வந்தபோது எந்த ஜாதிச்சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தது? கொங்குக் குடும்ப விழா நடத்து பவர்கள் அப்போது என்ன செய்தீர்கள்?

ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், ஜே.என்.யு, எய்ம்ஸ் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் கவுண்டர் ஜாதியைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை என்ன? பேராசிரியர்களின் எண்ணிக்கை என்ன? உங்களைப் போன்ற ஜாதிச் சங்கங்கள் அதற்கு எடுத்த நடவடிக்கை என்ன? இந்த உயர்கல்வி நிறுவனங்களில் படித்த கவுண்டர் ஜாதி மாணவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்கு, அந்த உயர்கல்வி நிறுவனங்களில் பார்ப்பன ஆதிக்கமும், அராஜகமும் கொடிகட்டிப் பறக்கின்றதே? அவர்களை எதிர்த்து இந்தச் சங்கங்கள் என்ன செய்தன?

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக, கவுண்டர் ஆண்கள் திருமணம் செய்வதற்குப் பெண்கள் கிடைப்பதில்லை. பெண்களே இல்லை. அதனால் கேரளாவிற்குச் சென்று தாழ்த்தப்பட்ட பெண்களைத் திருமணம் செய்து வருகிறீர்கள். உங்கள் ஜாதியில் பெண்களே இல்லாமல் போனதற்கு என்ன காரணம்? எல்லாப் பெண்களையும் பறையரும், சக்கிலியரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு போய் விட்டனரா? இல்லை. பொறுமையாகச் சிந்தியுங்கள்.

பெண்களுக்கு இந்து மதப் பண்பாட்டின் அடிப்படையில் சடங்குகளை நடத்துவது, திருமணங்களின் போது 100 பவுன், 200 பவுன் என்று நகைகளைப் போடுவது, வரதட்சணை கேட்பது - இந்துப் பண்பாடுகளின் அடிப்படையில் திருமணக் காலங்களில் இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் செலவழிப்பது -இவற்றுக்குப் பயந்து பெண் குழந்தை பிறந்தால் அவர்களைப் பிறந்த உடனேயே கொன்று விடுவது - சொத்துக்கு ஆண்வாரிசுதான் வேண்டும் என்று பெண் குழந்தைகளைக் கொன்றுவிட்டு, அடுத்தடுத்து ஆண் குழந்தைகளுக்கு முயற்சி செய்வது - ஒரு ஜாதிக்குள்ளேயே பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து திருமணங்களை நடத்தி அதன் காரணமாக பிறவிக்குறைபாடுகளும், மரபணுக் குறைபாடுகளும் கொண்ட பெண்களைப் பெறுவது - இதுபோன்ற பார்ப்பன, இந்துமதச் சிந்தனைகள்தான் உங்கள் ஜாதியில் பெண்களின் எண்ணிக்கையைப் பெரும் அளவில் குறைத்துள்ளது.

பட்டியல் இனத்தவரான ஒரு கோகுல்ராஜ், ஒரு கவுண்டர் பெண்ணைக் காதலித்தார் என்பதற்காக அவரைக் கொலையே செய்த நீங்கள், இன்று உங்களின் திருமணத்துக்குப் பெண்களே இல்லை என்ற நிலை உருவாகக் காரணமாக இந்து மதத்தையும், இந்து மதப்பண்பாடுகளையும் எதிர்த்துச் செய்தது என்ன?

இந்தியாவில் மாடுகளை இறைச்சிக்காக விற்பனை செய்யக்கூடாது என்று இந்துத்துவா அரசு உத்தரவிட்டது. அதனால் வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் யார்? சக்கிலியரும், பறையருமா சொந்தமாக மாடு வளர்க்கிறார்கள்? மாடு வளர்ப்பவர்களில் பெரும்பகுதி கவுண்டர்கள்தான். பார்ப்பனர்களின் உணவு ஆதிக்கத்தால் பாதிக்கப் பட்ட அந்தக் கவுண்டர்களுக்காக உங்கள் ஜாதிச் சங்கங்கள் என்ன செய்தன?

காவிரியில் கர்நாடகா அரசு நீர் விடவில்லை என்றால், முதல் பாதிப்பு யாருக்கு? கர்நாடக மாநில எல்லையிலிருந்து திருச்சி மாவட்டம் வரை காவிரியின் கரையில் வாழும் கவுண்டர்களுக்குத் தான் முதல் பாதிப்பு. சேலம் எட்டு வழிச்சாலையால் அதிகமாக நிலஇழப்புக்கு ஆளானவர்கள் கவுண்டர்கள்தான். ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் திருப்பூரின் பொருளாதாரம் 50 சதம் அழிந்து விட்டது. அதனால் அழிவுக்குச் சென்றவர்களின் பெரும்பகுதியினர் கவுண்டர்கள்தான்.

மேற்கண்ட எல்லாவற்றிற்கும் எதிராக, கவுண்டர்களைப் போன்ற மற்ற அனைத்துப் பிற்படுத்தப்பட்ட ஜாதிகளுக்காகவும் களத்தில் போராடுபவர்கள் யார்? பெரியார் இயக்கத்தினரும், அம்பேத்கரிஸ்ட்களும், கம்யூனிஸ்ட்களும்தான் போராடி வருகின்றனர். சிறைக்கொடுமைகளை அனுபவிக்கின்றனர்.

**உங்களுக்காகவும், சமுதாயத்தின் அனைத்து ஜாதி மக்களுக்காகவும், அனைவரது விடுதலைக்காகவும் உழைக்கும் தோழர்கள் கேட்கிறோம். கொங்குக் குடும்பவிழா என்பதைத் தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் இணைந்த குடும்பங்களின் விழாவாக நடத்துங்கள். படித்து, பக்குவப்பட்டவர்கள் என நம்பப்படும் நீங்கள் எடுக்கும் முயற்சி, சமுதாயம் முன்னேற வழிவகுக்கும். அமெரிக்காவில் நீங்கள் தொடங்கும் நன்முயற்சி தமிழ்நாட்டிலும் எதிரொலிக்கும். கொங்கு வேளாளர்களாகப் பிறந்தவர்கள் யாராவது இதைப் படித்தால் இந்தத் தனிமைப்படுத்திக் கொள்ளும் பண்புக்கு எதிர்வினையாற்றுங்கள்.**

DR. ஃபரூக் அப்துல்லா, சிவகங்கை

# மரபுவழி=மரணவழி



திருப்பூரில் கடந்த ஜூலை மாத (2018) இறுதியில் நடந்த யூ-டியூப் பிரசவத்தின் விளைவாக ஒரு பெண் மரணமடைந்த செய்தி அதுவும் தமிழ்நாட்டில் நடந்தது என்று நினைக்கையில் நாம் அனைவரும் நிச்சயம் அவமானப்பட வேண்டும். பொது சுகாதாரத்துறை மருத்துவனான எனக்கு மிகப்பெரும் ஆற்றாமையும் கோபமும் கவலையும் வந்திருக்கிறது.

ஒரு நாடு அல்லது மாநிலம் முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்பதை அறிய உலக சுகாதார நிறுவனம் மனித வள மேம்பாட்டுக் குறியீடுகளை நிருவியுள்ளது. அவற்றில் முக்கிய இடத்தைப் பெறுவது, பிரசவத்தில் தாய் மரணமடைவதைத் தடுக்கும் மருத்துவ வசதிகள் தான்.

கர்ப்பம் ஆன தேதியில் இருந்து பிரசவத் திற்குப் பின் 42 நாட்கள் வரை உள்ள இந்தக் காலத்தில் தாய் மரணமடைந்தால் அது கர்ப்ப கால தாய் மரணமாக கொள்ளப்படுகிறது. இதை Maternal Mortality Ratio (MMR) என்கிறோம்

ஒரு இலட்சம் பிறப்பிற்கு எத்தனை தாய் மார்கள் இப்படி இறக்கிறார்கள் என்பதை வைத்தே ஒரு நாடு எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்று கூறிவிடலாம்.. தமிழ்நாட்டின் தற்போதைய MMR - 67 க்குக் குறைந்துள்ளது. இது 1990 களில் 450 ஆக இருந்தது.

அதாவது வருடத்திற்கு ஒரு இலட்சம் பிறப்புகள் நடக்கும் ஒரு ஊரில், உதாரணமாக, மதுரை என்று வைத்துக்கொள்வோம். 1980 களின் இறுதியில் 450 தாய்மார்கள் கர்ப்ப காலத்தின் போதோ, பிரசவத்தின் போதோ, பிரசவத்திற்கு பின்னோ இறந்து வந்தார்கள். கிட்டத்தட்ட வருடா வருடம் ஐநூறு தாய்களின் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் அனாதை ஆயின.

இன்று நாட்டில் சிறப்பாக MMR குறைத்த மாநிலமாகத் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. அதற்காக, மத்திய அரசிடம் விருதும் வாங்கியிருக்கிறது. இந்த மாற்றம் எப்படி நடந்தது? தானாக இந்த இருபது வருடத்தில் எல்லாம் மாறி விட்டதா?

இது அனைத்தும் அரசின் கொள்கை, அரசு MMR ஐக் குறைக்கச் செலவிட்ட செலவினம், அரசு மருத்துவர்களின் அர்ப்பணிப்பு, கிராமச் சுகாதாரச் செவிலியர்களின் உழைப்பு, செவிலியர்களின் கண் அயறாப் பணி, தனியாரில் மேம்பட்ட சேவை கிடைக்கச்செய்தது போன்ற பல விசயங்கள் தமிழ்நாட்டில் கடந்த முப்பது வருடங்களில் நடந்தது.

ஆரம்ப சுகாதார நிலையம் - தாலுகாவுக்கு ஒரு அரசு மருத்துவ மனை - மாவட்டத்திற்கு ஒரு அரசு மருத்துவ கல்லூரி.

ஒரு மாவட்டத்தை பத்துப் பனிரெண்டு வட்டாரங்களாகப் (Blocks) பிரித்து, அதில் ஒரு சுகாதார நிலையத்தை வட்டாரச் சுகாதார நிலையமாக நிறுவி அதற்குக் கீழ் பல ஆரம்ப சுகாதார (Primary Health Centres) நிலையங்கள் இயங்கும்.

ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத் திற்குக் கீழும் ஐந்து முதல் பத்து துணைச் சுகாதார நிலையங்கள் (Health Sub centre).

வட்டாரம் முழுவதுக்குமான மருத்துவக் கண்காணிப்பை வட்டார மருத்துவ அலுவலர் கவனிக்கிறார். அவருக்குக் கீழே இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுப்பு மருத்துவ அலுவலர்கள் கவனிக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே இயங்கும் துணைச் சுகாதார நிலையங்களில் கிராமச் சுகாதாரச் செவிலியர் (Village Health Nurse) பணி புரிகின்றனர்.

ஒவ்வொரு 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு துணை சுகாதார நிலையம் என தமிழகச் சுகாதாரத்துறை தனது விருட்ச வேர்களைச் சமூகத்தின் அடித்தளம் வரை பரவவிட்டிருக்கிறது.

### கர்ப்பிணிகளைக் காக்கவே 108 ஆம்புலன்ஸ்

கர்ப்ப காலத்தில் ஒரு தாய் மரணமடையக் காரணமான அனைத்துக் காரணங்களும் தோண்டித் துருவி ஆராயப்பட்டு, அதற்கான விடை அறியப் பட்டு உடனே அரசின் கொள்கை முடிவாக ஏற்கப் படுகின்றன.

பிரசவத்தின் போது ஏற்படும் உதிரப்போக்கு போன்ற பிரச்சனைகளில் ஒரு தாய் ஒரு மருத்துவ மனையில் இருந்து மற்றொரு மருத்துமனைக்கு அழைத்து செல்கையில் அல்லது வீட்டில் இருந்து மருத்துவமனையை அடையப் பணம் இல்லாமல் காலதாமதம் ஆகிறது என்ற காரணம் கண்டறியப் பட்டவுடன் வந்த திட்டமே, 108 ஆம்புலன்ஸ். உண்மையில் அது தாய்களைக்காக்க ஆரம்பிக்கப் பட்ட திட்டம் தான். இதனால் பல Transit மரணங்கள் குறைந்தன.

### அரசு மருத்துவமனைகளில் இலவச மருந்துகள், ரூ.18,000 உதவித்தொகை

கர்ப்ப காலத்தில் 'அனீமியா' எனும் இரத்த சோகை வருவதால் தாய்மரணங்கள் அதிகமாக நிகழ்கின்றன என்று கண்டறியப்பட்டது. உடனே பிரதிவாரம் அனைத்துச் சுகாதார நிலையங்களிலும் சிகிச்சைக்கு வரும் தாய்மார்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டன. அதில் கீரை, முட்டை போன்ற சத்துள்ள உணவுகள் சேர்க்கப்பட்டன. மூன்று மாதம் முதல் இலவசமாக இரும்பு சத்து மாத்திரை வழங்கப்படுகின்றன.

பிரசவ காலத்தில் பெண்களை ஏழை மக்களால் சரிவர கவனிக்க முடிவதில்லை. இதனால் அவர்களது உடல் நலிந்து அதனால் மரணம் ஏற்படுகிறது என்று கண்டறியப்பட்டதால் கொண்டு வரப்பட்டது தான், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டம். இப்போது ரூபாய் 18000 வழங்கப்படுகிறது. தாய்மார்கள் நல்ல உணவு உண்டு திடகாத்திரமாக இருக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம்.

1980 களில் தமிழகத்தில் சிசேரியன் சிகிச்சை அறிமுகத்துக்கு வந்தது. நானும் சிசேரியன் சிகிச்சையால் உயிர் பிழைத்தவன் என்பதில் என்றும் எனக்கு சிசேரியன் மீது ஒரு நன்றி உண்டு. அதைக் கண்டறிந்தவர்களுக்கு என்றும் நான் நன்றிக் கடன் பட்டவன்.

இந்த சிசேரியன் சிகிச்சை 2000 ஆண்டு வரை கூடப் பரவலாக்கப்பட வில்லை. சிசேரியன் சிகிச்சை சரியான நேரத்தில் கிடைக்காததால் தாய் மரணங்கள் நடக்கின்றன என்று அறியப்பட்டது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் சிசேரியன் சிகிச்சை செய்யும் அளவுக்குத் தரம் உயர்த்தப் பட்டன. வட்டாரச் சுகாதார நிலையங்கள் பல சிசேரியன் சிகிச்சை கிடைக்கும் நிலையங்களாக உருமாறின. சிசேரியன் சிகிச்சையினை உடனே பெற்று பல மரணங்கள் தவிர்க்கப்பட்டன.

### தாய்-சேய் நலத்திற்குத் தனித்துறை CEMONC

மருத்துவர்கள் பல்வேறு துறைகளைப் பார்த்துக்கொண்டு தாய் சேய் நலனிலும் கவனம் செலுத்துவதால், தாய் சேய் நலத்தின் தரம் குறைவதால் இதற்கெனப் பிரத்யேகமான ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்று அரசு நினைத்து உருவாக்கியதே CEMONC எனும் அமைப்பு. (Comprehensive and Emergency Obstetric and Neonatal Care unit)

இங்கே 24 மணிநேரமும் மகப்பேறு மருத்துவர்களும் குழந்தைகள் நல மருத்துவர்களும் பணியில் இருப்பார்கள். எப்போதும் தேவையான இரத்தம் தயாராக இருக்கும். அறுவை அரங்குகள் தயாராக இருக்கும். இவர்கள் வேலையே உயிருக்குப் போராடிக்கொண்டு வரும் தாயையும் சேயையும் காப்பது தான். தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு சீமாங்க் இருக்கிறது.

தாயின் மரணங்கள், தாயின் பிரசவ எண்ணிக்கை கூடக்கூட (High Order Birth) அதிகரித்துக் கொண்டே செல்வதால் அதைத் தடுக்க, குடும்ப நல அறுவை சிகிச்சைகள் அவரவர் கிராமங்களிலேயே இலவசமாக செய்யப்படுகின்றன. தங்கும் போது இலவச உணவு வழங்கப்படுகிறது. சிகிச்சை முடிந்ததும் இலவசமாக வீட்டிற்கு அழைத்துச் சென்று விடப்படுகிறது.

இதுபோக, கர்ப்ப காலத்தில் இறக்கும் ஒவ்வொரு தாயின் மரணமும் அவமானமாகக் கருதப்பட்டு ஆடிட் எனும் தணிக்கை செய்யப்படும். நான் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவராக இருக்கும் போது சில தணிக்கைகளைச் சந்தித்துள்ளேன். உண்மையில் அந்தத் தணிக்கைக்கு முதல் வாரம் முழுவதும் உறக்கமே வராது.

அந்தத் தாயின் மரணம் எப்படி நடந்தது? எங்கு நடந்தது? ஏன் நடந்தது? எங்கு குறை? யார் மீது தவறு? என்று தணிக்கை செல்லும். முதலில் தணிக்கை அதிகாரி ஆய்வு செய்வார்.. பிறகு துணை இயக்குநர் தணிக்கை. அடுத்து ஆட்சியர் தணிக்கை. பிறகு தேசியச் சுகாதாரக் குழும இயக்குநர் தணிக்கை என்று அந்த மரணத்தின் காரணத்தைக் கண்டறியாமல் ஆய்வு முடியாது. மீண்டும் அந்த மரணம் நடக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்ற அரசுக் கொள்கை உடனே வகுக்கப்படும்.

அனைத்து அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களும் 2000 களுக்கு முன்பு வரை மருத்துவர் இன்றியோ அல்லது வாரம் இரண்டு நாள் மட்டும் தான் மருத்துவரோடு இயங்கியிருக்கும். காரணம் மருத்துவர் பற்றாக்குறை.

உடனே 'மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி' எனும் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு இன்று அத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்னும் நிறைய இருக்கிறது. நீளமாக செல்வதால் இத்தோடு முடிக்கிறேன்.

இவையனைத்துக்கும் பின்னால் இருக்கும் ஒரே குறிக்கோள், கர்ப்ப காலத்தில் தாய் இறப்பைத் தடுக்க வேண்டும், சிங்கப்பூர், ஸ்வீடன் போன்ற வளர்ந்த நாடுகளின் ஒற்றை இலக்க MMR ஐ அடைய வேண்டும் என்பதே. அதை எப்படியாவது தடுத்து நாட்டின் மக்கள் தொகையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் யூ-டியூப் போலிகள் திரிகிறார்கள். ஒன்று கூறி இந்தக் கட்டுரையை முடிக்கிறேன் .

'கர்ப்பம் ஒரு நோயல்ல.... அதற்கு மருத்துவம் தேவையில்லை' என்ற கருத்து பரப்பும் விசமிகளின் கருத்துக்கு எனது கருத்து 'கர்ப்பம் நோயல்ல, அது ஒரு இயற்கை நிகழ்வு. ஆணும் பெண்ணும் கூடினால் இயற்கையாகக் கர்ப்பம் நிகழும். ஆனால் கர்ப்ப காலத்தில் ஏற்படும் பல மாற்றங்களை அறியவும், பிரசவம் மற்றும் அதற்குப் பின்பு ஏற்படும் பிரச்சனைகளை உடனே அறிந்து உயிரைக் காக்கவும் கட்டாயம் சரியான மருத்துவக் கண்காணிப்பு தேவை.' என்று கூறி முடிக்கிறேன். சிந்திப்பவர்களுக்கு இதில் செய்திகள் உண்டு.

அதி அசுரன்



# ஸ்டாலினுக்குத் தோள்கொடுப்போம்!...நமக்காக!

"நாம் கேட்கும் சுயராஜ்யம் என்பது, வெள்ளையர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. எங்கள் நாட்டின் வேத, சாஸ்திரங்கள்தான் எங்களை ஆளவேண்டும். சுயராஜ்யம் வந்தால் மனுநீதியை அரசமைப்புச் சட்டமாகவே ஆக்கவேண்டும். ஆக்குவோம்"

என 1917 இல் பார்ப்பன ஆதிக்க வெறியோடு பேசியவர் பாலகங்காதர திலகர். இவர் காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர். இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தொடங்கிய ஸ்ரீபத் அம்ரிட் டாங்கே மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் தொடங்கிய கேசவ் பல்ராம் ஹெட்கேவர் ஆகிய இருவருமே திலகரின் சீடர்கள். மராட்டியப் பார்ப்பனர்கள்.

இந்த மூன்று அமைப்புகளிலும் தலைமைப் பொறுப்புகளில் இருக்கும் பார்ப்பனர்கள் தான் இன்றளவுக்கும் இந்தியாவின் அரசியலை இயக்குபவர்களாக உள்ளனர். ஒரு நூற்றாண்டு முடிந்து விட்டது. அகில இந்திய அரசியல் தளத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை நாம் இன்னும் அசைக்கக் கூட முடியவில்லை.

ஆங்கிலேய ஆட்சி அதிகாரத்தில், நீதிபதிகளாக, ஆலோசகர்களாக, ஆட்சித்தலைவர்களாகப் பார்ப்பனர்களே வீற்றிருந்தனர். அந்த ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த அமைப்புகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்தினர். அந்தச் சூழலில் தான் 1916 இல் தமிழ்நாட்டில் 'தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்' தொடங்கப்படுகிறது.

1918 ஆம் ஆண்டு, மிகச்சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு, இதே ஆகஸ்ட் மாதத்தில் தான் (02.08.18) திராவிட இயக்கப் போராளி டி.எம்.நாயர் அவர்கள் இங்கிலாந்து பிரபுக்கள் சபையில் பார்ப்பனர் அல்லாதாருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தேர்தல் அரசியலில், சட்டமன்றத் தொகுதிகளில் தனி ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மிகச்சிறப்பான எழுச்சியுரையாற்றினார்.

டி.எம்.நாயரின் வாதத்தின் நியாயத்தை உணர்ந்த ஆங்கிலேய அரசு, பார்ப்பனரல்லாதாருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தேர்தல் அரசியலில் வாய்ப்புக் கொடுக்கலாமா என ஆராய்வதற்காக, "சவுத்பரோ கமிட்டி"யை அமைத்தது. அந்தக் கமிட்டிக்கும் தலைவர்களாக சீனிவாச சாஸ்திரி, எஸ்.என்.பானர்ஜி என்ற இரண்டு பார்ப்பனர்கள் தான் நியமிக்கப்பட்டிருந்தனர்.

நமது தலைவர்கள் டி.எம். நாயர், கே.வி.ரெட்டி மற்றும் பலரும் அந்தப் பார்ப்பன சவுத்பரோ கமிட்டியையும் எதிர்த்துப் போராடி, மீண்டும் 1919 இல் இலண்டன் சென்று வாதாடி, ஆங்கிலேயர்களுக்குச் சமூகநீதியைப் புரியவைத்து, நமக்குரிய சட்டமன்றத் தொகுதிகளை - தேர்தலில் நிற்கும் உரிமையைப் பெற்றுத் தந்தனர். அந்த உரிமைகள் மாண்டேகு செம்ஸ்போர்ட் அறிக்கை எனும் பெயரால் நமக்குக் கிடைத்தன. அந்த அறிக்கைக்காக, வாதாடச் சென்ற டி.எம்.நாயர் இலண்டனிலேயே உயிர்துறந்தார்.

1919 இல் ஜூலை 19 ஆம் நாள் இலண்டனில் அவர் இறந்த நாளில், சென்னைப் பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கிக் கொண்டாடினர். காஸ்மோ பாலிடன் க்ளப்பில் பார்ப்பன நீதிபதிகள் வடை, பாயாசத்துடன் சிறப்பு விருந்து நடத்தினர். திருவல்லிக்கேணி கோவிலில் சிறப்பு அர்ச்சனைகள் நடத்தப்பட்டன. அதே பாயாசப் பார்ப்பனர்கள் இன்று 100 ஆண்டுகள் கழித்து கலைஞரின் மறைவுக்கு வடை, பாயாசம் செய்கின்றனர் என்றால்... திராவிடர்களுக்குத் தலைவன் யார் என அவர்கள் சரியாகப் புரிந்து வைத்துள்ளனர். நமக்குத்தான் வரலாறு தெரியவில்லை.

1920 வரை ஒட்டுமொத்த இந்தியா முழுவதும் அரசியல் என்றால் அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மா, பானர்ஜி, முகர்ஜி, பாண்டே, என்று அக்ரஹார அரசியலாகவே இருந்தன. மாண்டேகு செம்ஸ்'ஃபோர்ட் சீர்திருத்தத்தின்படி தேர்தல் அரசியல் இந்தியாவில் அறிமுகமானது.

பார்ப்பனர்களின் பிடியிலிருந்து ஆட்சி நிர்வாகம், பனகல் அரசர், தியாகராயர், பொப்பிலி அரசர், புதுக்கோட்டை அரசர், ஆர்.கே.சண்முகம் செட்டியார், கேசவப்பிள்ளை, நடேச முதலியார், தஞ்சை அப்பாசாமி வாண்டையார், கரந்தை உமாமகேசுவரன் பிள்ளை போன்ற பெரும் நிலக்கிழார்களின் கைக்கு மாறியது.

நீதிக்கட்சியின் தலைவர்கள் பெரும் ஜமீன்தார்களாக, பணக்காரர்களாக இருந்தாலும் பார்ப்பன எதிர்ப்பு என்பதில் தங்களது ஜாதிகளின் நலத்தை மட்டும் முன்னிறுத்தாமல், பட்டியலின மக்களின் விடுதலையையும் இணைத்தே முன்னெடுத்தனர். அனைத்துத் துறைகளிலும் பட்டியலின மக்களின் பிரதிநிதித்துவ உரிமைகளை மறுக்கவில்லை. இவர்களின் ஆட்சியில் தான் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பஞ்சமி நிலங்களாக வழங்கப்பட்டன என்பது ஒரு சிறு சான்று. 30 களின் இறுதியில் நீதிக்கட்சி தோல்வியைத் தழுவியது. பெரும் பின்னடைவைக் கண்ட நீதிக்கட்சியின் தலைவராக 1938 இல் பெரியார் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

பெரியாரின் தலைமைக்கு வந்த பிறகு,1944 இல் சுயமரியாதை இயக்கமும், நீதிக்கட்சியும் ஒன்றாகி, திராவிடர் கழகமாகப் பரிணாமம் பெற்ற போது - வெறும் பெயர் மட்டும் மாறவில்லை. அதுவரை பண்ணையார்களின் கட்சியாக இருந்த அமைப்பு, திராவிடர் கழகமாகிய போது பாமரர்களின் கட்சியாகியது. பெரியார், பார்ப்பனர்களையும், பண்ணையார்களையும், ஒருசேர எதிர்த்துக் களம் கண்ட காலங்களில் அவருக்குத் தளபதியாகத் திகழ்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் அண்ணா.

நீதிக்கட்சிக்குப் பிறகு திராவிடர்களுக்கான அரசியல் கட்சி என்று எதுவுமே இல்லாத காலத்தில், திராவிட மக்களின் முன்னேற்றத்துக்காக, திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்திய விடுதலை தொடர்பாக பெரியாருடன் முரண்பட்டுத் தான் தி.மு.க உருவானது. ஆனாலும், பெரியாரிடம் கற்ற சமுதாய அறிவு அண்ணாவின் அரசியல் அமைப்புக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தது.

நீதிக்கட்சி காலத்துக்கு முன்பு ஒரு ஜில்லாக்கமிட்டித் தலைவர் என்றால், அவர் உறுதியாகப் பார்ப்பனராகத்தான் இருப்பார். நீதிக்கட்சி தோன்றிய பிறகு, ஜில்லாக் கமிட்டித் தலைவர் என்றால் பெரும் பணக்காரராகவோ, ஜமீனாகவோ தான் இருப்பார். தி.மு.க. தோன்றிய பிறகு, இந்தத் துறையில் ஒரு தலைகீழ் மாற்றம் உண்டானது. "அரசியல் கட்சி நிர்வாகிகள்" என்ற தளத்தில் மாபெரும் புரட்சி நடந்தது.

ஏழை எளியவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், குரலற்றவர்களும் தி.மு.க வின் முக்கியப் பொறுப்பாளர்களாக அறிமுகமானார்கள். சின்னஞ் சிறு கிராமங்களில்கூட கிளைக்கழகப் பொறுப் பாளர்கள் நியமிக்கப்பட்டனர். படிப்பகங்கள் தோன்றின. நாடக மன்றங்கள், கலை மன்றங்கள் தோன்றின. சிற்றிதழ்கள் புற்றீசல் போலத் தொடங்கப்பட்டன. ஊருக்கு ஊர் சொற்பொழிவாளர்கள் தோன்றினர். அரசு அலுவலகங்களுக்குச் சென்று, அதிகாரிகளிடம் மக்களின் நிறைகுறைகளைப் பேசும் கிராமப்புற அரசியல்வாதிகள் தோன்றினர்.

சேரிகளில் தி.மு.க கொடிகள் பறந்தன. சேரிகளிலும் பொறுப்பாளர்கள் தோன்றினர். வெகு அதிகமான மக்கள் அரசியல் அறிவு பெற்றனர். இராமாயணத் தையும், மகாபாரதத்தையும் கதா கலாட்சேபம் செய்து கொண்டிருந்த கிராமங்களில் பொதுக்கூட்டங்களும், சீர்திருத்த நாடகங்களும் நடக்கத்தொடங்கின. எழுத, படிக்கத் தெரியாதவர்கள்கூட அரசியல் பேசினர். வெகு மக்கள் அரசியல்படுத்தப்பட்டனர்.

தேர்தலில் நின்று வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடிப்பது என்பது அரசியல் மாற்றம் மட்டுமே. தி.மு.க. என்ற அரசியல் கட்சி, அரசியல் வெற்றியைப் பெறுவதற்கு முன் சமுதாய மாற்றத்தில் கவனம் செலுத்தியது. திராவிடர் கழகத்தோடு அறிவிக்கப்படாத போட்டி ஒன்றை நடத்தியது. பெரியாரின் கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்துமத எதிர்ப்பு, இந்திய விடுதலை மறுப்பு ஆகிய எல்லாவற்றிலும் மாற்றுக்கருத்து கொண்டவர் அண்ணா. ஆனால், நடைமுறையில் மேற்கண்ட கொள்கைகளுக்காக தோழர் பெரியார் அறிவித்த போராட்டங்களில் ஒரு கூட்டுப்பணியாளராக - சக போராளியாகவே அண்ணாவும், தி.மு.க வும் களத்தில் நின்றன.

இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு பெற்றுவருவதற்கு - கல்வி உரிமை பெற்றதற்கு மிக முக்கியக் காரணம்,1951 ஆம் ஆண்டு நடந்த இந்திய அரசியல் சட்டத் திருத்தப் போராட்டம். அந்தப் போராட்டத்தைத் தொடங்கி வென்றவர் பெரியார். சட்டரீதியாக அதற்குத் தோள் கொடுத்தவர் அம்பேத்கர்.

அதுபோல, தமிழ்நாட்டு மக்களின் கல்வி உரிமையைக் குழிதோண்டிப் புதைக்க முயன்ற குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கடுமையான போராட்டங்களைத் தொடங்கியவர் பெரியார். சட்ட ரீதியாக அத்திட்டத்தை ஒழிக்கத் துணைநின்றவர் காமராசர். மேற்கண்ட இரண்டு முக்கியப் போராட்டங்களிலும் அண்ணா, கலைஞர் ஆகிய தலைவர்களின் உழைப்பும், தி.மு.க என்ற அரசியல் இயக்கத்தின் அர்ப்பணிப்பும் வரலாற்றில் இன்னும் முழுமையாகப் பதிவாகவில்லை.

1971 ஆம் ஆண்டுத் தேர்தலில் "இராமனைச் செருப்பாலடித்த கட்சிக்கா ஓட்டு?" என பார்ப்பனர் அலறித்துடித்த போதும் மிகப்பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்தார் கலைஞர். இராமனைச் செருப்பாலடித்த பிறகு நடந்த தேர்தலில் வென்றவர் கலைஞர்.

*முதலமைச்சரான உடனேயே, பதவியைத் தக்கவைத்துக்கொள்ள, ஒரு பக்திப்பழமாக அவதாரம் எடுக்கவில்லை. தனது இயல்பாக, நாத்திகராகவே வாழ்ந்தார். நாத்திகராகவே ஆண்டார். ஊடலோ, கூடலோ அது திராவிடர் கழகத்தோடு தான். பாசம், கோபம் எதுவானாலும் அது திராவிடர் கழகத்தோடு தான் என வாழ்ந்தார். எந்தச் சூழலிலும் சங்கர மடத்தில் போய் மண்டியிடவில்லை.*

*இந்தியப் பகுதியில் சமுதாய மாற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பார்ப்பனர்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்டனர். காலத்துக்கேற்பத் தங்களைத் தயாரித்துக்கொண்டனர். தாங்கள் படையெடுத்து வந்து இந்தியப் பகுதியை ஆக்கிரமித்ததற்குப் பிறகு, பார்ப்பனர்களைப் போலவே ஏராளமான அந்நியர்கள் இந்நாட்டுக்குப் படையெடுத்து வந்தனர். அவர்கள் அனைவரையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் இந்த முதல் அந்நியர்கள். அந்த வரிசையில் 'ஜனநாயம்', 'தேர்தல் அரசியல்' என்ற நிலைக்கு சமுதாயம் மாறியபோது, காங்கிரசைத் தொடங்கினார்கள். இந்தியாவில் தொடங்கப்பட்ட அனைத்து அரசியல் அமைப்புகளிலும் ஊடுருவினார்கள். நீதிக்கட்சியிலும் ஊடுருவினார்கள்.*

*"மீண்டும் மனுசாஸ்திரத்தையே இந்திய அரசியல் சட்டமாக்குவோம்" என்று பார்ப்பனர்கள் திட்டமிடத் தொடங்கி 100 ஆண்டுகள் முடிந்து விட்டது. அத்திட்டத்திற்கு அரசியல் தளத்தில் மிகப்பெரும் எதிரியாக இருப்பது தி.மு.க மட்டுமே. 'மனு' வை எதிர்க்கும் சமுதாய அமைப்புகள் ஏராளமாக உள்ளன. ஏறத்தாழ 2 கோடி வாக்காளர் களைக் கொண்ட அரசியல் அமைப்பான திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே அரசியல் களத்தில் அவர்களுக்கு எதிராகத் தெரிகிறது. அதனால் தான், டி.எம். நாயரின் மறைவுக்குப் பிறகு 100 ஆண்டுகள் கழித்து கலைஞரின் மறைவுக்குப் பார்ப்பனர்கள் பாயாசம் சாப்பிட்டு மகிழ்கின்றனர்.*

*2000 ஆண்டுகளாக மண்ணாங்கட்டி களாகவே வாழ்ந்த பெரும்பான்மை மண்ணின் மைந்தர்கள், பெரியாரால் மனிதரானார்கள். அண்ணா, கலைஞர் ஆகியோரால் அரசியல் நிர்வாகிகளானார்கள். 2000 ஆண்டுகளாக நம்மை அடக்கி வந்த பார்ப்பனர்களால் இந்தப் புரட்சியை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு ஒதுங்கிச் சென்ற மக்கள், அதே துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு, வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை எனச் சுத்தமாக உடை உடுத்திக் கொண்டு அரசு அலுவலகங்களில் ஏறி இறங்குவதையும், அதிகாரி களை மிரட்டி வேலை வாங்குவதையும் எந்தப் பார்ப்பான் ஏற்றுக் கொள்வான்?*

*அண்ணாவும், கலைஞரும் பார்ப்பனர் களோடு பெரிதாக உரசாமல் இருந்தாலும் கூட, பார்ப்பனர்கள் இந்தத் தலைவர்களை இன்றுவரை பரம்பரை எதிரிகளாகவே எண்ணுவதற்குக் காரணம் இதுதான். இங்கு சமுதாயம் அரசியல்படுத்தப் பட்டுள்ளது. அதுவும், அந்த அரசியல்படுத்தலைப் பார்ப்பனரல்லாதவர்கள் நடத்துகிறார்கள். அதன் பயனையும் அவர்களே அடைகிறார்கள். அதை முறியடிக்க வேண்டும். பார்ப்பனரல்லாதோர் அரசியலில் இருக்கக்கூடாது. அப்படியே இருந்தாலும் அதன் பயன் அவர்களுக்குச் செல்லக் கூடாது என்று - பார்ப்பனர்கள் துடிக்கின்றனர். 1919 க்கு முந்தைய வாழ்க்கை முறைக்கு நம்மை இழுத்துச் செல்லத் தொடங்கிவிட்டனர்.*

*2019 இல் நாடாளுமன்றத் தேர்தல். அதை அடுத்து சட்ட மன்றத் தேர்தல். இந்தத் தேர்தல்கள் தான் அடுத்த 100 ஆண்டுகால எதிர்காலத்தை உறுதிசெய்யப்போகும் தேர்தல்கள். ஆம், 2019 தேர்தலில் பார்ப்பன இந்து மத அமைப்புகள் வென்றுவிட்டால், அதற்குப் பிறகு இந்தியாவில் தேர்தல்கள் நடக்காது. தேர்தல் முறையும் இருக்காது. இந்தியா வெளிப்படையான இந்து நாடாக அறிவிக்கப்படும். மீண்டும் மனுசாஸ்திரம் சட்ட நூலாக மாறும். மாநிலங்கள் அவை, மக்கள் அவை என்ற இரு அவைகளும் ஒழிக்கப்பட்டு, "குருசபா"க்கள் உருவாகப் போகின்றன. அதற்குரிய முன்வரைவுகள் தயாராகிவிட்டன. அவற்றை எதிர்க்கும் சமுதாயச் சூழல் தமிழ்நாட்டில் உள்ளது.*

*அகில இந்திய அளவில், இரண்டு நாத்திகர்கள் அதுவும், ஜாதிஒழிப்பை அடிப்படையாகக் கொண்ட நாத்திகத்தை ஏற்றுக்கொண்டவர்கள் முதலமைச்சர்களாக இருந்தது தமிழ்நாட்டில் மட்டுமே. இந்திய அளவில், இராணுவ மரியாதை, அரசு மரியாதைகளைப் பெற்ற மூன்று நாத்திகர்களைக் கொண்ட நாடும் தமிழ்நாடு மட்டுமே.*

*இந்து மத வேதங்களையும், அவை உருவாக்கிய இந்துப் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங் களுக்கு எதிராக வாழ்ந்து - அவற்றுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து - கோடிக்கணக்கான மக்களின் வாழ்வில் விடுதலைக் கனலை உண்டாக்கி - இலட்சக் கணக்கான மக்கள் திரளோடு இறுதிப் பயணங்களை மேற்கொண்ட மூன்று தலைவர்களைக் கொண்ட நாடும் தமிழ்நாடு மட்டுமே.*

*இந்த வரலாற்றுச் சிறப்புகளை ஆயுதங்களாக்க வேண்டும். ஆரிய - திராவிடப் போரின் அடுத்த களங்கள் 2019 நாடாளுமன்றத் தேர்தலும், அதை அடுத்த வர உள்ள சட்டமன்றத் தேர்தலும் ஆகும். இன்றைய நிலையில் இந்தக் களத்தில் நமக்கு இருக்கும் ஒரே ஆயுதம் தி.மு.க. மட்டுமே. தி.மு.க செயல் தலைவர் ஸ்டாலின் அவர்களுக்குத் தோள்கொடுப்போம். பார்ப்பனப் பரம்பரைப் பகையை எதிர்கொள்ளும் அனைத்துத் தளங்களிலும் தளபதி ஸ்டாலின் அவர்கள் வெல்வதற்குத் துணை நிற்போம். அவருக்காக அல்ல. தி.மு.க.வுக்காக அல்ல. நமக்காக. நமது விடுதலைக்காக!*






கவிக்கண்ணன், இராஜஸ்தான்

# இராஜஸ்தானில் ஜாதிகள்

உலக நாகரிகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் சிந்துச்சமவெளி நாகரிகத்தின் பிறப்பிடமாக அறியப்படும் இடம் பாகிஸ்தான் தேசமும், இந்தியாவின் இராஜஸ்தான், குஜராத் பகுதிகளும் ஆகும். இப்படி உலக நாகரிகத்தின் பிறப்பிடமாகக் கருதப்படக்கூடிய இராஜஸ்தான் மாநிலம் இன்னும் சராசரி மனித நாகரீகத்துக்கே வரவில்லை என்பதுதான் அதிர்ச்சி கரமான உண்மையாக உள்ளது. நாம் தமிழ்நாட்டில் வாழ்ந்து வருவதால்தான் இந்த அதிர்ச்சி உருவாகிறது. வடமாநிலங்களில் வாழ்ந்திருந்தால் நமக்கு அந்நிலை பழக்கமானவைகளாக இருந்திருக்கும். தமிழ்நாட்டுச் சராசரி மக்களின் வாழ்க்கை நிலையை மனதில் எண்ணிக்கொண்டு, இராஜஸ்தானுக்குச் சென்று பார்ப்போம். அப்போது தான் தமிழ்நாட்டில் இயங்கும் திராவிடர் இயக்கங்களையும், திராவிட அரசியல் கட்சி களையும் புரிந்துகொள்ள முடியும்.

எப்படி மழை வரும்போது மண்வாசனையும் சேர்ந்து வருமோ - அதேபோல இராஜஸ்தானுக்குள் நுழையும்போதே சாதியின் அடக்குமுறையும், பார்ப்பனியப் பழக்கவழக்கங்களையும் உணர முடியும். இராஜஸ்தானில் சாதியப்பாகுபாடுகளை உணர, சாதாரணக் கண்களால் பார்ப்பதைவிட ஒரு ஆய்வாளராகப் பார்க்கும்போது பலதகவல்கள் கிடைக்கும். எனவே ஆய்வு மனப்பான்மையுடன் இராஜஸ்தான் மாநிலத்துக்குள் நுழைவோம்.

இராஜஸ்தான் இந்தியாவின் மிகப்பெரிய மாநிலம் என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவுக்கு ஜாதிய அடக்குமுறைகளும், பாகுபாடு களும் அதிகம். ஒட்டுமொத்த இந்தியப் பகுதிகளில் இருப்பதைப் போன்று இராஜஸ்தானிலும் ஜாதி 4 வர்ணங்களாகவும், ஆயிரக்கணக்கான ஜாதி களாகவும் உள்ளன. ஆனால், தமிழ்நாட்டைத் தவிர வட மாநிலங்களுக்குச் செல்லாதவர்களுக்கு 4 வர்ணங்களாக நாம் பிரிக்கப் பட்டிருப்பது புரியாது.

அங்கு, சமுதாயத்தின் முதல் அடுக்கில் முதலாவதாக, பார்ப்பனர்கள், அவர்களை அடுத்து, இராஜ்புத், பனியாக்கள் இருக்கிறார்கள். இந்த இரு பிரிவும் பொதுப்பிரிவாக இணைந்துள்ளனர். இவர்களை அடுத்து ஜாட், யாதவ் போன்றவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் கடைசியாக, மீனா, மேகவால் போன்ற தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிவகுப்பினர் அடக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற ஜாதி அமைப்பு உடைய ஜாதிப்பாகுபாடு என்ன நிலையில் உள்ளது என்று அறிய இராஜஸ்தானின் பள்ளிவகுப்பறைகளை நோக்கிச்செல்வோம். பொதுவாக, இராஜஸ்தானின் பள்ளிகள், கல்வி அமைப்புகள் பெரும்பாலும் ஜாதி அமைப்புகளுடன் பின்னிப்பிணைந்துதான் உள்ளன. இந்தக் கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாக, நான் நேரடியாகப் பார்த்த செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

நான் முதல்முதலாகப் பள்ளிக்குச் செல்லும் போது அங்கு உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் என்னிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டனர். முதல் கேள்வி. என்னோட பெயர் என்ன? உடனடியாக அடுத்த இரண்டாவது கேள்வி எனது சாதி என்ன? என்பது தான். இதில் வேடிக்கை என்ன என்றால் சில மாணவர்கள் அவர்களின் ஆசிரியர் களை உடன் வைத்துக்கொண்டே எனது ஜாதியைக் கேட்டனர். தமிழ்நாட்டில் இப்படி ஒரு நிலை நம் யாருக்கும் ஏற்பட்டிருக்காது.

இதைத் தவிர்த்து ஜாதிய வேறுபாடுகள் என்ற கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாகச் சில நிகழ்வு களை உங்களுடன் பகிர்கிறேன். இராஜஸ்தான் பள்ளிகளில் சாதி முறைகள் பல படிநிலைகளில் பின்பற்றப்படுகின்றன. வகுப்பறைகளில் உயர்சாதி வகுப்பினர் முன்வரிசையிலும், பிற்படுத்தப்பட்ட வர்கள் அடுத்ததாகவும், தாழ்த்தப்பட்டவர்கள் பின்வரிசையிலும் அமர வைக்கப்படுகின்றனர். முக்கியமாக, ஆசிரியர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர் களைத் தொடுவதும் இல்லை. பேசுவதும் இல்லை. குறிப்பாகத் தாராநகர் பகுதியில் நானே நேரில் கண்டேன். இதுபோன்ற நிலையையும் நாம் தமிழ் நாட்டில் பார்த்திருக்க மாட்டோம்.

பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட சாதிவகுப்பைச் சார்ந்த சமையல் பணியாளர் சமைத்தால் உயர்சாதி வகுப்பு மாணவர்கள் அங்கு உணவு உண்பது இல்லை. இந்தத் தகவல்களைச் சிலஆசிரியர்களும் மற்றும் சில கல்விஅதிகாரிகளும் எனக்குத் தந்தனர்.

அண்மையில், திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகில் உள்ள தி.க.பாளையத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண் சமைப்பதால், கவுண்டர்கள் உணவு உண்பதில்லை என்ற வன்கொடுமை வெளி வந்த போது, உடனடியாக, திராவிடர் இயக்கங் களும், முற்போக்கு அமைப்புகளும் களமிறங்கி, அந்நிலையை மாற்றினர்.

கடலூர் மாவட்டத்தில் ஒரு ஆசிரியர், ஒரு பள்ளியில் மாணவர்களைச் சாதி ரீதியாகப் பிரித்து வைத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. உடனடியாக அனைத்து அமைப்புகளும் களமிறங்கின. அந்த நிலை மாற்றப்பட்டது. இப்படிப்பட்ட எதிர்ப்போ, மாற்றமோ இராஜஸ்தானில் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாததாகும்.

அப்படியே பள்ளிகளை விட்டு கிராமப்புறப் பகுதிகளுக்குச் செல்வோம். கிராமத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால் ஒருவரியில் சொல்ல லாம். பள்ளிகளில் சாதி விளையாடுகிறது என்றால் கிராமத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? பரவாயில்லை. இருந்தாலும் சொல்கிறேன்.

ஆம். கிராமத்தில் சாதியப் பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும் மிக அதிகம். குறிப்பாக உதய்பூர், சூரு, பிரதாப்கர், பரத்பூர் போன்ற மாவட்டங்களில் சாதியக் கட்டமைப்புகள் அதிகம் காணப்படுகிறது. இந்த மாவட்டங்களின் ஜாதிய நிகழ்வுகளைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால் இரட்டைக் குவளைமுறை பின்பற்றப் படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களை உயர்சாதியினர் தொடக்கூட மாட்டார்கள். இங்கு ஏதெனும் ஒரு கலப்பு அல்லது காதல் திருமணம் நடந்துவிட்டால், அது நிச்சயமாகக் கொலையில்தான் முடியும். அதேபோல இந்த மாவட்டங்களில் சில இடங்களில் ‘காப்’ பஞ்சாயத்து எனும் கட்டப்பஞ்சாயத்துமுறை இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

தமிழ்நாட்டில், நடக்கும் ஆணவக் கொலைகள் செய்திகளாகின்றன. அதற்கு எதிர் வினைகள் நடக்கின்றன. ஆணவக்கொலை செய் பவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இராஜஸ் தானில் இவற்றைக் கனவு காணக்கூட முடியாது. பெரு நகரங்களில் சில எதிர்வினைகள் நடக்கலாம். பெரும்பாலான கிராமங்களில் எதிர் வினைகளை நினைத்துப்பார்க்க முடியாது.

பெண்களை அடிமைப்படுத்தும் செயல்களும் இராஜஸ்தானில் அதிகம் காணப்படுகிறது. இந்த நிகழ்வை எனது கண்ணால் பார்த்தேன். பெண் அடிமையாக உள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

உணவுமுறையில் கூட பெண் - ஆண் பாகுபாடு உள்ளது. அதாவது, ஆரோக்கியமான, சத்தான உணவு ஆணுக்கும் - அதில் குறைந்த மீதம் உள்ள உணவுதான் பெண்ணுக்கும் கொடுக்கப்படுகிறது. அதேபோல, குழந்தைத்திருமணம் அதிகமாக உள்ளது. மேலும் வீட்டில் உள்ள அனைத்து வேலை களையும் பெண்கள்தான் செய்யவேண்டும். ஆண்களை எதிர்த்துப் பேசக்கூடாது. அடுத்தவீட்டு ஆணைப் பார்க்கக்கூடாது. தெருவில் நடக்கும் போது சேலையால் முகத்தை மூடவேண்டும்.

குறிப்பாக, திருமணத்தில் பெண்கள் அவர் களின் உரிமையைச் சொல்ல உரிமைஇல்லை. பெண்கள் அதிகம் பள்ளி - கல்லூரிப் படிப்புக்குச் செல்வது இல்லை. இதுபோன்ற பெண் பாகுபாடும் அதிக அளவில் இங்கு உள்ளது. இதெல்லாம் தமிழ் நாட்டிலும் உள்ளதாக நினைக்கலாம். தமிழ்நாட்டு ஆணாதிக்கத்தைவிட, இராஜஸ்தானின் ஆணா திக்கம் மிக மிகக் கொடுமையானது.

இந்து மத ஜாதிக்கட்டமைப்பு, மாறாமல் அப்படியே நடைமுறையில் உள்ளது என்பதற்கு மேலும் ஒரு உதாரணம். இராஜஸ்தானில் ஒருசில மாவட்டங்களில் உயர்சாதியினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக்கூட மதிப்பதில்லை. இதை நான் பள்ளியில்கூடப் பார்த்தேன்.

உயர்வகுப்பு மாணவன் ‘ஜாட்’ வகுப்பைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மாணவனை ஏளனமாக “இவன் ஜாட்” எனக் கூறினான். அதேசமயம் ஜாட் மக்கள் அதிகம் உள்ள இடங்களில் அவர்கள் மற்ற வகுப்பினரை அடக்கி ஆள்வது போன்ற ஆணவத்திலும் வாழ்கின்றனர். இதுபோன்ற கொடுமைகளை ஒழிக்க உதவ வேண்டிய கல்வி நிறுவனங்களும், அரசியல்வாதிகளும் அதை ஆதரிப்பதுதான் வருத்தமான விஷயம். சமுதாயத்தின் நிலையைத்தான் கல்வி நிறுவனங் களும், அரசியல்வாதிகளும் பிரதிபலிக்கின்றனர். சமுதாய மாற்றத்தைத் தொடங்க வேண்டிய இடங்களிலேயே அதற்கான தடைகள் கடுமையாக இருப்பதை நேரில் பார்க்கும் போது, எதிர் காலத்தைப் பற்றிய அச்சம் கூடுகிறது.

தமிழ்வாணன்



# What's Sex and What isn't ??

சில நாட்களுக்கு முன் நம்மை உலுக்கிய செய்தி. அயனாவரத்தைச் சேர்ந்த 12 வயதுக் குழந்தையை 10 மாதங்களாக 17 பேர் போதை மருந்து கொடுத்து வன்புணர்வு செய்த செய்தி. அடுத்து இதைவிடக் கொடுமையான ஒரு செய்தி வரும்போது அயனாவரத்தை மறந்துவிடுவோம்.

ஏனென்றால், சென்ற வருடம் 8 வயதுக் குழந்தையை இளைஞன் ஒருவன் வன்புணர்ந்து கொன்ற சம்பவத்தை அப்படித் தானே மறந்தோம். கொடூரமான வன்புணர்வுச் செய்திகள் வெளிவரும்போது மட்டும் நாம் கொந்தளித்துப் போய் நியாயம், நீதி பேசுவதும் - மற்ற நேரங்களில் அடுத்த சேதி வரட்டும் என இருப்பதும்தான் நம் வாடிக்கை.

வன்புணர்வுக் குற்றங்கள் செய்தி கேட்கும் போதெல்லாம் பயங்கரக் கோபத்துடன், குற்றவாளிகளைத் தூக்கில்போட வேண்டும், ஆண்குறியை வெட்ட வேண்டும் என உணர்ச்சி வசப்படுவது நம் வெகுநாள் பழக்கம். இப்படி குற்றங்கள் வெளிவரும்போதெல்லாம் ஒவ்வொரு குற்றவாளிகளையும் தூக்கில் போட்டுவிடுவோம். மற்ற நேரங்களில் பாலியல் குற்றங்கள் பற்றிய பேச்சுக்களை தூக்கியே போட்டுவிடுவோம். சிந்திப்பதற்குச் சோம்பேறித்தனபடும் சமூகம் இப்படித்தான் இருக்கும்.

பாலியல் குற்றங்களை எப்படித் தடுப்பது எனக் கேட்டால், ஒன்று தண்டனை பற்றியும், இல்லை பெண்ணுக்கான கட்டுப்பாடுகளைப் பற்றியும் பேசி - நமக்கு நாமே கோபத்தைத் தீர்த்துக்கொள்வோம். இப்படித்தான் சில நாட்களுக்கு முன், பெண்ணின் உடையைக் காரணம் காட்டி சமாதானம் செய்து கொண்டிருந்தோம்.

அடுத்து நாயையும், ஆட்டையும், மாட்டையும் வன்புணர இவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். ஆம் அவர்களுக்குத் தூக்கு தண்டனை கொடுத்துவிடுவோம். இப்படியே தண்டனைகள் கொடுத்துக் கொண்டு இருக்கலாம். பெண்ணையும், ஆட்டையும், மாட்டையும், நாயையும் காப்பாற்றிவிடலாம்.

முதலில் நாம் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். இம்மாதிரியான குற்றங்கள் இப்போது அதிகம் நடக்கிறது எனச்சொல்வதைக் காட்டிலும், அதிகம் வெளிவர ஆரம்பித்துவிட்டது என்றே என்ன வேண்டும். எல்லாக் காலத்திலும், இது போன்ற பாலியல் குற்றங்கள் நடந்துகொண்டு தான் இருந்தன. ஏன், எருமையைத் துரத்தித் துரத்தி வன்புணர்ந்த ஆணின் கதையையும், நதிக்கரையில் பெண்களின் உடைகளைத் திருடிக்கொண்டு Blackmail செய்து பாலியல் கொடுமை செய்த ஆணின் கதையையும் காலம் காலமாக ரசித்துத் தானே கேட்டு வந்தோம்.

பாலியல் குற்றங்களையும், மற்ற குற்றங்களையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பதால் தான் தண்டனைகள் அக்குற்றங்களைக் குறைத்துவிடும் என்கிற எண்ணம் நமக்கு வருகிறது. பாலியல் குற்றங்கள்.. பால் உணர்வு, இணையீர்ப்பு போன்றவை உடலியல் அறிவியல் காரணிகளை வைத்து அணுக வேண்டியவை. இவைகளை வெறும் பயத்தால் வென்றுவிட முடியும் என நினைப்பது அறியாமையின் வெளிப்பாடு தான்.

முதலில் நாம் Rape என்பதை 'வன்புணர்வு' எனக் கூறுவதே பச்சை அயோக்கியத்தனம். Rape என்பதற்கான சரியான சொல்லை நாம் இன்னும் அமைக்கவில்லை. அதாவது வன்புணர்வு என்பது புணர்வின் கீழ் வராது. 'புணர்வு' என்பது என்ன என்பதைப் பற்றிய அறிவு நம் மக்களுக்கு இல்லை. அது மட்டுமல்லாது. பாலியல் பற்றிய அடிப்படை அறிவே இல்லாமல் தான் நாம் இருக்கிறோம்.

வன்புணர்வுகளின் ஆரம்பப் புள்ளியாக நான் ... "பெண்ணின் காம உணர்வுகளை மதிக்காமையும் உணராமையும்" என்றே கூறுவேன். 'புணர்வு' என்பது ஏதோ ஆணுக்கு மாத்திரமே சம்பந்தப்பட்ட விசயம் என்றும், பிள்ளை பெற்றுக்கொள்ளும் முறை என்றும்தான் நமக்குத் தெரியும். அதைத் தாண்டி நாம் அறிய விரும்புவதில்லை. கலாச்சாரம், பண்பாடு, மத ஒழுக்கம் என அறிவைப் பெறாமல் அப்படியே எருமையை வன்புணர்ந்த காலத்திலேயே இருக்கிறோம்.

ஆண், பெண் இருவரின் உடல் உறுப்புகள், பருவ மாற்றங்கள், ஹார்மோன்கள், கலவி, ஆர்கசம் என அடிப்படைப் பாலியல் அறிவுகூட நாம் பெறாமல் இருக்கிறோம். பெண்ணுக்கும் காம உணர்வுகள், உரிமைகள் உண்டு என நாம் புரிந்துகொள்ளாமல் இருப்பதால் தான், அது ஆணுக்கு மட்டுமேயானது என நினைக்கிறோம்.

சமூகத்தின் பல ஆண்கள் பெண்களைப் பயன்படுத்திக்கொள்ளத்தான் நினைக்கிறார்கள். பெண்களைப் பயன்படுத்திக்கொண்டு இன்பம் அடைவதுதான் புணர்வு என நினைக்கிறார்கள். மாறாக கலவி என்பது அதுவல்ல. இருவரும் இன்பமாய் இணைந்து, இருவரும் இன்பத்தைப் பெறுவதே கலவியின் அடிப்படை. இது தான் கலவி. மாறாக ஒருவர் மட்டுமே இன்பத்தை அனுபவிக்கும் எவ்விதமான கலவியையும் 'Rape' என்றே கூற வேண்டும். அதை காமத்தின் பட்டியலில் சேர்க்கவே முடியாது. இதைப் பற்றியெல்லாம் நாம் படிப்பதில்லை. சிந்திப்பதும் இல்லை.

ஆண் மட்டுமே இன்பம் அனுபவித்தால் போதும், என இருக்கிற சமூகத்தில் எத்தனை பேரை தூக்கில் ஏற்றினாலும் வன்புணர்வுகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

செய்திகளில் வெளிவருபவை சிறிய அளவுகள் தான். அதை விடப் பன்மடங்கான சம்பவங்கள் நடக்கின்றன. ஏன், நம் சராசரி வாழ்விலும் வன்புணர்வுகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. கணவன் மனைவி உறவிலும், காதலன் காதலி உறவிலும் கூட. ஆண் மட்டுமே பெருவாரியான கூடலில் இன்பம் அடைந்து, பெண்ணின் இன்பத்தைப் பற்றிக்கவலையே படாமல் நடக்கும் அவர்களுக்குள்ளான நிகழ்வுகள் கூட வன்புணர்வுகள் தான்.

பெண்ணை வெறும் பயன்பாட்டு பொருளாக எண்ணாமல் பெண்ணுக்கான உணர்வுகளை அறிந்து வாழும் வாழ்வில்தான் வன்புணர்வுகள் குறையும். டென்மார்க், சுவிஸ், ஃபின்லான்ட் போன்ற நாட்டு மக்களுக்கு பாலியல் தெளிவு இருப்பதால் தான், வன்புணர்வுகளற்ற சமூகமாக வாழ்கிறார்கள்.

வன்புணர்வு என்ற சொல்லோ, வல்லுறவு என்ற சொல்லோ, பலாத்காரம் என்ற சொல்லோ, கற்பழிப்பு என்ற சொல்லோ.... இச்சொற்களே வன்புணர்வைத் தாங்கி தான் நிற்கின்றன..

இவைகள் அணைத்தும் ஆணின் பக்கமிருந்து அக்காரியத்தை விவரிக்கும் சொற்களாகவே இருக்கின்றன. மாறாய், பெண்ணின் உணர்வுகளை மதிக்கும்படி Rape என்பதற்குத் தமிழில் சொல் இல்லை. குறைந்த பட்சம் இதை "உடலியல் வன்கொடுமை" என்றே கூற வேண்டும்.

Rape is not at all Sex என்பதை Sex என்பது என்ன என்று அறிந்தவர்களால்தான் உணர முடியும். ஒருவர் மாத்திரமே சுகம் அனுபவிப்பதும், மற்றொருவர் வெறும் பயன்பாட்டுப் பொருளாக இருப்பதும் கலவியே அல்ல என்பதை உணர வேண்டும். இதைப் பற்றிய பேச்சுக்கள், விவாதங்கள், எழுத்துகள் அதிக அளவில் நடந்தால்தான் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

இல்லையேல், ஆடைகளைக் காட்டி Blackmail செய்து சுகத்தை அனுபவித்துக்கொண்ட ஆண்கள், மொபைல் வீடியோக்களைக் காட்டிச் சுகத்தை அனுபவிக்கும் அளவு தொழில்நுட்ப அறிவு பெற்றிருப்பவர்களே ஒழிய..... ஒரு பாடும் பாலியல் அறிவு பெறாமல்.... எருமையை, ஆட்டைக்கூட வன் கொடுமை செய்யும் மிருகங்களாகவே தான் இருப்பார்கள்.



# விழுப்புரத்தில் பறையர்களின் பார்ப்பனியம்

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் அரும்பட்டு என்னும் கிராமத்தில் பெரும்பான்மையாகப் பறையர்களும், மிகமிகக் குறைவான எண்ணிக்கையில் சக்கிலியர்களும் வசிக்கின்றனர். வன்னியர்களும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வசிக்கின்றனர். அஜித்குமார் (19, கல்லூரி மாணவர்), சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்த மோனிஷா (17, பள்ளி மாணவி) பறையர் சமூகத்தைச் சார்ந்தவர். இருவரும் ஓராண்டுக்கு மேலாகக் காதலித்து வந்துள்ளனர்.

கடந்த 20.07.2018 அன்று இருவரும் ஊரைவிட்டு வெளியேறி விடுகிறார்கள். 27.07.2018 அன்று இரவு 20 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மது அருந்திவிட்டு அஜித்குமார் வீட்டில் அவர்களின் அண்ணி பாரதி என்பவரை அடித்து வீட்டில் உள்ள பொருட்களையெல்லாம் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர். அஜித்குமாரைக் கேட்டு மிரட்டியுள்ளனர். அவரது இரண்டு குழந்தைகளையும் அடித்துள்ளனர். பாரதி திருவெண்ணைநல்லூர் காவல்நிலையத்தில் வழக்கு கொடுக்கிறார். காவல் நிலையத்தில் வழக்கை எடுத்துக் கொள்ளவில்லை.

மறுநாள் காலையில் பெண்கள் இருபதுக்கும் மேற்பட்டோர் பாரதியையும் அவரின் குழந்தைகளையும் தாக்குகின்றனர். பெண்கள் துடைப்பம் போன்றவற்றைக் கையில் எடுத்து வந்துள்ளனர். பாரதியின் மகன் அதை விடியோ எடுத்துள்ளார். அதைப் பறிக்க முயற்சித்த போது அவர் ஜட்டிக்குள் போட்டு மறைக்கிறார். செல்போனைப் பறிப்பதற்காக அவரின் உயிர்நிலையை கசக்கி துன்புறுத்தி செல்போனை பறிக்கின்றனர். அவர் போனைக் கொடுத்துவிடுகிறார். பாரதியின் ஆடையை கிழித்துத் துன்புறுத்துகின்றனர். 28 ஆம் தேதி மதியம் பாரதி மற்றும் குழந்தைகள் முண்டியம்பாக்கம் மருத்துவ மனையில் அனுமதிக்கப் படுகின்றனர்.

29 ஆம் தேதி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. மோனிஷாவின் தந்தையும் மைனர் பெண்ணைக் கடத்தியதாக அஜித்குமார் மற்றும் அவரின் தாய், தந்தை மீது வழக்குக் கொடுத்துள்ளார். அஜித்குமாரின் பெற்றோர்கள் அருகிலுள்ள சமத்துவபுரத்தில் வசிக்கின்றனர். அவர்களின் வீட்டையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

**மைனர் பெண்ணைக் காதலிப்பது சரியா?**

இந்த ஜாதிவெறித்தாக்குதலை ஒட்டி சமூக வலைதளங்களில் மட்டுமல்லாது, முற்போக்கு பேசுகிற அமைப்புகள், ஜாதி ஒழிப்பு இயக்கங்கள், பொதுஉடைமை இயக்கங்கள் என அனைவரிடமும் ஒரு விவாதம் கிளம்பியுள்ளது. மைனர் பெண்ணைக் காதலிப்பதை நாம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? என்ற கேள்வி பரவலாக கேட்கப்படுகிறது. கண்டிப்பாக நாம் ஆதரிக்க முடியாது. அது எந்த சமூகப் பெண்ணாக இருந்தாலும் 18 வயது பூர்த்தி அடையாத காதலை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால் இங்கு சமூகத்தில் பெற்றோர்களால் முடிவு செய்யப்படும் திருமணங்களில் பெரும்பாலும் பெண்ணின் வயது 18 க்கும் குறைவுதான். ஆனால் அப்படி நடக்கும் திருமணங்கள் வயது குறைவு காரணமாக நிறுத்தப்பட்டதாகச் செய்தி மிகக் குறைவாகக் கூட வருவதில்லை. காதல் திருமணம் என்று வருகின்ற போதுதான் அவர்கள் எந்தச் சமூகமாக இருந்தாலும் வயதைக் காரணம் காட்டுகிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மீது பலமுறை இந்தக் குற்றச்சாட்டை வைத்துள்ளனர். அப்போது அமைதியாக இருந்த பலர் இப்போது வயதைக் காரணம் காட்டுகின்றனர்.

பெரியார் தொண்டர்களைப் பொறுத்தவரை உரிய வயது வராமல் நடக்கும் எந்தத் திருமணத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. இப்படி இரண்டுங்கெட்டான் வயதில் ஏற்படும் காதல்களை, ஈர்ப்புகளை எப்படி அணுகுவதென்று மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கண்டிப்பாக பாலியல் கல்வி, பாலின சமத்துவம் போன்றவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும். ஜாதி ஒழிப்புப் பிரச்சாரத்திற்கு எந்த விதத்திலும் குறைவில்லாததுதான் பாலின சமத்துவம் பற்றிய பரப்புரையும் ஆகும்.

### ஜாதீயத் தாக்குதல் இந்து உளவியல்

வயது குறைவு மட்டும் காரணமாக இருந்தால், காணாமல் போனவுடன் வழக்குக் கொடுத்து பிரச்சனையைப் பேசி இருவரையும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கலாம். ஆனால் இங்கு பார்ப்பனிய உளவியல் அனைவரின் மண்டைக்குள்ளும் இருக்கிறது. அதே கிராமத்தில் பறையர்-வன்னியர் ஜாதி மறுப்பு நடந்துள்ளதாகவும் கூறுகிறார்கள். அவர்கள் அதே ஊரிலே வசித்தும் வருகின்றனர்.

சக்கிலியர்களை மட்டும் வீடு புகுந்து தாக்கு வதற்கான காரணம் எளியவர்களாகவும் வலிமை குன்றியவர்களாகவும் சமூகத்தின் அடித்தட்டில் இருப்பவர்களாகவும் இருப்பதால்தான். இந்து மதம் விதைத்த பார்ப்பனிய நஞ்சு ஒவ்வொரு ஜாதிக்குக் கீழேயும் ஒரு ஜாதி இருக்க வேண்டும் என்ற மனநிலை தான்.

பள்ளர், பறையர், சக்கிலியர் என்று சொல்லப்படும் பட்டியலின மக்களுக்குள் வரும் பிரச்சனைகளை அவர்களின் சமூக ஒடுக்குமுறையின் அளவை வைத்துக் கருத்து தெரிவிக்கும் அனை வரையும் பிற்படுத்தப்பட்ட ஜாதி வெறியராகக் குற்றம் சுமத்துகிறார்கள். பட்டியலின மக்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதாக சொல்கின்றனர்.

மேற்கண்ட பிரச்சனையில் மோனிஷாவின் தந்தை

“ஒருசக்கிலிப் பயலோடு ஓடிப்போய்ட் டான்னு கேவலமா இருக்கு”

என்று கூறுகிறார். இந்த உளவியலை மாற்ற வேண்டும். இதே உளவியல்தான் நாயக்கன் கொட்டாய் வன்னியர்களிடமும் உள்ளது. கோகுல்ராஜைக் கொன்ற கவுண்டர்களிடமும் உள்ளது. பார்ப்பனரின் முன்னால் அனைவரும் சூத்திரர்களே.

மேலும் ஆர்.எஸ்.எஸ். ஒரு திட்டமிட்ட வேலையைச் செய்து அதில் வெற்றியும் பெற்றுள்ளது. அதுதான் இந்து மதத்தின் எதிரி யாகவும், ஜாதி ஒழிப்பின் அடையாளமாகவும் இருந்த நமது தலைவர் அம்பேத்கரை அப்புறப் படுத்திவிட்டு அந்த இடத்தில் பள்ளர், பறையர், சக்கிலியர் சமூகங்களின் பெயரால் இந்து மன்னர்களுக்குத் தளபதிகளாக இருந்தவர்களை முன்னிறுத்தி ஒவ்வொரு சமூகத்திற்கும் உயர் குடியாக்கச் சிந்தனையை விதைத்துள்ளது. தெரிந்தோ தெரியாமலோ நமது இயக்கங்களும் அதற்குப் பலியாகி உள்ளன.

தன்னை பெரிய ஜாதி, ஆண்ட பரம்பரை என்ற சிந்தனை யாருக்கு வந்தாலும் தனக்குக் கீழே ஒரு ஜாதி வேண்டும் என்ற மனநிலைக்குத் தள்ளப் படுகின்றனர். அமைப்புகள் “நாங்கள் பூர்வ பவுத்தர்கள்“ என்று மேடை தோறும் சொன்னாலும் மக்கள் இந்துக்களாகத்தான் உள்ளனர். அவர்களின் இந்து மனநிலையை மாற்றாமல் சமத்துவத்தை அடைய முடியாது.

### இயக்கங்களின் போக்கு

சமுதாய அக்கறை உள்ள ஜாதி ஒழிப்பு இயக்கங்கள், தங்கள் அளவுகோலை மாற்றிக் கொள்ள வேண்டும். பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் செய்கின்ற வன்கொடுமைகளையும், ஆணவக் கொலைகளையும் கண்டிக்கிறவர்கள் பட்டியலின மக்களுக்குள் வரும் பிரச்சனைகளைக் கண்டும் காணாமலும் நகர்ந்து செல்கின்றனர். பார்ப்பனிய உளவியல் பிற்படுத்தப்பட்டவரிடம் இருந்தால் அது எவ்வளவு கண்டனத்துக்குரியதோ அதே அளவுக்கு பட்டியல் சமூகங்களுக்குள்ளும் இருக்கக் கூடாது என்பதே சரியான நிலையாகும்.

**இப்படிப்பட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டினால் நட்பு சக்திகள் கோவித்துக் கொள்வார்கள் என்ற மனநிலைதான் அனைவரிடமும் உள்ளது. சரியானவற்றைச் சுட்டிக் காட்டினாலே கோபித்துக் கொள்வார்கள் என்றால் அவர்கள் எப்படி நட்பு சக்தியாக இருக்க முடியும்?**

பெரியார், அம்பேத்கர் போன்ற தலைவர்கள் படங்களைத் தங்கள் இல்ல விழாக்களிலும், ஊர் நிகழ்வுகளிலும் போட்டுக் கொண்டு அவர்கள் சொன்ன தத்துவத்திற்கு எதிராக இருப்பது எப்படிச் சரியாகும். நாம் “தலைவர்கள் வாழ்க, தத்துவம் ஒழிக” என்ற மனநிலையை மாற்றி யார் தவறு செய்தாலும் கண்டிப்பதற்கும் போராடுவதற்கும் தயங்கக்கூடாது.

**அனைத்து அமைப்புகளும் அவரவர் பகுதிகளில் ஜாதி ஒழிப்புச் சிந்தனையை, அதுவும் சுயஜாதி ஒழிப்புச் சிந்தனையை வளர்த்தெடுக்க வேண்டும். பட்டியலின மக்களிடம் தாங்கள் இந்துக்கள் அல்ல என்ற முழக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.**

மழலையர் வகுப்பிலிருந்தே ஆண், பெண் இருவரையும் கலந்து அமர வைப்போம். பாலின சமத்துவத்தையும் பாலியல் கல்வியையும் கற்றுக் கொடுப்போம். தெளிவான புரிதலோடு ஜாதி, மதம் கடந்து உருவாகும் காதலை ஆதரிப்போம். அகமணங்களை அழித்தொழிப்போம். ஜாதிய உளவியலோடு யார் செயல் பட்டாலும் அவர்களைக் கண்டிப்போம்.

இராவணன்



# பறையர்களைக் காவு வாங்கிய 'தைப்புரட்சி'

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் மேலவளவு கிராமத்தில் இருந்து 4 கி.மீ தூரத்தில் உள்ளது பட்டூர் கிராமம். இங்கு பறையர் சமூகத்தினர் 350 வீடுகளும், மூப்பனார் சமூகத்தினர் 400 வீடுகளும், கள்ளர் சமூகத்தினர் 30 வீடுகளும் உள்ளன. கடந்த 31.07.2018 மாலை சபரீஸ்வரன் (21) என்னும் பறையர் சமூக இளைஞன் குளிக்கச் சென்ற போது அவரை வழி மறித்து எட்டுப் பேர் கொண்ட கும்பல் பட்டூரின் வயல்வெளிப் பகுதியில் மார்பிலும் மற்றும் பல இடங்களிலும் குத்திக் கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். இந்தக் கொலையில் ஜாதி வெறி அமைப்புகளின் தூண்டுதல் இருப்பதாகக் கோரி பட்டூர் மக்களுடன் விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அமைப்புகள் குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி போராடிக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாகத் 'திருமாறன்ஜி' என்பரின் தென்னிந்திய ஃபார்வர்ட் பிளாக் என்னும் அமைப்பு உடந்தை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கனவே திருமாறன் போன்றோர் ஆர்.எஸ்.எஸ் போன்ற மதவெறி அமைப்புகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு, மதுரைப் பகுதியின் அமைதியை சீர் குலைக்கின்றார். இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரும் கைது செய்யப் பட்டு கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

ஒரு கொலை அது நடந்தவுடன் குற்றவாளி களைக் கைது செய்யச் சொல்லி ஆர்ப்பாட்டம், போராட்டம் கண்டிப்பாக அவசியமானதே. அதே நேரத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் இனி தொடராமல் இருப்பதற்கு ஜாதி ஒழிப்பில் நம்பிக்கை உள்ள இயக்கங்கள், திரைப்படத் துறையினர், ஊடகங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### ஜல்லிக்கட்டும் இளவட்டக்கல்லும்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பட்டூர் பகுதியில் தென்னிந்திய ஃபார்வர்ட் பிளாக் (திருமாறன் ஜி) என்ற அமைப்பைச் சேர்ந்த குணபாலன் என்பவர் கரிகாலன் என்பவரின் ஆதர வோடு தங்கள் கொடியை ஏற்ற முயற்சித்துள்ளனர். அப்போது சபரீஸ்வரன் மற்றும் இளைஞர்கள் கூடி ஜாதி அமைப்புக் கொடியை இங்கு ஏற்றக்கூடாது என்றும் அப்படி ஏற்றினால் ஊரின் அமைதி கெடும் என்றும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதற்கு கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த குணபாலன் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

“நீங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் இப்படி செய்கிறீர்களா? பார்த்துக் கொள்கிறோம்” என்று மிரட்டிவிட்டுச் சென்றுள்ளார். இந்த வன்மம் தொடர்ந்துள்ளது. கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு பட்டூரில் 'இளவட்டக்கல்' தூக்கும் நிகழ்ச்சி நடந்துள்ளது. அதில் சில பறையர் சமூக இளைஞர்கள் கலந்து கல்லைத் தூக்க முயற்சி செய்துள்ளனர். அதற்கு “இந்தக் கல் எங்கள் ஜாதிக்குச் சொந்தமானது, மற்றவர்கள் தொடக் கூடாது” என்று கூறி ஜாதியைச் சொல்லி திட்டியுள்ளார் குணபாலன். அதைச் சபரீஸ்வரன் தட்டிக் கேட்டுள்ளார்.

கடந்த ஜூலை 31 ஆம் தேதி காலையில் மேலவளவு பகுதியில் ஜல்லிக்கட்டு விழா நடந்துள்ளது. அதைக் காண்பதற்காகச் சபரீஸ்வரன், நாகராஜ், அண்ணாமலை, ஆனந்தகுமார் உள்ளிட்டோர் சென்றுள்ளனர். அங்கே குணபாலன், அஜித்குமார் ,சுதர்சன், கார்த்திக் ஆகியோர் “இது எங்கள் ஜாதிக்கான திருவிழா, இங்கு நாங்கள் மெஜாரிட்டியாக இருக்கின்றோம். இங்கு உங்கள் வேலையைக் காட்ட முடியாது” என்று கூறித் தகராறில் ஈடுபட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக அன்று மாலை சபரீஸ்வரன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

### மேலூர் பகுதி கள்ளர்களின் ஜாதி வெறி

மேலூர் பகுதி பெரும்பான்மையாகக் கள்ளர் சமூகமக்கள் வசிக்கக்கூடிய பகுதி ஆகும். இப்பகுதியில் உள்ள மேலவளவில்தான் முருகேசன் என்ற தலித் பஞ்சாயத்துத் தலைவர் 1997 ஆம் ஆண்டு வெட்டிக் கொல்லப்பட்டார். இப்பகுதியில் இன்னும் நாடு முறை நடைமுறையில் உள்ளது. கிராமப் பகுதிகளில் கூச்சமே இல்லாமல் பள்ளன், பறையன், சக்கிலி, அம்பட்டன், நாவிதன் என்று ஜாதிப்

பெயரைச் சொல்லி அழைக்கும் பழக்கம் இன்னும் உள்ளது. கந்து வட்டிக் கொடுமை மிக அதிகமாக உள்ளது. அதில் பாதிக்கப்படும் தலித் மக்கள் குறிப்பாக பெண்கள் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

மேலூருக்கு அருகில் வெள்ளளூர் என்று ஒரு பகுதி உள்ளது. இப்பகுதியின் பெயரே வெள்ளளூர் நாடு என்றுதான் அழைக்கப்படுகிறது. வெள்ளளூர் பகுதியில் 80 சதவீத மக்கள் கள்ளர்களாகவே உள்ளனர். இந்தப் பகுதியில் ஒடுக்குமுறை அதிகமாக உள்ளது. மேலும் வெள்ளளூர்ப் பகுதியில் ‘வல்லடிக்காரர்’ என்ற கள்ளர்களின் குலதெய்வக் கோவில் உள்ளது. இங்கே தான் தேர்தல் நேரத்தில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்வார்களாம். இங்கே முடிவு செய்த பின்பு யாரும் மாறி வாக்களிக்க மாட்டார்கள் என்று கூறப் படுகிறது. பல அரசியல் தலைவர்கள் இங்கே வந்து இங்குள்ள தலைவரிடமும் பூசாரியிடமும் ஆதரவு கேட்டுச் செல்வார்கள்.

ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் வெளியூர் சென்று படிக்கக்கூடாது என்று சட்டமாகவே வைத்துள்ளார்கள். இப்போது அது மாறிவிட்டது. அமைப்பாக இல்லாத மக்களாகிய நாவிதர், வண்ணார், குயவர் போன்றவர்கள் இவர்களின் அடக்குமுறையில் அதிகம் பாதிக்கப்படு கின்றனர். மேலூரில் இருந்து நான்கு கி.மீ அருகில் உள்ள கள்ளம்பட்டி என்னும் ஊரில் ஆறு மாதங் களுக்கு முன்பு ஒரு கோவில் திருவிழா நடைபெற்றது. அதில் கோலப்போட்டி நடந்துள்ளது. அதில் கோலம் பெரிதாகப் போட்டதாகவும், புள்ளி கள்ளர் சாதியினர் போட்ட கோலத்தில் கலந்து விட்ட தாகவும் கூறிச் சண்டையாகி அடிதடியில் முடிந்தது. இப்படி மேலூர்ப் பகுதி முழுக்கவே தினம் தினம் ஜாதிய ஒடுக்குமுறை நடக்கின்றது. அது எங்கேயும் பதிவிலே வராமலே அன்றாட அவமானங்களாக அரங்கேறுகிறது.

## ஜல்லிக்கட்டு என்னும் ஜாதிக்கட்டு

இந்தியக் கிராமங்கள் ‘ஊர்’ என்றும், ‘சேரி’ என்றும் கிழித்துப் போட்ட மாதிரி பார்ப்ப னியத்தால் பிரிந்து கிடக்கிறது. வாழ்விடம், வழிபடும் இடம் முதற்கொண்டு செத்தபிறகு புதைக்கும் சுடுகாடு வரை, தனித்தனியாகவே இருக்கின்றன. ஆனால் ஜல்லிக்கட்டு மட்டும் ஒற்றுமையாக நடப்பதாக நம்மிடையே கலாச்சாரக் காவலர்கள் கம்பு சுத்துகிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் ஜல்லிக்கட்டு நடக்கும் போதெல்லாம் ஜாதிய மோதல்கள் நடந்து வருகின்றன. சென்ற முறை சிவகங்கை பகுதியிலும், தேனி மாவட்டத்தில் உள்ள வையம்பட்டி பகுதியிலும் நடந்தது. இவை செய்தித் தாள்களில் வந்ததால் தெரிந்தது.

மேலூர் பகுதியில் நமது களஆய்வின் போது அங்கு பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் ஜல்லிக்கட்டு நடப்பதாகவும் அங்கு தாழ்த்தப் பட்டோர் மாடு பிடிக்க முடியாது என்றும் கூறினர். மேலவளவில் வேடிக்கை பார்க்கச் சென்றவரிடம் தானே சண்டை இழுத்துள்ளார்கள். இங்கே ஜல்லிக்கட்டு நடந்தாலே சண்டை வரத்தான் செய்யும் என்கின்றனர் மக்கள். ‘தைப்புரட்சி’ என்று பேசியவர்கள் கொஞ்சம் கண்ணைத் திறந்து மேலவளவைப் பாருங்கள். உங்கள் பண்பாட்டுப் புரட்சியில் வாழவேண்டிய 21 வயது இளைஞன் சாகடிக்கப்பட்டுள்ளான். இதற்கு மேலாவது பெரியாரிஸ்ட்டுகள், இடதுசாரிகள், அம்பேத் கரிஸ்ட்டுகள் ஜல்லிக்கட்டு போன்ற விழாக்களை தடை செய்யச் சொல்லி அரசை வலியுறுத்த வேண்டும்.

## ஜாதீயை வளர்க்கும் திரைப்படங்கள்

இன்றைக்குத் தமிழ் சினிமாவில் பல இயக்குநர்கள் தங்கள் மண் சார்ந்த வாழ்வியலைப் படம் பிடிப்பதாகக் கூறிக் கொண்டு பழமை வாதத்தைப் பாதுகாப்பதும், ஜாதியத்தை உயர்த்திப் பிடிப்பதுமே தங்களின் வேலையாக உள்ளனர். கமலஹாசன், பாரதிராஜா, முத்தையா போன்ற இயக்குநர்கள் கள்ளர் மற்றும் அகமுடையார், மறவர் சமூகத்தினரைப் பற்றி எடுக்கும் படங்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர். தேவர்மகன், கிழக்குச் சீமை தொடங்கி மதயானைக்கூட்டம், கொம்பன் என அனைத்தும் ஜாதியத்தை நிலை நிறுத்தும் படங்களாக இருக்கின்றது. அப்படங்களைத் தங்களுக்கான அடையாளமாக இளைஞர்கள் சுவரொட்டிகளில் வெளிப்படுத்துகின்றனர். ஆபாசக் காட்சிகளைத் தணிக்கை செய்வது போல, சமூகத்தின் ஆபாசமாக இருக்கும் ஜாதியை வைத்துப் படம் எடுப்பதைத் தணிக்கையில் தடை செய்ய வேண்டும்.

## கலாச்சாரக் காவலர்களாக மாறும் முற்போக்குவாதிகள்

சமூகத்தில் நிலவும் ஜாதியை ஒழிப்பதாகச் சொல்லும் பல இயக்கத்தினர்கூட, பாரம்பரியம், பண்பாடு என்ற பெயரில் ஜாதியை நிலை நிறுத்தும் நிகழ்வுகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். குறிப்பாக குல தெய்வம், கிராம தெய்வ வழிபாடுகள் முழுக்க முழுக்க ஜாதியைக் காப்பாற்றுகின்றன. ஆனால் அவற்றை நாங்கள் எதிர்த்துப் பேச மாட்டோம் என்றும் - அது நமது தமிழர்களின் கலாச்சாரம் என்றும் கூறுகிறார்கள். ஜாதிய மோதல்களில் நடந்த கொலைகள், தாக்குதல்கள் பெரும்பாலும் கோவில்களையும் வழிபாடுகளையும் மையமாக வைத்தே இருக்கிறது.

மேலும் பூப்பு நன்னீராட்டு விழா, காதுகுத்து விழா போன்ற மூடநம்பிக்கைகள் நிறைந்த விழாக்களையும் ஆதரிக்கின்றனர். கலாச்சாரம், பண்பாடு என்ற பெயரில் மக்களைப் பின்னோக்கி அழைத்துச் செல்லாமல், சமூக மாறுதல்களை உள்வாங்கி ஜாதியை நிலை நிறுத்தும் பண் பாடுகளுக்கு எதிராக மாற்றுப் பண்பாடுகளை முன் வைக்க வேண்டும். மேலூர் போன்ற பகுதிகளில் பண்பாட்டு மாற்றத்திற்கான பரப்புரையும், விழாக் களையும் முன்னெடுக்க வேண்டும்.

### கள்ளர்கள் ஆதிக்க ஜாதியா? அடிமை ஜாதியா?

கள்ளர் சமூகத்தினர் தங்களை ஆண்ட பரம்பரை என்று நினைத்துக் கொண்டும், நாடே தங்களைக் கண்டு பயப்படும் அளவிற்கு வீரமான ஜாதி என்றும் நினைத்துக் கொண்டும் உள்ளனர். ஆனால் சமூகத்தில் அவர்கள் பார்ப்பனர்கள் விதைத்த நஞ்சால் சூத்திரர்களாக மட்டுமல்லால் குற்றப் பரம்பரையாகவும் வாழ்கிறோமே என்ற குற்ற உணர்ச்சி அற்றவர்களாகவும் இருக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால் குற்றப்பரம்பரை என்பதைப் பெருமையாகப் பார்க்கின்றனர். உண்மையில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் பொருளாதாரம், கல்வி, என அனைத்திலும் பின்தங்கியுள்ளவர்களாக உள்ளனர்.

இவ்வளவு பெரிய சமூகத்தில் இன்னும் ஒருவர் கூட உயர் நீதிமன்ற நீதிபதியாக வரவில்லை. ஐ.ஐ.டி போன்ற உயர் கல்வி பற்றிய புரிதல் இல்லை. திருமாறன் போன்ற கிரிமினல்கள் தலைவர்களாக வருவதற்கு இவர்கள் அடியாட்களாகப் பயன் படுகின்றனர். இவர்களிடம் ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு பி.ஆர்.பி.போன்றோர் நிலங்களையும், உழைப்பையும் சுரண்டுகின்றனர். இவர்களின் முரட்டுத்தனத்தை திரைப்படத்துறையினர் தங்கள் இலாப வெறிக்குப் பயன்படுத்துகின்றனர்.

### ஜாதி ஒழிப்பு இயக்கங்களின் கடமை

பாதிக்கப்படும் மக்களுக்கு ஆதரவாக நாம் இருப்பதும் அவர்களின் மீது நடத்தப்படும் வன்கொடுமைகளையும், கொலை முதலிய சமூகக் குற்றம் செய்பவர்களைத் தண்டிக்கத் துணை நிற்பதும் ஜாதி ஒழிப்பு இயக்கங்களின் கடமை யாகும். அதே நேரத்தில் பார்ப்பனியச் சமூகக் கட்டமைப்பில் பின்தங்கியுள்ள ஒரு சமூகத்தின் அறியாமையைச் சுட்டிக்காட்டி - நீயும் அடிமைதான் என்று உணர வைத்து, உன் உழைப்பைச் சுரண்டும் பார்ப்பன அதிகார வர்க்கத்திற்கு எதிராக அணி திரள வேண்டிய அவசியத்தை உணர வைக்கும் பொறுப்பும் நமக்கு உள்ளது.

பிற்படுத்தப்பட்ட மக்களின் அறியாமையை, அவர்களின் ஜாதி வெறியை அவர்கள் பகுதிக்கே சென்று உணரவைத்து அவர்களைத் திருத்தும் கடமை மார்க்சிய, பெரியாரிய இயக்கங்களின் கடமையாகும். அவர்கள் எதை வீரம் என்கிறார் களோ அது முட்டாள்தனம் என்று புரிய வைக்க வேண்டியது திரைப்படத்துறையினரின் கடமை யாகும்.

**(இக்கட்டுரைக்கான தகவல்களைத் திரட்டிக் கொடுத்த, திராவிடர் விடுதலைக்கழக மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் மா.பா.மணிகண்டன் அவர்களுக்கும், மின்னம்பலம் மின்இதழுக்கும் காட்டாறு குழுவின் நன்றி)**

# கருஞ்சட்டைக்கு, கதர்ச்சட்டையின் பாராட்டு

அன்பு நிறை காட்டாறு ஆசிரியர் அவர்கட்கு, வளர்க நட்பும் நலமும் அன்பும் அறமும் எமது சந்தா ஜீலை இதழ் கிடைத்தது.அட்டைப்படம் என் நெஞ்சில் பதிந்த அற்புதமான படம். பெருந்தலைவர் எளிய மனிதர்களின் குரலைத் தலை சாய்த்துக் கேட்கும் பல செய்திகளை சொல்லாமல் சொல்லும் படம். இதில் உள்ள ஒவ்வொரு முகமும் நம் அனுக்கமான மனிதர்கள். சரியான தேர்வு, சரியான தலைப்பு. தந்தை பெரியார் ஒரு 10 ஆண்டுகள் காமராஜரை பட்டி தொட்டியெங்கும் கொண்டு சேர்த்தவர்.

திரு.கோபண்ணா எழுதித் தொகுத்த "பெரியாரும் பெருந்தலைவரும்" என்ற நூல் பலருக்குக் கொடுத்துள்ளேன். தமிழ்தேசியக் கட்சி ஈ.வெ.கி.சம்பத் தலைமையில் காமராஜரோடு இணைந்த பின்பும் திராவிட இயக்கத் தோழர்கள் பலர் காமராஜரோடு பயணித்த காலம் ஒரு பொற்காலம். இத்துடன் சீர்காழி எத்திராஜ் என்ற தி.க. தலைவர் எழுதிய கட்டுரையை அனுப்பியுள்ளேன். காமராஜரின் கடவுள் நிலைபாடும் பெரியார் தாக்கமும் வெளிப்பட்டுள்ளது. காட்டாறு இதழ் பல செய்திகள் மிகத் தெளிவாக காலத்திற்கேற்ற வகையில் வாசிக்கக் கிடைக்கிறது. மிக்க நன்றி.பாராட்டுக்கள்.

அக்டோபர் 2 காமராஜர் நினைவு நாள் மாதத்தில் காமராஜரைக் கொலை செய்ய சு.ளு.ளு. கூட்டம் செய்த படுபாதகத்தையும் சீர்காழி எத்திராஜ் கருத்தையும் இணைத்து ஒரு கட்டுரையை நீங்களே தயார் செய்து வெளியிட்டால் பொருத்தமாக இருக்கும். ஜாதி மத வேறுபாடற்ற சமநிலை சமுதாயம் படைக்க உங்கள் முயற்சி வெல்க.

அன்பன், வே.முத்துராமலிங்கம்,
தலைவர் - காமராஜ் நினைவு மன்ற அறக்கட்டளை,
முன்னாள் தலைவர்,
மங்கலம் ஊராட்சி, திருப்பூர்.


## வாழ்விணையர் தேவை

வயது-48-பெண்
சட்டப்படி விவாகரத்தானவர்-
மகள்-திருமணமாகிவிட்டது.
கல்வி –M.A, M.Phil
தொழில்-டியூசன் சென்டர்
எதிர்பார்ப்பு-
கல்வித்தகுதி முக்கியமானதல்ல,
பெரியாரியல் கொள்கையில் முழு ஈடுபாடு
உடையவராக இருத்தல் வேண்டும்.
தொடர்பு எண்கள்-98655-24094, 81109-69860

அதி அசுரன்

# களவுபோனவை இழிவுச் சின்னங்களே!




'தமிழர் தொல்லியல் சிலைகள் மீட்புப்' பொதுக்கூட்டம். இப்படி ஒரு அறிவிப்பை ஆர்.எஸ்.எஸ்.ஸோ, இந்து முன்னணியோ வெளியிட வில்லை. தமிழ்த்தேசியம் பேசும் மே 17 இயக்கம் வெளியிட்டுள்ளது. நாம் தமிழர் கட்சிக்கும், மே 17 க்கும் பெயர் மட்டுமே வேறுபாடு என்று பல பெரியாரியத் தோழர்கள் அவ்வப்போது கூறி வருவதை உறுதிப்படுத்தியுள்ளது மேற்கண்ட அறிவிப்பு.

"மேற்குலகில் டாவின்சி, மைக்கலேஞ்சலோ போன்ற சிறப்பான ஆளுமைகளின் படைப்புகளுக்கும் மேலான, அவர்களுக்கும் முந்தைய காலத்தில் உலோகத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட சிலைகள் களவு போகின்றன."

இந்தத்தகவல் அந்தப் பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது. இதை மேலோட்டமாகப் பார்த்தால் சரியாக இருப்பது போலத் தோன்றும். இவர்கள் எடுத்துக்காட்டியுள்ள டாவின்சி, மைக்கலேஞ்சலோ இருவரது ஓவியங்களையும், இவர்களது வரலாறுகளையும் பார்த்தால், சில உண்மைகள் புரியும்.

லியனார்டோ டாவின்சி இத்தாலியைச் சேர்ந்த மிகச் சிறந்த கிறிஸ்தவர். ஓவியர், பொறியாளர், மருத்துவ அறிவியலிலும் நிபுணர். பொறியியல், மருத்துவம், உடலியல் சார்ந்த ஏராளமான ஓவியங்களை உருவாக்கியுள்ளார். ஆனால், டாவின்சி மிகப்பெரிய ஓவியராகப் புகழ்பெற்றது, இயேசு தனது சீடர்களுடன் உணவருந்தும் காட்சியுள்ள ஓவியத்தால் தான். இந்த ஓவியம் உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ நிறுவனங்களிலும் இன்றும் முக்கிய இடத்தில் சிறப்பிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இதுபோல கிறிஸ்தவ ஆலயங்களிலும், கிறிஸ்தவ மத நிறுவனங்களிலும் ஏராளமான ஓவியங்களை வரைந்து உலகப்புகழ் பெற்றார்.

மற்றொருவர் மைக்கலேஞ்சலோ. இவரும் இத்தாலியைச் சேர்ந்தவர், கிறிஸ்தவர். இந்த மிகச்சிறந்த ஓவியர், 'மிகச்சிறந்த ஓவியர்' என்ற நிலைக்கு வந்ததற்கு முக்கியக் காரணம் அவர் வரைந்த கன்னிமேரி, இயேசுநாதர் ஓவியங்கள் தான். அவை கனடாவின் க்யுபெக் நகரில் உள்ள தேவாலயத்தில் உள்ளன. இவரது பெயரை வரலாற்றில் நிலைக்கச்செய்த ஓவியம் 'இறுதித் தீர்ப்பு' (The Last Judgement) என்ற கிறிஸ்து வரலாற்று ஓவியமாகும். இந்த ஓவியம் ரோமில் உள்ள கிறிஸ்தவர்களின் உலகத் தலைநகரான 'வாட்டிகன்' நகரில் இன்றும் பெருமையுடன் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அங்குள்ள சிஸ்டைன் சேப்பல் (Sistine Chapel) என்ற ஆலயத்தின் ஓவியங்கள் அனைத்தும் மைக்கலேஞ்ச லோவால் உருவாக்கப்பட்டவைதான்.

இந்துமதக் கடவுளர்களின் சிலைகள் களவுபோனதைக் கண்டித்து நடக்கும் நிகழ்வின் அறிவிப்பில் கிறிஸ்தவ மத ஓவியர்களையும், கிறிஸ்தவ மத ஓவியங்களையும் எதிர்நிலையில் நிறுத்துவது ஏன்? அவர்களது ஓவியங்களைவிட இவை மேலானவை என்ற ஒப்பீடு எதற்காக?

எதையாவது ஒன்றை எதிர்நிலையில் நிறுத்த வேண்டும் அல்லது ஒப்பீடு செய்து காட்ட வேண்டும் என்றால்கூட, இந்து மதத்தில் பார்ப்பனர்களால் புகழப்படும் இரவிவர்மனின் ஓவியங்களை எதிர் நிலையில் நிறுத்தியிருக்க வேண்டும். அந்தப் பார்ப்பன இரவிவர்மன் தான் மகாபாரத, இராமாயணங்களுக்கு ஓவிய வடிவம் கொடுத்தவர். இன்று இந்துக்கள் கடவுளாக வணங்கும் பெரும்பாலான கடவுள்களுக்கு உருவம் கொடுத்தவரும் இரவிவர்மன் தான். இந்திய ஓவியர்களில் உலகப்புகழ் பெற்றவரும் அவர்தான்.

ஒப்பீடு செய்து காட்ட வேண்டுமென்றால், "பார்ப்பன, இந்து மத வெறியர் இரவிவர்மனின் ஓவியங்களைவிட, மேலான உலோகத் தொழில் நுட்பத்தால் உருவாக்கப்பட்ட சிலைகள்" என்று அறிவித்திருந்தால், அதை வரவேற்கலாம். ஒரு கருப்புச்சட்டைக்காரன் அப்படித்தான் அறிவிப் பான். அதை மே 17 தோழர்களிடம் எதிர் பார்ப்பது தவறு என்று புரியவைத்துள்ளனர்.

இந்துக்களை விமர்சிக்கும் பகுத்தறிவாளர்கள், கிறிஸ்தவ மதத்தையோ, இஸ்லாமையோ விமர்சிப்ப தில்லையே ஏன்? என்ற ஆர்.எஸ்.எஸ். ஸின் கேள்வியின் நோக்கத்திற்கும், இந்த அறிவிப்புக்கும் என்ன வேறுபாடு?

## மே 17 ன் துரோகம்

இந்து அமைப்புகள் மிக நேர்மையான எதிரிகளாக "இந்துக்களின் பாரம்பரிய அடையாளங்களை மீட்கவேண்டும்" என்று கூறுகின்றன. மே 17 இயக்கமோ, அந்த இந்துக் கடவுள் சிலைகளைத் தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களாகவும், தமிழர்களின் கலை, அறிவியல் சொத்தாகவும் வரையறுத்து, தமிழர்களின் கழுத்தை அறுக்கிறது.

"7000 சிலைகள் திருடிய கும்பலை கைது செய்! சிலைகளை மீட்டு எடு! தமிழர்களின் கலை மற்றும் அறிவுச் சொத்தினை காத்திடுவோம்."

இதுதான் அவர்களின் தமிழினத்துரோக அறிவிப்பு. தமிழர்கள் கலை, அறிவுச் சொத்து இந்து மதக் கோவில்களிலா உள்ளது? தமிழனுக்கும் இந்து மதத்துக்கும் என்ன தொடர்பு? தமிழர்கள் மத அடிப்படையில் இந்துக்களே அல்ல. ஏதாவது ஒரு மதம் இருந்திருக்கும் என்றால்கூட, தமிழறிஞர் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறுவது போல, 'ஆசீவகம்' வேண்டுமானால் நமது வாழ்வியலாக இருந்திருக்க முடியும். இந்து மதம் எப்படி நமக்குரிய மதமாக இருக்க முடியும்? இந்துமதம் நமக்குரிய மதமே அல்ல எனும்போது, இந்து மதக் கலைகள் எந்த வகையில் தமிழர்களின் கலை ஆக முடியும்?

தமிழர்களின் கலை, அறிவுச்சொத்து, தொல்லியல் சொத்து, தமிழர்களின் பாரம்பரியம் என்று ஏதாவது இருக்குமானால், கீழடியில், அரிக்கமேட்டில், ஆதிச்சநல்லூரில் வேண்டுமானால் இருக்கின்றன. அங்கு மட்டுமல்ல சமணம் மற்றும் புத்த மதக் கோவில்களிலும் இருக்கின்றன. மதுரை மாவட்டம் யானைமலை, கீழவளவு, கீழக்குயில்குடி, அரிட்டாபட்டி, புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல், தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை போன்ற ஏராளமான இடங்களில் சங்க காலத்துக்கும் முந்தைய ஓவியங்கள், சிற்பங்கள் உள்ளன. கி.பி. 1 ஆம் நூற்றாண்டுக்கும் முந்தைய சிற்பங்கள், வரலாற்றுச் சான்றுகள் இங்குள்ளன.

இந்த ஊர்களில் உள்ள பல இடங்கள் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் இருந்தாலும் கூட, எந்தப் பராமரிப்பும் இன்றி, பாதுகாப்பும் இன்றி, தமிழர்கள் 'தண்ணி' அடிக்கும் இடங்களாக மாறிச் சிதைந்து போயுள்ளன. அவைதான் தமிழர்களின் அறிவு, கலை, வரலாற்று, தொல்லியல் அடையாளங்கள். அவற்றை மீட்க இதுவரை மே 17 இயக்கம் அறிவிப்பு வெளியிட்டிருந்தால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

தமிழர்களைத் தேவடியாள் மகன்களாக, தேவடியாள் மகள்களாக அறிவிக்கும் இந்து மதத்தின் சிலைகளைத் தமிழர்களின் அறிவுச் சொத்தாக ஒரு அமைப்பு அறிவிக்கிறதென்றால், அது நாடி நரம்பெல்லாம் பார்ப்பன ஆதிக்கவெறி பிடித்த அமைப்பாகவோ, அல்லது பார்ப்பனர்களின் பாதந்தாங்கும் அமைப்பாகவோதான் இருக்க முடியும்.

கடத்திப் போகப்பட்ட இந்து மதக் கடவுள்களையும், அந்த இந்து மதக்கடவுள்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் மிகச்சிறந்த அடிமைகளாக வாழ்ந்த தமிழ்நாட்டு மன்னர் சிலைகளையும் மீட்கும் பிரச்சனையில் திராவிடர் இயக்கங்களும் களமிறங்கியுள்ளன. அந்த அமைப்புகளின் நிலையும், மே 17 என்ற பார்ப்பன ஆதரவு அமைப்பின் நிலையும் வெவ்வேறாக இருக்கிறது.

## உண்மையான பெரியார் இயக்கங்களின் பார்வை

திராவிடர் கழகம், இந்துச் சிலைகள் மீட்புப் பிரச்சனையின் உள்அரசியலாக, இந்து அறநிலையத் துறையையே ஒழிக்கும் முயற்சி நடப்பதை அம்பலப்படுத்தியது. இதற்குப் பின்னணியில் பார்ப்பன லாபி தீவிரமாக இயங்குவதை வெளிஉலகுக்கு அடையாளம் காட்டியுள்ளது. பார்ப்பன, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சேவகராக இயங்கும் பொன்.மாணிக்கவேல் அவர்களை இந்தப் பொறுப்பில் இருந்து நீக்கி, வழக்கை சி.பி.அய் வசம் ஒப்படைக்கக் கோரியுள்ளது.

தந்தை பெரியார் திராவிடர் கழகமும் அதே நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஒரு சிறு மாற்றம் என்னவென்றால், தி.க, பொன்.மாணிக்கவேலுக்குப் பதிலாக சி.பி. அய் விசாரணை கோருகிறது. த.பெ.தி.க.வோ பொன். மாணிக்கவேலை மாற்றி விட்டு, அவருக்குப்பதிலாக தமிழ்நாட்டுக் காவல் துறையிலேயே நல்ல அதிகாரிகளை நியமிக்கக் கோருகிறது. நேர்மையான நீதிபதிகளைக் கொண்டு விசாரணைக்குழுவை அமைக்கக்கோருகிறது.

இந்த இரண்டு அமைப்புகளுமே இந்துச் சிலைகள் என்பவைகளை தமிழர்களின் கலை, அறிவுச் சொத்தாகவோ, பாரம்பரியச் சின்னங்களாகவோ, தொல்லியல் அடையாளங்களாகவோ அறிவிக்கவில்லை. ஒருவேளை அவை மீட்கப் பட்டால்கூட பெரியாரிஸ்ட்டுகளைப் பொறுத்த வரை அந்தச் சிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள உலோகங்களைப் பணமாக மாற்றி, அதை மக்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்றுதான் சிந்திப்பார்கள். அவற்றைக் கலை, அறிவுச் சொத்தாக அறிவித்து, மியூசியங்களில் வைத்து அழகு பார்ப்பதற்கு விரும்பமாட்டார்கள். மிக முக்கியமாக, ஒரு பெரியாரியல் அமைப்பு, இந்து மதக் கடவுள்சிலைகளை தமிழர்களின் அடையாளமாக என்றுமே பேசாது.

## நிறுவனப்படுத்தப்பட்ட இந்து மத அடையாளங்கள்

களவு போன சிலைகள் நமது முன்னோர்கள் வணங்கிய சுடலைமாடன், காத்தவராயன், சாம்பார், வீரமாத்தி, மதுரைவீரன் போன்றவர்களின் சிலைகள் அல்ல. தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களால் திருடப்பட்டவை அனைத்தும் பார்ப்பனக் கடவுள்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட இந்துக் கடவுளர்களின் சிலைகள், அந்த நிறுவன மயப்படுத்தப்பட்ட இந்துமத அடியாள்களின் சிலைகள் தானே ஒழிய, தமிழ்த்தேசியங்கள் உயர்த்திப் பிடிக்கும் குலதெய்வங்களோ, நாட்டார் தெய்வங்களோ அல்ல.

*ஒரு பெரியாரிஸ்ட்டுக்கு, நாட்டார் தெய்வமோ, குலதெய்வமோ, பார்ப்பனக் கடவுளோ எல்லாம் ஒன்றுதான். அனைத்துமே ஜாதியைக் காப்பாற்றுபவைதான். அனைத்துமே அழிக்கப்பட வேண்டியவைதான். அவற்றை எவனோ திருடிப் போய்விட்டால் மகிழ்ச்சிதான். ஆனால், அந்தச் சிலைகளுக்கு உரிய தொகை மக்களுக்கு வந்து விட்டால் போதும். அவ்வளவுதான் நமது நிலை.*

*மே 17 அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன்காந்தியும்கூட, இதேபோன்ற நிலையைத் தான் எடுத்துள்ளார். 2018 ஜூலை 3 ஆம் நாள் தனது முகநூல் பதிவில்,*

"7000 கடவுள்களை விற்க முடிகிற பாஜக கும்பலால் ஒரு நாட்டை விற்பதா கடினம்? கடவுள், கோவில், பக்தி என எல்லாமே நம்மை ஏமாற்றவும், நம்மை அவமானப் படுத்தி அடிமைப்படுத்தவும், நம் காசுகளை கொள்ளை யடிக்கவும் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகளே அன்றி வேறல்ல."

*என்று தெளிவாகக் கூறியுள்ளார். அவராலேயே 'அவமானச் சின்னங்கள்' என்று கூறப்பட்ட கடவுள் சிலைகள் 15 நாட்கள் கழித்து, தமிழர்களின் அறிவு, கலை, தொல்லியல் சொத்துக்களாக மாறியுள்ளன. மாற்றம் இயல் பானதுதான். ஆனால், அதற்கான காரணம் பார்ப்பனக் கருத்தியலுக்கு ஆதரவாக இருக்கும் போது, அதை உறுதியாகக் கண்டிக்க வேண்டியுள்ளது.*

*இந்த மே 17 இயக்கம் மட்டுமல்ல; அனைத்துத் தமிழ்த்தேசிய இயக்கங்களும்,*

"தமிழர்களின் வழிபாட்டுமுறை என்பது, பார்ப்பன நிறுவனமயப்படுத்தப்பட்ட இந்து மதத்திற்கு எதிரானவை"

"நடுகல்லும், வீரக்கல்லும் தான் நாம் வழிபடும் கடவுள்கள், மற்றவை நமக்குரியவை அல்ல.. தமிழர்களின் ஆன்மீகம் என்பது ஆரியத்துக்கு எதிரானது"

"பாவாடைராயன், கருப்புச்சாமி, முனியாண்டி, பொன்னர் சங்கர் போன்றவர்கள்தான் நமக்குத் தெய்வங்கள். ஆணவக்கொலையால் படுகொலை செய்யப்பட்டவர்கள் தான் நமது தெய்வங்கள்"

*என்றெல்லாம் நீட்டிமுழக்கி வந்தன. வருகின்றன. திருடுபோன 7000 சிலைகளின் பட்டியலில் இந்த நடுகற்களும், வீரக்கற்களும் இருக்கின்றனவா? ஒன்றுகூட இல்லையே? எந்த ஊர் மதுரைவீரனையும் எந்தப் பார்ப்பானும் திருடி விற்கவில்லையே? தமிழ்நாட்டைவிட்டு ஓடிப் போனவைகள் எல்லாம் நிறுவனமயப்படுத்தப்பட்ட பார்ப்பன இந்துக்கடவுள் சிலைகள் என்பவை தான். அவை எப்படி தமிழர்களின் கலை, அறிவுச் சொத்துக்களாக மாறின?*

**தமிழர்களின் இழிவுச்சின்னங்கள்**

*இந்தச் சிலைகளைச் செய்த சிற்பிகள் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்களைத் தவிர வேறு எந்தத் தமிழனும் அந்தச் சிலைகளைத் தொடக்கூட முடியாது. பிற்படுத்தப்பட்ட மக்கள் அவற்றைத் தூரத்தில் இருந்து பார்க்க மட்டுமே உரிமை பெற்றவர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் அவற்றைப் பார்க்கக்கூட வாய்ப்பு மறுக்கப் பட்டவர்கள். அவர்களுக்கு கோபுர தரிசனம் தான் கோடிப்புண்ணியம் என்று ஒதுக்கிவிட்டார்கள்.*

*இப்படி, பெரும்பாலான தமிழர்களால், பார்க்க முடியாத, தொடமுடியாத சிலைகள் எந்த வகையில் தமிழர்களின் கலை, அறிவுச் சொத்தாக, தொல்லியல் அடையாளமாக இருக்கமுடியும்? அவை தமிழர்களின் இழிவின் அடையாளங்கள். தமிழர்களுக்குத் தொடர்பில்லாத, தமிழர்களை அடிமைப்படுத்திய பார்ப்பன ஆணவத்தின் அடையாளங்கள். அந்தப் பார்ப்பனர்களுக்கு அடியாட்களாக விளங்கிய தமிழ்மன்னர்களின் அடையாளங்கள்.*

*அவை பார்ப்பனர்களுக்கு வேண்டுமானால், கலை, அறிவுச் சொத்தாக இருக்க முடியும். தமிழர்களைப் பொறுத்தவரை, அந்தச் சிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள உலோகங்களின் எடைக்கு எவ்வளவு மதிப்போ, அவ்வளவுதான் மதிப்பு. இப்படித்தான் நமது தலைவர் நமக்கு வழிகாட்டியுள்ளார்.*

**"சிலை வணக்கந்தான் எல்லாத் தீமைகளுக்கும் பிறப்பிடமாயிருப்பது. நாட்டின் மதிப்பைக் காப்பாற்ற எண்ணமுடைய ஒவ்வொருவனும் கற்சிலைகளைத் தகர்த்து சிலைகளையுருக்கி அவ்வுலோகத்தைக் கொண்டு ஆயுதங்களும் இயந்திரங்களும் செய்விக்க வேண்டும். மத சம்பந்தமாக விடப்பட்ட சொத்துக் களெல்லாம் நாட்டின் நலத்திற்கு உபயோகப் படுத்தப்பட வேண்டும். மடங்களைப் பள்ளிக்கூடங் களாகவும் கல்லூரிகளாகவும் மாற்ற வேண்டும். கோவில்கள் ஆஸ்பத்திரிகளாக வேண்டும்."**

தோழர் பெரியார் - குடி அரசு - 17.02.1929

*மே 17 இயக்கம், நம்காலத்தில், 2018 இல் பேசும் பார்ப்பன - பார்ப்பனிய ஆதிக்கக் கருத்துக்கள் எல்லாம் இப்போதுதான் புதிதாக முளைத் துள்ளவை என்று கருதவேண்டாம். 1931 லேயே, பெரியார் காலத்திலேயே இவர்களைப் போன்ற இந்துமதக் கலை, பண்பாட்டுக் காவலர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரியார் கூறிய மறுமொழி இவர்களுக்கும் பொருந்தும். "கலையும் இலக்கியமும் யாருடைய நன்மைக்காக?" என்ற தலைப்பில் பெரியார் பேசியதைப் பாருங்கள்.*

"கோயில்களைக் குற்றம் சொல்லி, அவற்றில் உள்ள விக்ரகங்களின் பாசங்களை எடுத்துக் காட்டி, இம்மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான உணர்ச்சியை மக்களுக்கு வளர்க்கலாமா என்றும், இந்த பாசத்திற்காக இவ்வளவு பணச் செலவும் நேரச் செலவும் செய்யலாமா என்றும் கேட்டால் ஓவியம் என்னும் நிழலில் புகுந்து கொண்டு "அவைகள் அழிந்தால் இந்திய ஓவியக்கலை அழிந்துவிடும்" என்றும், "சாமி பக்திக்காகத் தாங்கள் கோயில்களைக்

காப்பாற்றுவதில்லை, ஓவியக்கலை அறிவுக்காகக் கோயில்கள் காப்பாற்றப்பட வேண்டும்" என்றும் சொல்லுகின்றார்கள்.

நமது பண்டிதர்களின் ஓவியக் கலையும், காவியக் கலையும் போகின்ற போக்கைப் பார்த்தால், அவர்களுக்கு உள்ள பகுத்தறிவுக் கலை எவ்வளவில் இருக்கின்றது என்பது ஒருவாறு தானாகவே விளங்கும். மக்களுக்கு ஓவியம் வேண்டுமானால், இந்தியக் கோயில் ஓவியமும் இந்துக் கடவுள்கள் ஓவியமும் கடுகளவு அறிவுள்ள மனிதனும் ஒப்ப முடியாத, மதிக்க முடியாத ஓவியங்கள் என்பதோடு, அவை மனிதத் தன்மையும் பகுத்தறிவும் உள்ள மக்களால் உண்டாக்கப்பட்ட ஓவியம் என்று சொல்ல முடியாததான நிலையில் இருப்பதையும் காணலாம்.

எப்படியெனில், இந்திய ஓவியம் என்பது இந்து மத சம்பந்தமான கடவுள், புராணம் ஆகியவைகளைப் பற்றியதைத் தவிர, தனிப்பட்ட இயற்கை அறிவைப் பற்றியது மிக மிக அரிது என்றே சொல்ல வேண்டும். அது மாத்திரமல்லாமல், அவைகளில் இயற்கைக்கு முரண்பட்டவையே 100க்கு 99 ஓவியங்கள் என்றும் சொல்ல வேண்டும்.

சாதாரணமாக மனிதனும் மிருகமும் புணர்வதும், மிருக முகத்துடன் மனிதன் இருப்பதும், மிருகங்கள் பறப்பதும், மிருகங்களின் மீது அளவுக்கு மீறின மக்கள் இருப்பதும், பட்சிகளின் மீது மக்கள் இருப்பதும், மக்கள் பறப்பதும்; 4 கைகளும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அய்ந்து, ஆறு முகங்களும்; சிறிய உருவத்தின் மீது பெரிய உருவங்கள் இருப்பதும், தாமரைப் பூவின் மீது ஒரு பெண் நிற்பதும், இன்னமும் இதைவிட எத்தனையோ பொருத்தமற்ற, சாத்தியமற்றதான உருவங்களே இன்று ஓவியமாகக் கருதப்படுகின்றன.

சாதாரணமாக, மேல் நாட்டு ஓவியங்களைப் பார்த்தால் இது ஓவியமா, உண்மைத் தோற்றமா என்று மருளும்படியாகவும், அவைகளுடைய சாயல் முதலியவைகளிலிருந்தே குணம், காலம், இடம், நடவடிக்கை முதலியவைகள் தெரிந்து கொள்ளும்படியாகவும், அவைகள் பிரத்தியட்சமாக இயங்கிக் கொண்டிருப்பது போலவும், எவ்வளவோ அருமையான காரியங்கள் வெகு எளிதில் மிகச் சாதாரண தன்மையில் அறியும்படியாகவும், நாமே பார்த்த மாத்திரத்தில் சுலபத்தில் பழகிக் கொள்ளும்படியாகவும் இருப்பதைக் காணலாம்.

ஆகவே, அப்படிப்பட்ட அருமையான ஓவியங்களையும், சித்திரங்களையும், புதுமை களையும் விட்டு விட்டு அநாகரிகமும், காட்டு மிராண்டித்தனமுமான, மிருகப்பிராயமும் கொண்ட தான உருவங்களை வைத்துக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவைகளுக்குப் பணம், காசு, நேரம் ஆகியவை செலவு செய்து, கீழே விழுந்து அவைகளிடம் பக்தியையும் காட்டிக் கொண்டு, "ஓவியக் கலைக்காக அக்கலையைக் காப்பாற்றுவதற்காக அவைகளிடம் இப்படிச் செய்கின்றோம்" என்றால், இது பகுத்தறிவும் யோக்கியக் குணமும் அடைந்த மனிதர் என்பவர்களின் செய்கையாகுமா பேச்சாகுமா என்று கேட்கின்றோம்."

– தோழர் பெரியார், குடி அரசு 26.4.1931

*இதைவிடத் தெளிவாக நாம் எதையும் புதிதாகக் கூறமுடியாது. புத்தருக்கும் முந்தைய நூற்றாண்டுகளில் இருந்தே, நமது தலைவர்களைப் புகழ்ந்துகொண்டே, அந்தத் தலைவர்களின் தத்துவங்களை அழிக்கும் போக்கு தொடங்கி விட்டது. "பெரியார் ஒழிக" என்று மட்டுமல்ல, "பெரியார் வாழ்க" என்று வாயளவில் பேசியும்கூட, பெரியாரியலை அழிக்கும் நுட்பமான பார்ப்பனச் சூழ்ச்சிகள் நடக்கும் என வரலாறு நமக்கு அறிவுறுத்தியுள்ளது. மே 17 அப்படிப்பட்ட இயக்கம் இல்லை என்பதை அவர்களது செயல்பாடுகள் தான் நமக்குப் புரியவைக்கமுடியும்.*

**09.08.2018 அன்று
மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர்
தோழர் திருமுருகன், தமிழ்நாடு அரசால்
கைது செய்யப்பட்டுள்ளார்.
அரசின் இந்தப் போக்கு
மிகவும் தவறானது.
கருத்துரிமைக்கு எதிரானது.
அவரை உடனடியாக
விடுதலைசெய்யவேண்டும்.**



## நன்கொடை

| | |
|---|---|
| ஆசிரியர் பழனிவேல், பெண்ணாடம் | -2000.00 |
| தியாகராசன், பொறியாளர், விருதுநகர் | - 500.00 |
| முத்துக்கிருட்டிணன், திருப்பூர் | - 500.00 |
| வழக்கறிஞர் இராஜகுரு, சென்னை | - 500.00 |
| பொன்னுச்சாமி, திருப்பூர் | - 500.00 |
| கொண்டசாமி, திருப்பூர் | - 100.00 |

நன்கொடை வழங்கிய தோழர்களுக்கு மிக்க நன்றி.



# விடுதலைவெளியின்
# கோவா பயணம்

மீண்டும் மீண்டும் கொடைக்கானல், தாண்டிக்குடி, மூணாறு, திருமூர்த்தி மலை, ஊட்டி, ஏற்காடு, கன்னியாகுமரி என்றே சென்று கொண்டிருக்க வேண்டாம். இந்த ஆண்டு கொஞ்சம் மாற்றலாம் என்று 'கோவா' பயணத்தைத் திட்டமிட்டோம்.

கோவா பயணத்தை முழுக்க முழுக்க திருச்சி எட்வினா, புரட்சி, தாராபுரம் பூங்கொடி ஆகிய மூவரும் திட்டமிட்டனர். வழக்கமாகத் திட்டமிடலில் ஈடுபடும் எந்த ஆணும் இந்தப் பயணத்தின் திட்டமிடலில் அனுமதிக்கப்படவில்லை. இரயில் பயணம், தங்குமிடம், உணவு, பார்க்க வேண்டிய இடங்கள், உள்ளூர் பயணத்திற்கான வாகனம் என அனைத்தையும் பெண்கள் முடிவெடுத்துச் செயல் படுத்தினர்.

விடுதலைவெளி என்பதன் பொருளுக்கு ஏற்ற படி, கோவா நாட்களில் அவரவருக்கு விருப்பமான உணவு, விருப்பமான உடை, சின்னச் சின்ன ஆசைகள், பெரிய கனவுகள் எனப் பலவிதங்களிலும் கட்டுக்கள் தளர்த்தி இயல்பாய்ப் பயணித்தனர். 5 வயதுப் பெண்குழந்தை முதல் 60 வயதுப் பெண் வரை பங்கேற்ற இப்பயணத்தில் குழந்தைகளை ஆண்கள்தான் கவனித்துக்கொண்டனர். சுமந்தும் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலா வழிகாட்டிகளும், தங்குமிடத்தில் இருந்த மற்றவர்களும் பயணக்குழுவை வியப்புடன் பார்த்தனர். 'நீங்கள் அனைவரும் ஒரே நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்களா?' என்றனர். 'இல்லை' என்றோம். ஒரே மதத்தினரா? ஒரே ஜாதியா? என்றெல்லாம் கேட்டனர். வழக்கமாக அவர்கள் சந்திக்கும் எல்லாச் சுற்றுலாப் பயணக்குழுக்களில் இருந்தும் விடுதலைவெளி வேறுபட்டிருந்ததைக் கவனித்து தான் இக்கேள்விகளைக் கேட்டனர். "ஒரே குடும்பம்" என்றோம். "உருவ அமைப்புகள் அப்படிக் காட்டவில்லையே" என்றனர். "ஒரே கொள்கைக் குடும்பம்" என்றோம். இயல்பாக, ஒரு சுற்றுலாவாக, ஒரு சிறுகுழுவாக நாம் சென்றாலும், இந்த சமுதாயத்தில் இது ஒரு வியப்பாகத்தான் பார்க்கப் படுகிறது.

இந்துச் சமுதாயக் குடும்பங்களுக்கும், இரத்தச் சொந்தங்களுக்கும் மாற்றாக, ஜாதி, மதம் கடந்த குடும்பங்களின் உறவுகள் பெருக வேண்டும். கொள்கைச் சொந்தங்கள் வளரவேண்டும் என்ற எமது நோக்கம் கவனிக்கப்படுகிறது என்ற அளவில் மகிழ்ந்தோம்.

ஆண்கள் திட்டமிடும் கோவா பயணத்தில் பீச், பார் இந்த இரண்டைத் தவிர வேறு இடங்களுக்கு நேரம் இருக்காது. பெண்களின் விடுதலைவெளியானது, கடற்கரைகள், கோவா மக்கள் மட்டுமே சென்றிருக்கக்கூடிய மலைப்

பகுதிகளில் மலையேற்றம், அருவிக் குளியல், கோவா செல்லும் சுற்றுலாவாசிகள் பெரும்பாலும் சென்றிராத சலீம்அலி பறவைகள் சரணாலயம், கப்பல் பயணம் என பல்வேறு புதிய இடங்களுக்கும் சென்று வந்தது.

பொதுவாக கோவா பயணம் என்றால் அக்டோபர் தொடங்கி பிப்ரவரி இறுதி வரை என்பதுதான் சீசன். ஜூன், ஜூலை மாதங்களில் கடும் மழை இருக்கும். கோவாவின் மண்ணின் மைந்தர்களைத் தவிர மற்ற வணிகர்கள் சொந்த ஊருக்குச் சென்றுவிடுவார்கள். விடுதலைவெளி இந்தக் கடும் மழை மாதங்களைத் தேர்வு செய்தது மிகச் சிறந்த வாய்ப்பாக இருந்தது. "சட்டென்று மாறும் வானிலை" என்ற வரிகளுக்குச் சான்றாக - நொடிக்கு நொடி மழையும், வெயிலும், குளிரும், வியர்வையும், கருமேகமும், வெண்மேகமும் மாறி மாறி வந்துபோயின. உண்மையில் கோவா பயணத்திற்கு உரிய காலம் ஜூன் ஆகஸ்ட் வரை தான் என்பது உறுதி.

விடுதலைவெளி கடந்த 2011 ஆம் ஆண்டி லிருந்து தொடர்ச்சியாகப் பெண்களுக்கான சுற்றுலாவை நடத்திவருகிறது. பெண்கள் மட்டு மல்ல, அவர்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள ஆண்களும் பங்கேற்கும் குடும்பச் சுற்றுலாக்களாக அவை நடைபெற்றன. விடுதலை வெளி பயணங்களை நடத்தும் காட்டாறுகுழு தோழர்கள் பொருளாதாரரீதியில் எளியவர்கள் தான். ஆனால், ஆண்டு வருமானத்தில் பாதியளவுக்கு மேல் சுற்றுலாக்களுக்குச் செலவிடுகிறோம். ஆண்டுக்கு இரண்டு முறை இந்தப் பயணங்கள் நடக்கின்றன. குழுவாக மட்டுமல்லாமல், குடும்பங்கள் தனித்தனியாக அவ்வப்போது மாதம் ஒருமுறை சுற்றுலா செல்லும் தோழர்களும் இருக்கின்றனர்.

குடும்பச் சுற்றுலாக்களைப் போல, குழந்தைகள் வழிகாட்டு முகாம்களையும் 2015 லிருந்து நடத்தி வருகிறோம். இந்த ஆண்டு குழந்தைகள் முகாம் கொடைக்கானலில் நடை பெற்றது. இவை, இயற்கையை இரசிப்பதற்கு மட்டு மல்ல, வாழ்க்கையை இரசிப்பதற்கும், ஒரு மாற்றுப் பண்பாட்டு வடிவமாகவும், உலகைப் பற்றிய கல்விக்காகவும், கல்வியைப் பற்றிய புரிதலுக்காகவும் நடக்கின்றன.

கோவா, ஐந்து நாள் பயணம். செலவு அதிகம், விடுமுறை இல்லாமை போன்றவற்றால் அதிகத் தோழர்கள் வரஇயலவில்லை. இருந்தாலும் பெரும்பானோர் பங்கேற்கும் வகையில் வரும் டிசம்பரில் தேக்கடி சுற்றுலா திட்டமிடப்படுகிறது. அநேகமாக டிசம்பர் 22 முதல் 25 வரை இருக்கும். இப்போதே சேமிக்கத் தொடங்குங்கள். காட்டாறு குழு ஏற்கனவே திட்டமிட்ட "உடைப்போம் சமையலறைகளை" டிசம்பர் 24 இல் நடக்கும். அதைப் பொறுத்து சுற்றுலாவின் நாட்கள் மாறும். உறுதியான செய்திகள் விரைவில் வரும்.



கணியூர் தமிழ்ச்செல்வன்

# காதல், திருமணம், கற்பு ஆகிய மூடநம்பிக்கைகளை உடைக்கும்




ப்யார் பிரேமா காதல்... இந்தப் படத்தின் தலைப்பைப் பார்க்கிற பொழுது, இது ஒரு காதல் படம் என்பது போல் தோன்றும். ஆனால், இப்படம் இதுவரை தமிழ் சினிமாவில், காதல் என்ற வார்த்தையைக் கொண்டு வெளிவந்த மற்றும் காதல் பற்றிய படங்களிலிருந்து முற்றிலும் வேறான எதார்த்தமான காட்சியமைப்புகளுடன் வெளி வந்துள்ள மிகச் சிறந்த படமாகும்.

நீங்கள் நினைக்கலாம், அப்படி என்ன வேறு பாடு என்று? எப்படி என்றால், இது வரை நம் தமிழ் சினிமா விதைத்த காதல், கற்பு, திருமணம் பற்றிய மூடநம்பிக்கைகளுக்கு மாற்றாகும். இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொன்னால், பெரியார் அவர்கள் காண விரும்பிய பெண்களின் வாழ்க்கையை இந்தப் படம் கதாநாயகியின் கதாப்பாத்திரத்தில் நிலை நிறுத்தியுள்ளது.

அப்படியா! ஆம், படத்தின் முதல் காட்சி யிலேயே அலுவலகத்தில் பணிபுரியும் கதாநாயகன் தனது வேலைகளைச் சரியாகச் செய்யாமல், அருகிலுள்ள ஜன்னலின் வழியாகப் பக்கத்து அலுவலகத்தில் வேலை செய்யும் கதாநாயகியை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருப்பதி லிருந்து கதை தொடங்குகிறது.

பிறகு திடீரென்று ஒரு நாள் தான் தூரத்தி லிருந்து பார்த்து மகிழ்ந்த பெண் தன் இருக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வேலை செய்வதைக் கண்டு தன் வாழ்நாள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று விடுகிறான். ஆனால் அந்தப் பெண்ணோ இயல்பாக ‘வணக்கம்’ சொல்வதிலிருந்து தனது வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருக்கிறார். இதனை யடுத்து தன் சக ஊழியரான கதாநாயகனுக்கு ஃபோன் செய்து உரையாடுகிறார்.

ஆனால் கதாநாயகன் தன் வீட்டில் இருக்கும் போது ஒரு பெண்ணிடம் பெற்றோர்கள்முன் பேச அஞ்சுகிறான். ஆனால் அந்தப்பெண் ஆண் நண்பர் களிடம் தன் அப்பா முன்னும் இயல்பாகப் பழகு கிறார். இதற்குக் காரணம் இருவரின் பெற்றோர் களினுடைய வாழ்க்கை முறையும் மற்றும் அவர்களின் குழந்தை வளர்ப்பு பற்றிய நிலையையும் இது உணர்த்துகிறது.

இதற்கடுத்து அவர்கள் நட்பின் பழக்கத்தில் ஓரிடத்தில் உணர்ச்சி வயப்பட்டு உடலுறவில் ஈடுபடுகிறார்கள். அப்பொழுது கதாநாயகன் கதா நாயகியிடம் *“I love you”* என்று முதன்முறையாகச் சொல்லுகிறான். அதற்கு அந்தக் கதாநாயகி சொல்லும் மறுமொழி தான் மிக முக்கியமான ஒரு கட்டமாகும். அந்த மறுமொழியில் அவள் “நீ இப்படிச் சொல்வாய் என்று நான் எதிர்பார்க்க வில்லை, ஏதோ உணர்ச்சி வேகத்தில் நமக்குள் இவ்வாறு நடந்துவிட்டது. *I like your innocence. But, I'm not in love with you*”.

இதைக் கேட்ட மறுகணமே கதாநாயகன் அந்த இடத்தை விட்டுக் கோபத்துடன் வெளியேறுகிறான். அதோடு மட்டுமல்லாமல் அந்தப் பெண்ணின் கேரக்டரைப்பற்றித் தனது நெருங்கிய நண்பர் களிடம் தவறாக விமர்சிக்கிறான். இந்தக் காட்சி முழுக்க முழுக்க நமது சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கிற ஆணாதிக்கச் சிந்தினையின் வெளிப் பாடாகவே இருக்கிறது.

இதற்குப் பிறகும் கூட அந்த பெண், அவனுடன் நட்பு பாராட்டுவதையே விரும்புகிறாள். பிறகு ஒரு கட்டத்தில் அவன் மீது அவளுக்குக் காதல் ஏற்படுகிறது. அதை அவள் வெளிப்படுத்துவதற்கு முன் தனது அலுவலக பார்ட்டியில் குடித்துவிட்டு தங்களுக்குள் நடந்தவற்றை அனைத்து அலுவலக நண்பர்களுக்கு முன் கோபத்தில் உளறிவிடுகிறான். அதற்கு மறுநாள் அந்தப் பெண் அலுவலகத்திற்குள் நுழைந்து இயல்பாக ‘குட்மார்னிங்’ சொல்கிறார்.

ஆனால் அந்த நேரத்தில் அந்த அலுவலகத்தில் இருக்கிற மொத்த ஆண்களும், அவளைப் பார்த்துத் திகைக்கும் காட்சி நமது சமுதாயத்தில் வழிவழியாக வந்த ஆணாதிக்கத்தின் பார்வையில், திருமண மாகாத ஒரு பெண்ணின் கற்பைப் பற்றிய மூடப் பார்வையாகும். இந்த இடத்தில் இயக்குனர் பெரியார் சொன்ன பெண்ணை அடிமைப்படுத்தும் ‘கற்பு’ என்ற கருத்தியலை வென்ற பெண்ணாகக் கதாநாயகியைக் காட்டியிருக்கிறார்.




இதற்கடுத்து தனது காதலை அவனிடம் வெளிப்படுத்தும் போது பெரியார் சொன்ன பழமை வாதத் திருமணம் என்ற நடைமுறைக்குள் உடனடியாகச் செல்லாமல் சேர்ந்து வாழுதல் *(Live in relationship)* என்ற முறையில் நம் வாழ்க்கையை ஆரம்பிப்போம் என்று சொல்வது மிகச் சிறப்பாகும்.

அதன்பின் அவர்கள் *Live in relationship*-இல் வாழும் போது கதாநாயகன் தனது வீட்டுச் சூழ்நிலையைச் சொல்லி திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தும்போது அவள் தனது எதிர்காலக் கனவைச் சுட்டிக்காட்டியும் அந்த இலட்சியத்தை அடையும் வரை திருமணம் செய்ய மாட்டேன் என்று சொல்வதும் - நம் சமுதாயத்தில் வெறும் திருமண பந்தம் என்பதற்காகத் தான் கற்ற கல்வி, வேலை என அனைத்தையும் விட்டுவிட்டுக் குடும்ப வேலைக்காரியாக மாறும் முறைக்கு சரியான சாட்டையடி!

மேலும், அந்தப் பெண் குழந்தை பெற்றுக் கொள்வது எவ்வாறு பெண்ணின் இலட்சியத்தைச் சிதைக்கிறது என்பதைப் பற்றி விளக்கும் காட்சி பெரியார் பார்வையில் தமிழ் சினிமாவின் முதல் பரிணாமம். இப்போது இந்தப்படம் *"Live in relationship"* பற்றிக்கூறுவதைப் பெரியார் பல ஆண்டுகளுக்கு முன்பே பின்வருமாறு கூறியுள்ளார்.





"நான் 1931-இல் ஜெர்மனி சென்றிருந்தேன். அப்போது ஒருவீட்டில் தங்கியிருந்தேன். அந்த வீட்டுக்காரர்களை விசாரித்தேன். அவர்கள் தங்களை 'PROPOSED HUSBAND AND WIFE' என்றார்கள். அப்படி என்றால் என்ன அர்த்தம்? என்று கேட்டேன். நாங்கள் உண்மையான கணவன் - மனைவியாக, திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ளப் பயிற்சி பெறுகிறோம் என்றார்கள். எவ்வளவு காலமாக? என்று கேட்டேன். எட்டுமாதமாக என்றார்கள். எப்படி இருக்கிறது பாருங்கள்? அந்தநாடு முன்னேறுமா? பதிவிரதம் பேசி, பெண்களை அடிமையாக்கும் இந்தநாடு முன்னேறுமா?"

*- தோழர் பெரியார்*

*1973 பெங்களூர் சொற்பொழிவு*

காதல், கற்பு, திருமணம், குழந்தை பெறுதல் போன்ற பலவற்றையும் விவாதிக்கும் இப்படம், தமிழ்த் திரையுலகின் வழக்கப்படி, இவை அனைத்தையும் தவறு என்கிற ரீதியில் முடிக்கப்பட்டிருப்பது தேவையற்றது. இப்படி, புரட்சிகரமாகப் பேசுவதும், இறுதியில் கல்லானாலும் கணவன் என்பது போல, காதலித்தவனுடன் அல்லது முதலில் உறவு கொண்டவனுடன் வாழ்வைப் பகிர்ந்து கொள்வது என்பது போன்ற முடிவுகள் பாலசந்தர் படங்களைத்தான் நினைவூட்டுகின்றன. தரமணி கூட இப்படித்தான் முடிக்கப்பட்டது. இப்படத்தின் கதாநாயகி, இரண்டாவதாக, ஹரீஷ் கல்யான் தவிர வேறு எவருடனாவது இணைந்து தனது இலட்சியங்களையும் அடைந்து வாழ்வது போல படத்தை முடித்திருக்கலாம். அதற்கேற்ற வலுவான திரைக்கரை இருந்தும் இயக்குநர் அதில் தவறிவிட்டார். இருந்தாலும், பெண்விடுதலைக் கருத்துக்கள் பற்றி இளைய சமுதாயத்திடம் ஒரு விவாதத்தைத் தொடங்கிய இயக்குநர் இளன் அவர்களுக்கு வாழ்த்துகள்.

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com